Tamil

Private circulation only

# THE SPOKEN WORD

## உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# தேவதூதர்களும் பிசாசுகளும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# தேவதூதர்கள்

Tamil

Private circulation only

# THE SPOKEN WORD

## உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# தேவதூதர்களும் பிசாசுகளும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# இந்தக் கட்டிடத்தில் லேகியோன் கணக்கில் தூதர்கள் இருக்கிறார்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# *செய்தி:* **பிதாவை எங்களுக்குக் காண்பியும்**, ஜூன் 25, 1955

----------

14. இப்பொழுது, நாம் தேவனை நோக்கிப் பார்ப்போம். நிச்சயமாகவே, அவர் இருக்கிறார் என்று நாம் சொல்லுகிற வண்ணமாக, தேவன் உண்மையா யிருந்தால், ஏதோவொன்று அவரை அறிவிக்க வேண்டும். **நம்மால் அப்படியே நம்முடைய கண்களைத் திறக்க முடியுமானால், உங்களால் தேவனைக் காண முடியும்.**

15. இப்பொழுது, ... போன்று, எலிசா தோத்தா னில் இருந்தபோது, கேயாசி என்று அழைக்கப்பட்ட ஒரு ஊழியக்காரனையும் தன்னோடு வைத்திருந்தான். கேயாசி தரிசனங்களைக் கண்டதில்லை, ஆனால் எலிசா தரிசனங்களைக் கண்டான். ***அவன் தன்னு டைய வீட்டில் இருந்தபடியே, சீரியாவின் இராஜா என்னச் செய்யப் போகிறான் என்பதை அறிந்தவனாயிருந்தான்.***

16. எனவே ஒருநாள் அவர்கள்... ஒரு இரவில், அவர்கள் தோத்தானில் உறங்கினார்கள், கேயாசி அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து, வெளியே

வந்தபோது, சீரிய இராணுவங்கள் எல்லாம் பட்டணத்தை சுற்றி வளைத்திருந்தன. உடனே அவன் உள்ளே ஓடிச்சென்று, "பட்டணம் ஒவ்வொரு பக்கத்திலும் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது" என்றான்.

**ஆனால் தீர்க்கதரிசியோ, உணர்ச்சிவசப்படாமல் சாந்தமாகவும், அமைதியாகவும், "அவர்களோடிருப்பவர்களைப் பார்க்கிலும் நம்மோடியிருக்கிறவர்கள் அதிகம்" என்றான்.**

அவன் சுற்றிலும் நோக்கிப் பார்த்தான், கேயாசி அவ்வாறு சுற்றிலும் பார்த்த போது, எதையும் அவனால் காண முடியவில்லை. எலிசா தன்னுடைய கரங்களை முன்னே நீட்டி (put forth), "தேவனே, இந்த மனிதனுடைய கண்களைத் திறந்தருளும்" என்றான்.

17. **ஆவிக்குரிய உலகத்தைக் காணும்படி அவனுடைய கண்கள் திறக்கப்பட்ட போது, அந்த வயதான தீர்க்கதரிசியைச் சுற்றிலும் எல்லா திசையிலும் தூதர்கள் இருந்தார்கள்.** ***அந்தமலைகள் தூதர்களைக் கொண்ட அக்கினிமயமான இரதங்களால் கொழுந்து விட்டு எரிகிறதாய் இருந்தது.*** பாருங்கள், **இப்பொழுது சரியாக இங்கேயே ஒரு உலகம் இருக்கிறது; இந்தக்**

கட்டிடத்தில் லேகியோன் கணக்கில் தூதர்கள் இருக்கிறார்கள்.

சங்கீதங்களில், தேவனுடைய தூதர்கள் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங் குகிறார்கள் என்று தாவீது மூலமாக இயேசு கூறியுள்ளார்.

18. **எனவே இங்கே தேவனுக்குப் பயப்படு கிற விசுவாசிகளை நோக்கிப் பாருங்கள், எனவே தான் தூதர்கள் எல்லாவிடங்களிலும் இருக்கிறார்கள்.** இப்பொழுது, உங்களால் அப்படியே தேவனை ஆராதிக்க முடியுமானால், நம்முடைய கண்களைத் திறந்து, நம்மைச் சுற்றி லும் எல்லாவிடங்களிலும் தேவன் இருக்கிறார் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

★★★★★



# நீங்கள் எங்கேயிருந்தாலும், தேவ தூதர்கள் உங்களுடனே கூட வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நினைவிருக்கட்டும்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

*செய்தி:* **செல்வாக்கு**, ஆகஸ்டு 3, 1963 மாலை

81. இயேசு, "**இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடி யிருந்தாலும், நான் அவர்கள் நடுவிலே இருப்பேன்**" என்றார். அப்படியானால் அது நாம் காணக்கூடாத, நம்முடைய ஐந்து புலன்கள் தொடர்பு கொள்ளாத ஒரு உலகத்தில் அவரை வரும்படி செய்கிறது. ***இயேசு கிறிஸ்து இங்கே பிரசன்னமா யிருக்கிறார். நம்மால் அதை உணர முடியுமானால்!***

82. மேலும், இங்கே மட்டுமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போதும், நீங்கள் எங்கே இருந்தாலும், **விசு வாசிகள் என்றும் கர்த்தருக்குப் பயப்படுகிற வர்கள் என்றும் உரிமை கொண்டாடி, (அதை வெளிப்படையாகத் தெரிவிக்கிற) நீங்கள் எங்கேயிருந்தாலும், தேவ தூதர்கள் உங்க**

**ளுடனே கூட வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நினைவிருக்கட்டும். நீங்கள் செய் கிற யாவற்றையும், உங்கள் மனதின் வழியாகக் கடந்து செல்கிற ஒவ்வொரு நினைவையும் அவர்கள் கவனிக்கிறார் கள், உங்களைக் குறித்த எல்லாவற்றையும் அவர்கள் அறிவார்கள். ஆகையால், நாம் அதைக் குறித்த உணர்வுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.**

83. அதைக் குறித்த உணர்வு நமக்கு இல்லை என்றால், நீங்கள் எந்த விதமாகவும் நடந்து கொள் வீர்கள். எனவே பெரும்பாலும் இன்று ஜனங்கள், அநேக ஜனங்கள் கர்த்தராகிய இயேசுவின் பிரசன் னத்தைக் குறித்த உணர்வில்லாதவர்களாய் இருக்கிறார் கள், இப்பொழுது நாம் தொடர்ந்து செய்து கொண் டிருக்கிற, இந்த சரியல்லாத காரியங்களை (அவர்கள்) நாம் கொண்டிருப்பதற்கு அதுதான் காரணம்.

★★★★★

# அவர்கள் பாளையமிறங்கி, சரியாக உங்கள் பக்கத்திலேயே இருந்து, எல்லா நேரமும் உங்களை காவல் காக்கிறார்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

செய்தி: இந்த மலையைப் பார்த்துப் பேசு, நவம்பர் 23, 1959, பத்தி எண் 6

---

நிச்சயமாக, ஒவ்வொரு இரவும், பரிசுத்த ஆவியானவர் இங்கேயிருக்கிறார். நீங்கள் எங்கே போனாலும், அவர் எப்போதுமே அங்கேயிருக்கிறார். நீங்கள் - நீங்கள் ஒருபோதும் அவரை விட்டு விலகிப் போகவே மாட்டீர்கள். தாவீது தன்னுடைய படுக்கையை எங்கு போட்டாலும் காரியமில்லை, தேவன் அங்கே இருந்ததாக அவன் கூறினான். ஏனென்றால் தேவதூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளையமிறங்குகிறார்கள். சற்று எண்ணிப் பாருங்கள், அவர்கள் பாளையமிறங்கி, சரியாக உங்கள் பக்கத்திலேயே இருந்து, எல்லா நேரமும் உங்களை காவல் காக்கிறார்கள்.

★★★★★

## சங்கீதம் 34:7

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.

The angel of the LORD encampeth round about them that fear him, and delivereth them.

★★★★★

'**encampeth**' (encamp) என்ற ஆங்கில வார்த்தைக்கு சில அர்த்தங்கள்:

1. **பாளயமிறங்குதல்**
2. முகாமிடுவது, குறிப்பாக இராணுவம் முகாமிடுதல்
3. **சேனை பாளயமடித்து இறங்குதல்**
4. கூடாரங்களைப் போட்டு இறங்குதல்
5. **பாளயத்தில் தங்கி வசித்தல்**
6. படை தங்கும் பாசறையில் வசித்தல்

# அவர்கள் திரும்ப பரலோகத்திற்கு போவதில்லை; அவர்கள் அங்கேயே முகாமிடுகிறார்கள்







சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

102. நாம் ஜெபிப்பதற்கு முன்பாக, இன்னும் ஒருவிசை. தங்களுடைய கரங்களை உயர்த்தியிராமல், இந்த ஜெபத்தில் நினைவுகூரப்பட விரும்புகிற யாராவது அங்கேயிருப்பார்களானால், உங்கள் கரத்தை மேலே உயர்த்துவீர்களா. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சரி. சரி. மகனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. இப்பொழுது, அவர் உங்களைக் காண்கிறார். **சரியாக இந்தக் காலையில், அங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறது**.

103. நீங்கள் என்னுடைய வார்த்தைகளைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். கனத்தின் மூலமாக வும், அன்பின் மூலமாகவும் நீங்கள் என்னை வகைப்படுத்துவீர்களானால், நீங்கள் அவ்வாறு கூறு வீர்களானால், நான் தேவனுடைய ஞானதிஷ்டிக்காரன் என்று நீங்கள் என்னை வகைப்படுத்தியிருப்பீர்களா

னால், **இது பரலோகத்திலுள்ள புஸ்தகங்களில் இருக்கிறது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். அவர் பிரசன்னமாயிருக்கிறார். காணக்கூடாத உலகமானது எல்லா நேரமும் சரியாக உங்களுடனே கூட இருக்கிறது** என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளும் இடத்தில் ஜீவிக்க உங்களுக்கு விருப்பமிருக்காதா? நீங்கள் இங்கே வெளியே நடந்து வந்து, **உங்கள் காரில் ஏறும்போது, தூதர்கள் உங்கள் பக்கத்தில் தங்கள் இடங்களை எடுத்துக் கொள்கிறார்கள்** என்பதை உணரும்போது. நீங்கள், அதோ அங்கே உங்களிடம் மிகவும் அன்பற்ற முறையில் கடுமையாக நடந்து கொள்ளும் அந்த மனிதனிடம் நடந்து போகும்போது, பரிசுத்த ஆவியானவர் சரியாக உங்களுக்கு மேலாக நின்று கொண்டிருக்கிறார், **அப்போது தூதர்கள் உங்களைச் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் சூழ்ந்திருக்கிறார்கள்** (all around).

"அது சரிதானா, சகோதரன் பிரன்ஹாமே?"

104. வேதாகமம் அவ்வாறு கூறுகிறது. "**தேவ தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் சூழ்ந்து**

**கொள்கிறார்கள், பாளயமிறங்குகிறார்கள்."** அவர்கள் திரும்ப பரலோகத்திற்கு போவ தில்லை; அவர்கள் அங்கேயே முகாமிடு கிறார்கள். உங்கள் ஜீவியப் பிரயாணம் முழுவதும் ஆரம்பம் முதல் முடிவு மட்டுமாக **உங்களை விழித்திருந்து காவல் காக்கும் படியான வேலைக்காக அவர்கள் அனுப் பப்பட்டிருக்கிறார்கள்.** ***ஓ, அது அற்புத மாக இல்லையா?***

★★★★★



# நம்மைக் காவல் காத்து பாதுகாக்கும்படியாக தேவன் தமது தூதர்களை விடுகிறார்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: நியாயப்பிரமாணம் ஒரு நிழலை உடைதாய் இருக்கிறது, ஜூன் 21, 1956

88. இன்றிரவும், அந்தவிதமாகத்தான் அது இருக்கிறது. **நம்மைக் காவல் காத்து பாது காக்கும்படியாக தேவன் தமது தூதர் களை விடுகிறார். "தேவனுடைய தூதர் கள்... சூழப் பாளயமிறங்குகிறார்கள்." அவர்கள் திரும்பிப் போவதும் வருவதுமாக** (back and forth) **இருப்பதில்லை. அவர்கள் இங்கேயே தங்கியிருக்கிறார்கள்.** எனக்கு அது பிடிக்கும். "**தேவனுடைய தூதர்கள் அவ ருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளய மிறங்குகிறார்கள்.**"

காபிரியேல், "ஆனால், கர்த்தாவே, இந்த நேரம் எல்லாம் நீர் எங்கேயிருக்கப் போகிறீர்?" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. ஊ.

"நான் வரவேற்கும் முனையில் (receiving end), மறு முனையில் இருக்கப் போகிறேன்." அது அங்கே போய்ச் சேரும்போது, அதை வரவேற்கும்படியாக அவர் அங்கே இருப்பார்.

89. இன்றிரவு, அவர் அங்கேதான் நின்று கொண்டிருக்கிறார், வரவேற்கும் முனையில். அவர் தம்முடைய பிள்ளைகளை வரவேற்கும்படியாக, மகிமையின் நுழைவாயிலில், வரவேற்கும் முனையில் நின்று கொண்டிருக்கிறார். ஏதோவொரு நாளில், வாழ்க்கை முடியும்போது, அவர் கீழே நீட்டி, அந்தப் பரிசுத்த பெரும்பாதையின் முனையை தமது கரத்தைச் சுற்றிலும் மடித்து, அதை ஒரு பெரிய இழுப்பாக இழுப்பார். அவர் அவ்வாறு செய்யும்போது, அவள் இங்கே உடைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து, அவர் ஒவ்வொரு பரிசுத்தவானையும் மறுபடியுமாக மேலே நித்தியத்தின் மண்டலத்திற்குள் திரும்ப தூக்கிக் கொள்வார், அவள் காலங்களினூடாக உருண்டு போய் விடுவாள். அவர் வரவேற்கும் முனையில் (receiving end) இருக்கிறார்.

90. நீங்கள் எதைக் குறித்து பயப்படுகிறீர்கள்? அவர் அதைச் செய்ய மாட்டாரோ என்று பயப்படுகிறீர்களா? ஆமாம், அவர் அதைச் செய்வார். பரலோகத்தில் ஒரு தேவன் இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக, அவர் அதைச் செய்வார். அவர் வரவேற்பளிக்கும் முனையில் இருக்கிறார். ஓ, என்னே. அதை நோக்கிப் பாருங்கள்!

★★★★★

# நான் வேறொரு உலகத்திற்குள் போனேன். அது காணக்கூடாத ஒரு உலகம்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: விசுவாசம், ஆகஸ்டு 15, 1956

94. இயேசு, "நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்" என்று கூறினார். அப்படி யானால், தேவனால் ஆணையிட்டுக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையானது உண்மையாக இருக்கிறது. அவர் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கை உண்மை யாக இருக்கிறதா? அப்படியானால் நாம் எதைக் குறித்து கவலைப்பட வேண்டும்? **இயேசு இங்கேயிருக்கிறார். அவருடைய ஆவி இங்கேயிருக்கிறது.** நாம் ஒரு... சற்று முன்பு என்ன சம்பவித்தது**? நான் வேறொரு உலகத் திற்குள் போனேன். அது காணக்கூடாத ஒரு உலகம்.** இவ்விதமாக ஒருவர் மற்றவரை காணத்தக்கதாக நாம் மிகவும் உணர்வுள்ளவர்களாக ஆகியிருக்கிறோம். **ஆனால் அங்கே காணக் கூடாத ஒரு உலகமும் இருக்கிறது;** மேலும் நீங்கள்... **நீங்கள் காணக்கூடிய எதைக் காட்டிலும் அது பெரியதாக உள்ளது. இங்கே கிறிஸ்து இருக்கிறார்.**

இந்த உலகத்தில், **இங்கே இந்தக் கட்டிடத்தில், அசுத்த ஆவிகளும் யுத்தமும் உள்ளன.** மேலும் கிறிஸ்தவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார்கள், **விசுவாசத்தைக் கொண்டு அவர்களை ஊக்கமூட்ட முயற்சிக்கும்படியாக, தேவனுடைய தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.**

இதோ நான் என்னைத்தானே விட்டுக்கொடுத்த வண்ணமாக இங்கே நின்று கொண்டிருக்கிறேன், பரிசுத்த ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருக்கிறார், கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்கள் என்று நீங்கள் எதை அழைக்கிறீர்களோ அது இதுதான். ஆனால், சாத்தான் எப்போதுமே தேவ குமாரர்களை சந்தேகித்து கேள்வி கேட்பவனாக இருக்கிறான் (skeptic) என்பது நினைவிருக்கட்டும். அவன் எப்போதுமே அதைச் செயகிறான் என்பது உங்களுக்குத் தெரியும். சந்தேக எண்ணமுடைய யாரோ ஒருவர், அவர்கள் அதைச் செய்யும்போது, அப்படியே அவன் தலையிட முயற்சிக்கிறான். ஆனால் கிறிஸ்தவர்களோ எப்போதுமே ஜெயங்கொள்கிறார்கள்.

★★★★★

# இப்பொழுது, கர்த்தாவே, ஒருக்கால் அநேக, அநேக தூதர்கள் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்கிறோம், ஏனென்றால் விசுவாசிகள் இங்கேயிருக்கிறார்கள்




சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: அவருக்குச் செவிகொடுங்கள், டிசம்பர் 15, 1956

61. **இப்பொழுது, கர்த்தாவே, ஒருக்கால் அநேக, அநேக தூதர்கள் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்கிறோம், ஏனென்றால் விசுவாசிகள் இங்கேயிருக்கிறார்கள்,** “தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள் **(அவர்கள் திரும்புவதும் வருவதுமாய் இருப்ப தில்லை, ஆனால் அவர்கள் பாளய மிறங்குகிறார்கள்)**” என்று வேதாகமம் கூறு கிறது. **தங்கள் கரத்தை உயர்த்தியிருப்பவர் களைச் சுற்றிலும் பாளயமிறங்கும்படியாகவும், அவர்கள் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் என்ற ஜீவ மார்க்கத்தை அவர்களுக்குப் போதிப்ப தற்காகவும் இன்னும் அநேக (தூதர்கள்) இன்றிரவு மகிமையிலிருந்து அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.** பிதாவே, இவர்கள் உம்மோடு கூட ஐக்கியத்தில் இல்லை என்பதை

அடையாளம் கண்டுகொண்டவர்களாக, அவர்கள் உம்மை நோக்கி தங்கள் கரங்களை உயர்த்தியிருக் கிறார்கள். அவர்கள் ஐக்கியத்திற்கு வெளியே இருந்து, இன்றிரவு ஐக்கியத்திற்காக மிகவும் வாஞ்சையாயிருக் கிறார்கள். பிதாவே, கிறிஸ்துவின் நாமத்தில், நீர் ஒவ்வொருவரையும் உமக்கு சொந்தமான அன்புக் குரிய இராஜ்யத்திற்குள் இன்றிரவு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜெபிக்கிறேன். பரிசுத்த ஆவியான வரின் மூலமாக அவர்களிடம் கெஞ்சுவீராக, பரிசுத்த ஆவியால் அவர்களை நிரப்பி, அழிவில்லாத, நித்திய ஜீவனை அவர்களுக்குக் கொடுத்தருளும்.

அவர்களை வெளியே அழைத்து, ஒரு ஊழி யத்தில் அவர்களை வைத்து, தேவனுடைய மகத்தான திராட்சைத் தோட்டத்தில் விசேஷமான வேலைகளை அவர்களுக்குக் கொடுத்தருளும். அது ஒரு சிறிய இல்லத்தரசியாக இருந்தால், அவளை எங்கே வைப் பது என்று நீர் அறிந்திருக்கிறீர். அலுவலகத்திலோ, அல்லது ஆலையிலோ (வேலை செய்யும்) ஒரு மனிதனாக அது இருக்குமானால், அந்த மிகச் சிறந்த வேலையைச் செய்யும்படி அவனை எங்கே வைப்பது என்று உமக்குத் தெரியும். வீதியிலுள்ள மனிதனோ, வெளியே பண்ணையில் (வேலை செய்யும்) ஒரு மனிதனாகவோ இருந்தால், அவனை எங்கே வைப்பது என்று நீர் அறிந்திருக்கிறீர். நீர் சகலத்தையும் அறிந் திருக்கிறீர், ஸ்தானத்தில் பொருத்தும்படி, அவர்களை எங்கே பொருத்துவது என்பதை (நீர் அறிந்திருக்கிறீர்).

தங்கள் கரங்களை உயர்த்தியுள்ள அநேகர் இருக்கிறார்கள், எனவே, பிதாவே, இந்த இரவிலே, பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளின் மூலமாக, நீர் அவர்களை உம்முடைய இராஜ்யத்திற்குள் பொருத்த வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

★★★★★







# எலியாவும் தேவ தூதர்களும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

1இரா 19:1 எலியா செய்த எல்லாவற்றையும்,
அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும்
பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி
அனைத்தையும் ஆகாப் யேசபேலுக்கு
அறிவித்தான்.

1இரா 19:2 அப்பொழுது யேசபேல்
எலியாவினிடத்தில் ஆள் அனுப்பி: அவர்களின்
ஒவ்வொருவனுடைய பிராணனுக்குச்
செய்யப்பட்டதுபோல, நான் நாளை இந்நேரத்தில்
உன் பிராணனுக்குச் செய்யாதேபோனால்
தேவர்கள் அதற்குச் சரியாகவும் அதற்கு
அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்கள் என்று
சொல்லச்சொன்னாள்.

1இரா 19:3 அவனுக்கு அது தெரிந்தபோது
எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச்
சேர்ந்த பெயர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன்
வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான்.

1இரா 19:4 அவன் வனாந்தரத்தில் ஒருநாள்
பிரயாணம்போய், ஒரு சூரைச்செடியின் கீழ்
உட்கார்ந்து, தான் சாகவேண்டும் என்று கோரி:
போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை
எடுத்துக்கொள்ளும்; நான் என் பிதாக்களைப்
பார்க்கிலும் நல்லவன் அல்ல என்று சொல்லி,

1இரா 19:5 ஒரு சூரைச்செடியின்கீழ்ப் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு என்றான்.

1இரா 19:6 அவன் விழித்துப் பார்க்கிறபோது, இதோ, தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது; அப்பொழுது அவன், புசித்துக் குடித்துத் திரும்பப்படுத்துக்கொண்டான்.

1இரா 19:7 கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான்.

1இரா 19:8 அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான்.

# செய்தி: எலியாவே, உனக்கு இங்கே என்ன காரியம்?
# 59-0412 E

22. இயற்கைக்கு மேம்பட்டவைகளோடு இடைபட்டு, தேவனுடைய பிரசன்னத்தில் தரித்திருக்கிற மனிதர்கள், தேவனுடைய திட்டமானது புறக்கணிக்கப்படுவதை நீங்கள் காணும் போது, நீங்கள் அதைப் பிரசங்கிக்கிறீர்கள், உங்களால் கூடுமான சிறந்ததை முயற்சித்து, செய்ய வேண்டுமென்று தேவன் உங்களிடம் கூறுகிற யாவற்றையும் செய்கிறீர்கள், இருந்த போதிலும் அவர்கள் அதை விட்டு விலகி நடக்கிறார்கள், அப்போது இருதயம் உடைக்கப்பட்டு விடுகிறது.

அக்கினி பற்றி எரிந்து லாஸ் ஏஞ்சலஸ் வெளிச்சம் கொடுக்கும் அளவுக்கு, இங்கே

போதுமான அளவு இந்தக் கடந்த வாரம் ஏஞ்சலஸ் டெம்பிளில் சர்வ வல்லமையுள்ள தேவன் கிரியை நடப்பித்துள்ளார்.

அவர், “நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோம் கொமோராவுக்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் (மத்தேயு 10:15)” என்று கூறினதில் வியப்பொன்றுமில்லை.

அந்தச் சிறிய பரிதாபமான மனிதன், மிகவும் இளைத்துப் போய் எலும்பும் தோலுமாக, அங்கே படுத்துக் கொண்டிருக்கிறான், அவனுடைய நரைத்த தலைமயிர் அவனது தோள்கள் மேல் தொங்கிக் கொண்டிருந்தது...

தேவன், “என்னுடைய ஊழியக்காரனுக்கு கொஞ்சம் ஓய்வு அவசியம்” என்றார். தேவன் தம்முடைய ஊழியக்காரன் மேல் இரக்கப்படுகிறார், அவர் அப்படியே அவனை அதிகமாக இருந்த காட்டுப் புதர்செடிகள் மேல் படுக்க வைத்தார், அவனோ உறங்கிப் போய் விட்டான் (1 இராஜா. 19:5).

அவன் அங்கே உறங்கிக் கொண்டிருப்பதை 10,000 தூதர்கள் பாதுகாப்பாக கவனித்துக் கொண்டிருப்பதை நான் கற்பனை பண்ணிப் பார்க்கிறேன்.

விசுவாசிக்கு ஒரு உத்தரவாதம் உண்டு, உலகம் அவனைப் புறக்கணித்தாலும், தேவன் இன்னுமாக அவனை நேசிக்கிறார்.

உலகம் ஒருக்கால் உங்களை பரிசுத்த உருளையர்கள் என்று அழைக்கலாம்; ஒருக்கால் அவர்கள் உங்களை மதவெறியர்கள் என்று அழைக்கலாம்; ஆனால் நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பீர்களானால், அங்கே உறுதியான ஒரு காரியம் உண்டு: தேவன் உங்களை நேசிக்கிறார், அவருக்கு பயந்தவர்களைச் (சூழ) அவருடைய தூதர்கள் பாளயமிறங்குகிறார்கள் (சங்கீதம் 34:7).

23. ஒவ்வொரு கிளையிலும், அந்த இடம் முழுவதும், அதைச் சுற்றிலும்

எல்லாவிடங்களிலும் திரளான தூதர்கள் இருப்பதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன்.

தேவன் இறங்கி வந்து, “சோர்ந்து போயிருக்கிற என்னுடைய பரிதாபமான சிறு ஊழியக்காரன். அவன் மிகவும் பதட்டமடைந்தவனாய் சுக்கு நூறாகக் கிழிக்கப்பட்டவனாக இருக்கிறான், என்ன செய்ய வேண்டும் என்றே அவனுக்குத் தெரியவில்லை. மென்மையான கரங்களை உடையவனாய் இங்கே நின்று கொண்டிருக்கிற அந்த தூதனைத் தெரிந்தெடுத்துக் கொள்ள நான் விரும்புகிறேன். நீங்கள் அவனைப் பயப்படுத்தி விடாதீர்கள்; அவனிடம் நடந்து சென்று, அவனுடைய கண் புருவத்தை மெள்ள வருடிக் கொடுங்கள். உங்கள் மத்தியில் இருக்கிற மிகச்சிறந்த சமையல்காரன் (best cook) தான் எனக்குத் தேவை, நீங்கள் அங்கே மேலே

சென்று, உங்களால் கண்டுபிடிக்க முடிந்த வைட்டமின்கள் (ஊட்டச்சத்துகள்) எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, இந்த நவதானிய உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். உலகம் அவனை ஒதுக்கித் தள்ளி விட்டது, ஆனால் நான் அவனைச் சரியான முறையில் நடத்தப் போகிறேன்" என்றார். அல்லேலூயா. அதற்கு, "நம்முடைய தேவனைத் துதியுங்கள்" என்று அர்த்தம். அதைக் குறித்துப் பயப்பட வேண்டாம்.

"நம்மிடம் இருக்கிற மிகச்சிறந்ததைக் கொண்டு வாருங்கள்; அவனுக்காக ஒரு நவதானிய அப்பத்தை சமைத்து அவனுடைய பக்கத்தில் கொஞ்சம் தண்ணீரையும் வைத்து விடுங்கள்." மென்மையான கரங்களைக் கொண்ட இந்த தூதனோ அவனிடம் சென்று, அந்தச் சிறு தேவ தாசனுடைய புருவத்தை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

நீங்கள் உங்களால் கூடுமான சிறந்ததைச் செய்திருப்பீர்களானால், தேவன் இன்னுமாக அந்தத் தூதர்களை ஒழுங்கில் (வரிசைக்கிரமமாக) வைத்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் எலியாவை நேசித்தது போன்று அதேவிதமாக உங்களையும் நேசிக்கிறார்.

24. அவன் எலியாவின் புருவத்தை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தான், அப்போது எலியா விழித்துக் கொண்டான். அவன் இவ்விதமாக ஏதோவொன்றைக் கூறுவதை நான் கேட்கக்கூடும், "உன்னை நேசிக்கிற உன்னுடைய தேவனாகிய கர்த்தர்... எலியாவே, உன்னால் (கூடுமான) சிறந்ததை நீ செய்திருக்கிறாய். நியாயத்தீர்ப்பின் நாளிலே, அவர்கள் தனியாகவே அதற்காக நிற்க வேண்டியதாய் இருக்கும் என்பதற்கான ஒரு சாட்சிக்காக மாத்திரமே நான் அந்த அடையாளங்களை அனுப்பினேன். நான்... செய்ய

வேண்டுமென்று நான் உன்னிடம் கூறினதையே நீ செய்திருக்கிறாய். நீ இப்பொழுது சோர்ந்து போய் களைத்து விட்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனாகிய கர்த்தர் தாம் இந்த அப்பத்தையும் இந்தத் தண்ணீரையும் கொண்டு உன்னை போஷிக்கும்படி என்னை அனுப்பியிருக்கிறார்."

எலியாவோ தன்னுடைய கண்களைப் பிசைந்து கொண்டே, எழுந்து, சிறிய பலவீனமான நடுங்கிக் கொண்டிருந்த கரங்களினால் அந்த அப்பத்தை எடுத்து அதைப் புசித்தான்.

சற்று கழிந்து மகத்தான தூதர்களின் பாடகற்குழு வெளியே வந்து, இவ்விதமாக அவனைச் சுற்றிலும் ஒரு சிறு காட்சியை அமைத்து, பாடல்களைப் பாடத் தொடங்கினார்கள், அது தன்னுடைய குழந்தையை உறங்க வைக்க செல்லமாகக்

கொஞ்சக் கூடிய எந்த தாயும் பாடுவதைப் போல இல்லாதிருந்தது. அவனை மீண்டுமாக உறங்க வைத்தார்கள்.

அப்போது பிதாவானவர் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து, "நான் அவனை மிகவும் நேசிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்; பிரயாணமோ வெகுதூரம். இன்னும் அவன் கடந்து போக வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கிறது. நான் அவனை உபயோகப்படுத்துவதை நிறுத்தி விடவில்லை. எனவே நான் அவனை மீண்டும் போஷித்தாக வேண்டும்" என்றார்.

எனவே அவர் தூதர்களைக் அழைத்து, நிறைய இருக்கும் வேறொரு பெரிய வைட்டமின்களைச் சேர்த்து வேறொரு நவதானிய அப்பத்தை சமைத்துக் கொண்டு (வந்து), ஒரு கலசம் தண்ணீரையும் அவன் அருகில் வைத்து விட்டு, அவனுடைய புருவத்தை வருடிக் கொண்டே, அவனை மீண்டும் போஷித்தார்கள்.

25. நாம் முழுவதும் களைப்படைந்து (சோர்ந்து போய்) சுக்குநூறாக கிழிக்கப்படும் போது, அங்கே ஒரு சூரைச் செடி இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், அப்போது நாம் அந்தச் சூரைச் செடியின் கீழ் சென்று, எம்மாதிரியான ஒரு பிரயாணத்தையும் செய்யும்படியாக ஆவிக்குரிய வைட்டமின்களை கண்டுகொள்ள முடியும்.

அங்கே அவன் படுத்திருந்தான். (பிறகு) அவன் எழுந்த போது, கொஞ்சம் நலமான உணர்வைப் பெற்றவனாய், நாற்பது பகலும் நாற்பது இரவும் பிரயாணம் செய்து போனான். அங்கே ஒரு மருத்துவர் இதைக் கேட்டுக் கொண்டிருப்பரென்றால், அவன் உபயோகப்படுத்தின வைட்டமின் எம்மாதிரியான வைட்டமின் என்று அறிய நீங்கள் விரும்பவில்லையா, ஒரு நவதானிய அப்பமும் ஒரு கலசம் தண்ணீரும் ஒரு மனிதனை நாற்பது பகலும் நாற்பது இரவும்

பாதுகாத்துக் கொண்டதே (ஜீவனோடே வைத்துக் கொண்டதே – மொழிபெயர்ப்பாளர்). அதுதான் நம்முடைய தேவனுடைய வல்லமையாகும்.

★★★★★

# முழு பாதாளமும் திறக்கப்படும்போது முழு பரலோகமும் திறக்கப்படும்





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

28. இப்போது, நாம் ஜீவிக்கின்ற இந்த நாளை நோக்கிப் பாருங்கள். (நான் மரியாதைக்குரிய பெண்களைக் குறித்துப் பேசவில்லை, இல்லை ஐயா, அவர்கள் தேவனின் கருவிகள்.) ஆனால் அவர்களைக் காட்டிலும் அதிகமானோர் "பெண் கொண்டும் பெண் கொடுத்தும்" தங்களைக் குறித்து அக்கரையில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். நான் அவர்களைப் பற்றி தான் பேசுகிறேன். அவ்விதமாகத் தான் இருக்கும் என்று தேவன் வேதத்திலே கூறியிருக்கிறார். நோவாவின் நாட்களானது முடிவிற்கு வருமுன், அவர்கள் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் இருந்தார்கள் என்று இயேசு சொன்னார். **இன்று உலகத்திலே கலக்கம் அதிகமாய் இருக்கிறதை நாம் காண்கிறோம். இவை எல்லாம் இப்படி இருப்பதற்கு ஒரே ஒரு காரணம் தான். அதாவது வலிய, பொல்லாத ஆவிகள் இறங்கி மக்களுக்குள்ளாக புகுந்து இந்தக் காரியங்களை செய்தது என்று வேதம் கூறினதை நாம் உணர்கிறோம். அதே அசுத்த ஆவிகள் தான் இன்றும் நம்முடைய நாட்களிலே கிரியை செய்து வருகிறது.**

29. இப்பொழுது கவனியுங்கள், **முழு பாதாளமும் திறக்கப்படும்போது முழு பரலோகமும் திறக்கப்படும். வெள்ளம் போல சத்துரு வந்தாலும், கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுகிறார்.** (தன் தரத்தை உயர்த்துகிறார்). **ஆகவே இந்த இரண்டு வல்லமைகளும் எப்பொழுதுமே சந்திப்புகளிலே வெளிப்படுகின்றன.**

30. இப்பொழுது நிம்ரோத் தன் காலத்திலே, எல்லா குழுக்களையும் ஒன்றாகச் சேர்த்து, எல்லா மக்களையும் பாபிலோனுக்கு வரவழைத்து ஒரு மாபெரும் கூட்டமைப்பை அமைத்தான். அங்கே பெண்கள் மத்தியில் எல்லா விதமான பாலுணர்ச்சி சம்பந்தப்பட்ட அசுத்தமான காரியங்களும் அது போன்றவைகளும் அவர்களுக்கிடையே நடந்தது. **ஆனால் அதே நேரத்தில்தான், தேவன் இந்த பூமியிலே, எந்த குற்றமுமில்லாத அவரோடு நடந்த ஏனோக்கை ஒரு சாட்சியாக கொண்டிருந்தார். அசுத்த ஆவிகள் இந்த பூமியிலே எந்த நேரத்தில் தோன்றினதோ அதே நேரத்திலே தூதர்களும்**

**தோன்றினார்கள். அந்த தூதர்கள் மனிதர்களுக்குள் பிரவேசித்தார்கள்.**

31. **இது இன்றைய நாளிற்கு ஒரு அழகான மாதிரியாக இருக்கிறது. பொல்லாங்கானது தோன்றும் வேளையில் நன்மையும் தோன்றுகிறது.**

*செய்தி: 56-01-15 காலத்தின் சந்திப்பு*

★★★★★

# முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

இப்பொழுது, அவன் ஒருநாள் அங்கே வெளியில் உட்கார்ந்து கொண்டிருப்பதை நாம் கண்டுகொள்கிறோம். நாம் இதை ஒரு சிறு நாடகமாகக் கொடுப்போம், அப்போது இங்கேயிருக்கும் இந்தச் சிறு பிள்ளைகள் அதை தெளிவாகக் கேட்க முடியும். இப்பொழுது, ஆபிரகாம் ஒரு காலையில் கூடார வாசலில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அங்கே அவனுடைய இடத்திற்கு முன்பு, ஒரு பெரிய சிந்தூர மரம் (oak tree) இருந்தது. அந்த கருவாலி மரம் (oak) இன்னும் அங்கே நிற்பதாக அவர்கள் உரிமை கோருகிறார்கள். அவர்கள் அதை பாதுகாக்கப்பட்ட இடமாக (preserved) வைத்திருப்பதாகக் கூறுகிறார்கள். நல்லது, அங்கே தான் அவன் தன்னுடைய கூடாரத்தை அடித்திருந்தான், அங்கே வெளியே வனாந்தரத்தில்... லோத்துவோ அங்கே கீழே இருந்தான், என்னே, அவர்கள் அப்படிப்பட்ட ஒரு காரியத்தை உடையவர்களாக இருந்தார்கள் என்று ஊகிக்கிறேன், அவன் புகைப்பிடிப்பதற்கான ஒரு பெரிய சுருட்டை (cigar) வைத்திருந்தான், மேலும் அவன் அந்தப் பட்டணத்தின் பெரு நகராண்மைக் கழகத் தலைவராக (mayor)

இருந்தான், உங்களுக்குத் தெரியும். திருமதி. லோத்தும் அவளுடைய குமாரத்திகளும் மற்றும் அவர்கள் எல்லாருமே புதுப்பாணி நாகரிக நடை, உடை பாவனைகள் கண்காட்சிகள் (fashion shows) நடக்கும் பல இடங்களுக்குப் போய்க்கொண்டும், தொலைக்காட்சி பார்த்துக்கொண்டும், அந்நாட்களின் பாணிகளுக்குப் (styles) பின்னால் ஒப்பனை செய்து (அழகுபடுத்திக்) கொண்டும், இருந்தார்கள். **ஆனால் சாராளோ உண்மையாக நின்றாள்; ஆபிரகாமும் உண்மையாக நின்றான்; அவர்கள் தேவனோடு தரித்திருந்து, அங்கே வெளியில் தங்கியிருந்தார்கள்.**

35. இப்பொழுது, என்ன சம்பவித்தது? ஒருநாள் ஆபிரகாம் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கையில், ஏறக்குறைய பகல் பதினொரு மணியளவில், நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அவன் அங்கே அதனூடாக ஏறி வந்து கொண்டிருப்பவர்களை நோக்கிப் பார்க்கிறான், இதோ மூன்று மனிதர்கள், தங்கள் வஸ்திரங்கள் முழுவதும் தூசி படிந்தவர்களாக, நெடுக நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதைக் குறித்து ஏதோவொன்று உள்ளது என்று உங்களுக்குத் தெரியும், **நீங்கள் முழுவதுமாக ஜெபித்து முடித்துவிடாமல் இருப்பீர்களானால் *(prayed up)*, தேவனுடைய ஆசீர்வாதமானது சரியாக உங்கள் பக்கத்திலேயே கடந்து போக முடிந்தாலும், அதை அறியாமலே இருப்பீர்கள்.** நான் அதைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், **முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

சமீபத்தில் ஐயர்லாந்திலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு சிறு ஐரிஸ் பெண்மணி அங்கே இருந்தாள், அவள் ஒரு கப்பலில் இருந்ததாக அவர்கள் கூறினார்கள் மேலும் அவள்... ஏறக்குறைய அந்நேரத்தில், ஓ, அவர்கள் ஏறக்குறைய நியூயார்க்குக்கு வந்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு பெரிய கடும் புயலானது அந்த சமுத்திரத்தின் குறுக்கே வீசியடித்தது, கப்பலானது இக்கட்டில் இருக்கிறது என்ற சமிக்சையையும் (SOS's) வெளியே அனுப்பிக் கொண்டிருந்தார்கள், அதுவோ தண்ணீரில் தலைகீழாகப் பாய்ந்து இடத்திற்கிடம் மூழ்கிக் கொண்டேயிருந்தது. அப்போது இசைக்

கருவிகளை இசைக்கும் கூட்டம் இசைத்துக் கொண்டிருந்தது; அவர்களால் முடிந்த எல்லா ராக்-அன்-ரோல்களையும், மற்றும் அதைப் போன்ற எல்லாவற்றையும் அவர்கள் இசைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தொடங்கினார்கள் - இசைக்குழு இசைக்கத் தொடங்கினது... அப்போது கப்பல் தலைவன் (Captain), "எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்; நீங்கள் உங்கள் சபையில் ஜெபிக்கிற விதமாக எல்லாரும் ஜெபம் பண்ணுங்கள்" என்றான். உடனே பாண்டு இசைக் கருவிகள் "உம்மண்டை, என் தேவனே" என்று இசைக்கத் தொடங்கினது. அவர்கள் எல்லாரும் அவ்வாறு செய்யத் தொடங்கிளார்கள்.

36. ஒரு சிறு ஐரிஸ் பெண்மணியோ தரையில் மேலும் கீழும் நடக்கத் தொடங்கினாள். அந்த கேப்டன், "நம்மால் மாத்திரம் இந்தப் புயலுக்கு முப்பது நிமிடங்கள் தாக்குப்பிடிக்கக் கூடுமானால், நாம் துறைமுகத்திற்குள் வந்து, நங்கூரத்தை போடுவோம். ஆனால் நம்மால் முப்பது நிமிடங்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், நாம் கடலின் அடியில் இருப்போம்" என்றான்.

அந்தச் சிறு ஐரிஸ் பெண்மணியோ, "தேவனுக்கு மகிமை. அல்லேலூயா" என்றாள்.

எனவே கப்பல் தலைவன் (Captain) மேலே நடந்து வந்து, “சீமாட்டியே, நான் என்ன சொன்னேன் என்று புரிந்ததா?” என்று கேட்டான். அவன்...

அவள், “நீர் சொன்னது எனக்குத் தெளிவாகப் புரிந்தது, ஐயா” என்று சொன்னாள்.

அவன், “நம்மால் இந்தப் புயலில் முப்பது நிமிடங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாவிட்டால், இப்பொழுதிலிருந்து முப்பது நிமிடங்களில் நாம் கடலின் கீழே இருக்கலாம் என்று தான் சொன்னேன்” என்றான்.

அதற்கு, “நீர் என்ன அர்த்தத்தில் (சொன்னீர்) என்பது எனக்குப் புரிந்தது. அல்லேலூயா. தேவனுக்கு துதி உண்டாவதாக” என்றாள்.

“நீங்கள் ஏன் ஜெபிக்கவில்லை?” என்று கேட்டான்.

அதற்கு அவள், “நான் முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up). இனியும் ஜெபிக்க வேண்டியதில்லை. நான் துவக்க முதலே முழுவதும் ஜெபித்து முடித்து விட்டேன் (prayed up)” என்று கூறினாள்.

நல்லது, “நீங்கள் கடலின் அடியில் இருக்கலாம் என்று அறிந்திருந்தும், நீங்கள் ஏன் அவ்விதமாக அல்லேலூயா என்று கூற முடிந்தது?” என்று கேட்டான்.

அதற்கு அவள், “ஐயா, நான் நியூயார்க்கில் வசிக்கும் என்னுடைய ஒரு மகளைக் காண, ஐயர்லாந்திலிருந்து வரும் என்னுடைய பாதையில் இருக்கிறேன். எனக்கு ஒரு மகள் மகிமையில் இருக்கிறாள், ஒருவள் நியூயார்க்கில் இருக்கிறாள். நான் கீழே போவேன் என்றால், அங்கே மேலேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன். நாம் கரையைப் பிடித்து (land) விட்டோம் என்றால், அங்கேயிருக்கும் ஒரு மகளைக் காண்பேன்” என்றாள். அது சரியே. முற்றிலுமாக ஜெபித்து முடித்து விடுதல் (Prayed up)… ஆமென். தரித்திருப்பதற்கான வழி அதுதான், முழுவதும் ஜெபிப்பது. அதற்காக ஆத்தமாகுங்கள். அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருத்தியை சந்திக்கப் போகிறாள். அது… என்று அவள் அறிந்திருந்தாள். அங்கே மேலேயோ அல்லது இங்கே கீழேயோ, அது எந்த வித்தியாசத்தையும் அவளுக்கு ஏற்படுத்தவில்லை, அது செய்தது - அவள் முப்பது நிமிடங்களில் அவர்களில் ஒருவளைக் காணப் போகிறாள். இப்பொழுது, அது

நல்லது, அது அருமையானது. **சபையானது எல்லா நேரமும் அந்தவிதமாகத்தான் இருக்க வேண்டும், முழுவதும் ஜெபித்து முடித்து விடுதல்** (prayed up).

37. **ஆபிரகாம் முழுவதுமாக ஜெபித்து முடித்து விட்டு, அங்கு வெளியே உட்கார்ந்திருந்தான்.** ஒருக்கால் லோத்து அங்கே கீழே இருந்து, அங்கே அந்த வனாந்தரத்திலே என்ன நடந்து கொண்டிருந்தது என்பதை அறியாதிருந்தான். ஆனால் ஆபிரகாம் நோக்கிப் பார்த்தபோது, அது சற்று விநோதமாக காணப்படுவதை அவன் அடையாளம் கண்டுகொள்ளும் வண்ணமாக, அங்கே வெளியே அதன் முன்பாக நடந்து வந்து கொண்டிருந்த அந்த மனிதரைக் குறித்து ஏதோவொன்றிருந்தது. ஓ, என்னே. விநோதமாக தோற்றமளிக்கும் மனிதர்... அவன் ஓடிச்சென்றான், நீங்கள் கவனிப்பீர்களானால், முதல் முதல் காரியத்திலேயே அவன், "என்..." என்றான். அவன், "என் ஆண்டவன்மார்களே" என்று கூறவில்லை. ஷரிவ்போர்ட்டில், அன்றொரு இரவு அந்த கருத்துக்குறிப்பைக் கூறின அந்த யூத

சகோதரனோடு நான் நிச்சயமாகவே முரண்படுகிறேன். "என் ஆண்டவன்மார்களே" என்று அவன் கூறவில்லை, ஆனால், "என் ஆண்டவரே (My Lord)" என்று தான் கூறினான், ஆ-ண்-ட-வ-ரே, ஒருவர். "என் (பெரிய எழுத்து) ஆ-ண்-ட-வ-ரே, நீர் உள்ளே வர மாட்டீரா." இப்பொழுது, உங்களில் யாராவது அங்கு மொழிபெயர்ப்பாளரைக் கவனித்துப் பாருங்கள், அது ஏலோகிம் என்பதாக இருந்தது, ஆபிரகாம் அவரை அழைத்தான்... அவரை உள்ளே அழைத்து வந்தான். "நீர் உள்ளே வந்து உட்கார மாட்டீரா. நான் போய் உமக்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து, உம்முடைய கால்களைக் கழுவுகிறேன். துணிக்கை அப்பமும் (morsel of bread) எடுத்துக்கொள்ளும். அதன்பிறகு நீர்... உமது-உமது வாஞ்சையைத் தீர்த்துக்கொள்ளும், பிறகு நீர் எங்குபோக வேண்டுமானாலும் அங்கே போகலாம்" என்று கூறிவிட்டு, அவன் அதனூடாக நழுவிச் சென்று, "சாராளே, சாராளே, ஸ்ஸ். யாரோ ஒருவர் அங்கே வெளியில் இருக்கிறார்; மிக சீக்கிரமாக கொஞ்சம் மாவையோ, அல்லது சோள மாவையோ (cornmeal) ஆயத்தம் செய்" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது.

# ~ 10 ~

*செய்தி: ஆபிரகாம்*, பிப்ரவரி 11, 1961

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*



# அதற்கு விரோதமான ஒரு வார்த்தையும் ஒருபோதும் மன்னிக்கப்படாது





**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

46. இப்பொழுது, ஆபிரகாம், ஆபிரகாம் அதனோடு தொடர்பு கொள்ளாமல் விலகி இருந்தான் என்பதை நாம் கண்டுகொள்கிறோம்; **அவன் தெரிந்து கொள்ளப்பட்டு, வெளியே அழைக்கப்பட்ட சபையாக இருந்தான்**. மேலும், மாம்ச சரீரத்தில் இருந்த அந்த மனிதரை ஞாபகம் கொள்ளுங்கள், அந்த மனிதர் கன்றுக்குட்டியின் மாம்சத்தைப் புசித்தார். அவர் பசுவின் பாலைக் குடித்தார். அவர் அவனுடைய அப்பத்தைக் குடித்தார் மேலும் ஆனால் - அப்பத்தைப் புசித்து, அதன்மேல் வெண்ணெயை கொண்டிருந்தார், அவர் பசுவின் பாலைப் பருகினார். ஆபிரகாம் அவரை தேவன் என்று அழைத்தான். கவனியுங்கள்-எடுத்துக்கொள்ளுங்கள்... மொழிபெயர்ப்பாளர்களைக் (translators) கவனித்து, அதைத் தேடி, அது சரிதானா என்று கண்டுபிடியுங்கள்: ஏலோகிம், தேவன். இப்பொழுது, இது ஏதோவொன்றை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும், நீங்கள் அதை

திட்டமாகப் பார்க்கவிடும்படி, நாம் விரும்பும் ஏதோவொன்றாக இருந்தது என்பதையும் நீங்கள் கவனிக்க விரும்புகிறேன்.

**இப்பொழுது, கவனியுங்கள், அதன்பிறகு இரண்டு மனுஷர்கள் இறங்கிச் சென்ற போது, அந்தப் பிரசங்கிமார்கள் பிரசங்கம் பண்ணும்படியாக இறங்கிச் சென்றார்கள் என்பதைக் கண்டுகொள்கிறோம், சோதோமில் பிரசங்கம் பண்ணும்படி, இரண்டு தூதர்கள் இறங்கிப் போனார்கள்**... அவர்கள் ஒருபோதும் இதையோ, இந்தக் காரியத்தையோ, அவர்கள் அங்கே இறங்கிச் சென்று, தங்கள் அடையாளத்தைக் காண்பித்திருந்த இந்த அடையாளத்தையோ செய்யவில்லை, **அவர்கள் அவர்களை வெளியே கொண்டு வரும்படிக்கே வந்தார்கள்**. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட சபை பெற்றிருந்த அதே அடையாளம் அதுவாக இருக்கவில்லை. **தெரிந்து கொள்ளப்பட்ட சபையோ வேறொரு அடையாளத்தைப் பெற்றது**. மேலும் இப்பொழுது, அங்கே வெளியே இருந்த சபை எதைப் பெற்றது என்பதைக் கவனியுங்கள். **தெரிந்து கொள்ளப்பட்ட சபையோடு பின்னால் தங்கியிருந்த அந்த ஒருவர்.** அவர் என்ன பேசிக் கொண்டிருந்தார் என்பது

ஞாபகம் இருக்கிறதா? அவர், "ஆபிரகாமே..." என்றார். தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த அவனுடைய புதிய பெயரைக்கொண்டு அவனை அழைத்தார். "ஆபிரகாமே, சாராள் (சா-ரா-ள், அவளுடைய புதிய பெயர்) எங்கே?" ஏன், அவர்களுக்கு அதைக் கொடுத்த அந்த ஒருவர் அவர் தான். ஆமாம்.

47. யாரோ ஒருவர் சொன்னார், நான் அநேக நேரங்களில் இந்த விவரத்தைக் கூறியிருக்கிறேன், அவர், "சகோதரன் பிரன்ஹாமே, அந்த மனிதர் தேவனாக இருந்தார் என்று விசுவாசிக்கிறீரா?" என்று கேட்டார்.

நான், "அது தேவன் என்று வேதாகமம் கூறுகிறது" என்றேன். பாருங்கள்? **அவர் தேவனாக இருந்தார். அவர் சிருஷ்டிகராக இருந்தார்.** அவருக்கு விருப்பமான எதையும் அவரால் செய்ய முடிந்தது. **அவர் கொஞ்சம், பெட்ரோலியத்தையும், காஸ்மிக் வெளிச்சத்தையும், கால்சியத்தையும், போட்டாஷையும் எடுத்து, "பியூ!" என்று அதற்குள் ஊதி, அந்த சரீரத்திற்குள் அடியெடுத்து வைத்து, இறங்கி வந்தார்.** சரியாக அந்தவிதமாகத்தான் அவர் அதைச் செய்தார். அதேவிதமாகத் தான் அங்கிருந்த

தூதர்களையும் அவர் கொண்டிருந்தார். அவரால் அதே காரியத்தைச் செய்ய முடியும். நாம் எங்கிருந்து வந்தோம்? இந்த பூமியை உண்டாக்கினது யார்? பூமியானது எதிலிருந்து உண்டாக்கப்பட்டதோ, பூமியை உண்டாக்கும்படியாக அந்த பொருட்கள் அவருக்கு எங்கிருந்து கிடைத்தன? அவர் வெளியில் எங்கு சென்று, எங்கிருந்து இதைப் பெற்றார் என்று என்னிடம் கூறுங்கள். நாம் அமர்ந்து கொண்டிருக்கும் இந்த இதே பூமியானது தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தப்பட்டதாக இருக்கிறது. இந்த பிரசங்க பீடமானது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. இது வெளிப்படுத்திக்காட்டப்பட்ட தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. தேவன் அதை உரைத்தார், அவர் ஒரு சிருஷ்டிகராக இருக்கிறார், அதை உண்டாக்குவதற்கு இங்கே இல்லாத காரியங்களைக் கொண்டே அவர் அதை உண்டாக்கினார். அவரே அதை சிருஷ்டித்தார். அவருக்கு ஒரு நோக்கம் இருந்தது, அவரால் சிருஷ்டிக்க முடியும். அவருக்கு விருப்பமான எதுவாக இருந்தாலும், அவரால் அதைச் செய்ய முடியும்; அவர் தேவனாக இருக்கிறார்.

48. ஆபிரகாம் அவரை தேவன் என்று அழைத்தான். அது அவராகத்தான் இருந்தது.

**ஆபிரகாம் அதை அறிந்திருக்க வேண்டியிருந்தது, அவன் அவரிடம் பேசினான், அவனுடைய ஜீவிய நாட்கள் எல்லாம் அவன் அவரோடு பேசி வந்தான்.** அவர் யார் என்று அவன் அறிந்திருக்க வேண்டும் என்று நான் ஊகிக்கிறேன். நிச்சயமாக. "நான் உனக்குப் பண்ணின இந்த வாக்குத்தத்தத்தை நான் நிறைவேற்றப் போகிறேன்" என்று அவனிடம் கூறினார். அங்கே பின்னால் அவனிடம் பேசிக் கொண்டிருந்த அந்த ஒருவர் யார்? "நான், நானே அந்த ஒருவர்" என்று அவர் கூறினார். மேலும் கவனியுங்கள், அதன்பிறகு அவர், "ஆபிரகாமே, உன் மனைவியாகிய சாராள் எங்கே?" என்று கேட்ட போது. ஆபிரகாமே, ஆபிராமே என்று அல்ல, ஆபிரகாமே... தேவன் முந்தின அதிகாரத்தில் தான் ஆபிரகாம் என்ற அந்தப் பெயரை அவனுக்குக் கொடுத்திருந்தார். அவர்களுக்கு செய்தித்தாள்களோ, தொலைக்காட்சிகளோ மற்றும் காரியங்களோ அந்நாட்களில் கிடையாது. ஆபிரகாம் தனியாக அங்கே வெளியில் இருந்தான், அங்கே வெளியிலே, அவனும், அவனுடைய மனைவியும், அவனுடைய-அவனுடைய ஜனங்களும், அவனுடைய வேலைக்காரர்களும் இருந்தார்கள். இந்நிலையில் தேவன் அவனுக்குத் தரிசனமாகி, அவனுடைய பெயரை மாற்றினார், அந்த

தூதனானவர் அவனை ஆபிரகாம் என்று தான் அழைத்தார். தேவன் சாராயின் பெயரை சாராள் என்று மாற்றி, அவளை சாராள் என்ற பெயரால் அழைத்தார். "உன் மனைவி சாராள் எங்கே?" அவன் விவாகம் ஆனவன் என்பதும் கூட அவருக்கு எப்படி தெரிந்தது? அவர் ஒரு அந்நியராய் இருக்க, அவனுடைய பெயர் ஆபிரகாம் என்று எப்படி தெரிந்தது? அவனுடைய பெயரை அவர் ஆபிராம் என்பதிலிருந்து ஆபிரகாம் என்று அவர் மாற்றிவிட்டதை அவர் எவ்வாறு அறிந்திருந்தார்? அவர் சாராளின் பெயரை சாராள் என்று மாற்றி விட்டிருந்தார் என்பது, எப்படி - அல்லது சாராயின் பெயரை சாராள் என்று மாற்றி விட்டிருந்தார் என்பது அவருக்கு எப்படித் தெரிந்தது? இந்தக் காரியங்கள் அவருக்கு எப்படித் தெரிந்தது?

49. அதற்கு ஆபிரகாம், "அவள் அங்கே பின்னால், உமக்குப் பின்னாலுள்ள அந்தக் கூடாரத்தில் இருக்கிறாள்" என்றான்.

அவர், "ஆபிரகாமே, நான் உன்னிடம் வருகைதரப் போகிறேன்" என்றார். வேறு வார்த்தைகளில் கூறினால், "நான் உனக்கு இந்தப் பிள்ளையைத் தரப் போகிறேன் என்று உனக்கு வாக்குப்பண்ணியிருந்தேன், நீ என்னுடைய

வார்த்தையை விசுவாசித்திருக்கிறாய், இப்பொழுது, ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நான் வருகை தரப் போகிறேன, நீ இந்தக் குழந்தையைக் கொண்டிருக்கப் போகிறாய்" (என்றார்).

சாராளோ, பின்னாலிருந்து காதில் ஒட்டுக்கேட்டுக் கொண்டிருந்தவளாய் (ear-dropping), தனக்குள்ளே கூறினாள், இப்பொழுது; **அவள் தனக்குள்ளே தான் அதைக் கூறினாள். இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், தன்னுடைய இருதயத்தின் கீழே,** "நான் வயது சென்றவளாகவும், 90 வயது பாட்டியாகவும், பெரிய, பெரிய, பெரிய கிழவியாகவும், என்னுடைய கணவனாரோ வயதானவராயும், அங்கே வெளியிலிருக்கும் என் ஆண்டவன், 100 வயதான முதியவராகவும், இருக்க எனக்கு எப்பொழுதாவது சந்தோஷம் உண்டாகுமோ, இதோ நானோ 90 வயதாக இருக்க, நான் எப்பொழுதாவது மறுபடியும் ஒரு வாலிப பெண்ணாக ஆவேனோ?" **என்று [கூறினாள்.] அவள், "அது வேடிக்கையாக உள்ளது" என்று எண்ணி, நகைத்தாள்.**

தூதனானவர், "சாராள் ஏன் நகைத்தாள்?" என்று கேட்டார். அது மட்டுமல்ல, ஆனால் அவர்

சொன்னார், சாராள் தன்னுடைய இருதயத்தில் என்ன நினைத்தாள் என்ற அந்த வார்த்தைகளை மீண்டும் ஆபிரகாமிடம் கூறினார். அவர், "அது எப்படி இருக்க முடிந்தது?" என்று கூறினார். ஆமென். அங்கே தான் காரியம். அந்தக் கூடாரத்திற்கு நேராக தம்முடைய முதுகைத் திருப்பினவராய் உட்கார்ந்து கொண்டிருந்தார்... அப்போது சாராள் உண்மையாகவே பயந்து போனாள். அவள் என்ன செய்திருந்தாள் என்பதைக் கண்டிருந்தாள். "'எனக்கு எப்பொழுதாவது என்னுடைய கணவரோடு எப்படி மீண்டும் இன்பம் உண்டாயிருக்க முடியும்?' என்று சாராள் ஏன் நகைத்து தன் இருதயத்திற்குள் பேசிக் கொண்டிருந்தாள்?" ஆனால் அவருடைய வார்த்தை உறுதிசெய்வதாக இருந்தது; அவர் தேவனாக இருந்தார்.

50. இப்பொழுது, அது என்னவாக இருந்தது? இப்பொழுது, இயேசு அந்த அதே காரியத்தைக் குறிப்பிட்டார். **அவர், "லோத்தின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரனுடைய வருகையிலும் நடக்கும்" என்று கூறினார்.** இப்பொழுது, கவனியுங்கள், நீங்கள் ஏன் வெளியே வந்து, ஸ்தாபனங்களின் அந்தப் பெரிய

கட்டுப்பாட்டு மையங்களுக்கு (nerve centers) ஓடிப்போகக் கூடாது? ஸ்தாபனங்களின் அந்தப் கட்டுப்பாட்டு மையங்களுக்கு (nerve centers) அனுப்பவில்லையா? தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கோ, அது அங்கே இருக்கிறது. **அவர்கள் ஒருபோதும் அதை விசுவாசிக்க மாட்டார்கள்.** நான் இரவுநேரத்தில் இங்கே நின்று கொண்டிருக்கிறேன் என்பதை அறிவேன், அன்றொரு இரவில் நான் பகுத்தறிதலைக் கொண்டிருந்த போது, மேலும் சரியாக இப்பொழுதே அதை உணருகிறேன்; **இங்கே உள்ளேயிருக்கும் அநேகர் அதை விசுவாசிக்க மாட்டார்கள். என்னிடம் சொல்லாதீர்கள்; என்னால் உங்கள் பெயரையும் அழைக்க முடியும்.** அது சரியே. எது சரி என்று என்னிடம் கூற வேண்டாம். அது சரியே. **உங்களுடைய வியாதியை நான் அறிவேன். நிச்சயமாகவே, சரியாக இங்கேயே உங்கள் வியாதியை தேவனால் என்னிடம் கூற முடியும்.** நான் அதை உணருகிறேன். **அதைக் குறித்து ஒரு மாயக்காரனாக நீங்கள் ஏன் விளையாட முயற்சிக்கிறீர்கள்? உண்மையில் நீங்கள் யாராக இருக்கிறீர்களோ, அதுவாகத்தானே**

**நீங்கள் இருப்பீர்கள்?** ஒரு காரியம் என்னவென்றால், நீங்கள் பயப்படுகிறீர்கள். நான் உங்களைப் பழிக்கவில்லை. **அதற்கு விரோதமான ஒரு வார்த்தையும் ஒருபோதும் மன்னிக்கப்படாது.** ஆனால் பிரசங்கிமார்களாகிய உங்களில் சிலர் நினைக்கிறது போல, வேதவாக்கியங்கள் எந்த மறைஞானமாகவும் (mysticism) இல்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன். **அது எந்த மாற்றார் உளம் அறியும் சிறப்பாற்றலாகவும் (telepathy) இல்லை. தேவன் பாவமுள்ள உங்கள் ஆத்துமாவின் மேல் இரக்கமுள்ளவராயிருப்பாராக. உங்களுக்கு ஒரு பிரசங்க பீடம் அவசியமில்லை; உங்களுக்கு ஒரு பலிபீடம் தான் தேவையாக இருக்கிறது.** அது சரியே. தேவனோடு சரிப்படுத்திக் கொள்ளுங்கள். **அதற்கு விரோதமான ஒரு வார்த்தையும் இம்மையிலும் மறுமையிலும் ஒருபோதும் மன்னிக்கப்படாது என்பது நினைவிருக்கட்டும்.** இப்பொழுது, "அது நானல்ல" என்று நீங்கள் கூறலாம். நீங்கள் யாரென்று என்னிடம் கூற வேண்டாம்; எனக்குத் தெரியும். புரிகிறதா? ஆம், ஐயா. எனவே இப்பொழுது கவனியுங்கள், நான் அப்படியே

உங்களை எச்சரித்துக் கொண்டிருக்கிறேன். **அது சம்பவிக்கும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆமென்.**

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)









# லோத்து எச்சரிக்கப்பட்டான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**ஆதியாகமம் 19:1**

அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து:

39. இன்றைக்கு உலகத்திற்கு - அதுவும் அமெரிக்காவிற்கு - சுவிசேஷம் தேவையில்லை. அவர்கள் விரும்புவது களியாட்டே. அவர்களை மகிழ்விக்க அவர்களுக்கு ஏதாவதொன்று தேவையுள்ளது - நிறைய புதுமையான இசை அல்லது விருந்துகள், அல்லது கன்று ரோஸ்டு போன்றவை. இவையெல்லாம் நல்லதுதான் - சபைக்குப் புறம்பே. **ஆனால் சபையில் நியாயதீர்ப்பானது கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமையில் பிரசங்கிக்கப்பட்டு, எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்குகிறது. விருந்துகள் அல்ல. நியாயத்தீர்ப்பு.**

**லோத்து எச்சரிக்கப்பட்டான்.** தூதர்கள் - அவர்கள் தூதர்கள் என்று அவன் அறியவில்லை - **அங்கு சென்று, "இந்த பாவமுள்ள இடத்தை விட்டு வெளியே வா! நீ தப்பித்துக் கொள்ள தேவன் உனக்கு ஒரு வழியை உண்டாக்கியிருக்கிறார். "இந்த பாவமுள்ள இடத்தை விட்டு வெளியே வா"! என்று சோதோமுக்கு தங்கள் செய்தியை அளித்தனர்.**

~ 4 ~

## *செய்தி: 60-02-29 வருகின்ற புயல்*

★★★★★

# அந்த தூதர்கள், லோத்துவின் இடத்துக்கு வந்தபோது, லோத்து, வெளிவாசலண்டையில் உட்கார்ந்திருந்தான்





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**ஆதியாகமம் 19:1**

அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து:

16. மேலும், இந்த விதமாக, ஏதோவொன்றை (அவள் சாராள்) சொல்வதை என்னால் கேட்க முடிகிறது. ஆபிரகாமே! "நீங்கள், அவள் பெற்றிருந்த, அந்த புதிய சிகை அலங்காரத்தை பார்த்திருக்க வேண்டும், மேலும், நீங்கள் அவளையும் பார்க்க வேண்டும் என்றாள். உங்களுக்கு தெரியுமா? ஒரு அறுபது வயது ஸ்திரியானவள், தன்னை, இருபது வயதுள்ளவளாக காண்பிக்க முயற்ச்சிக்கிறாள்... ஆனால், அவைகள் தான், தேவனுடைய காரியங்களிலிருந்து, உங்கள் கவனத்தை கவர்ந்து இழுக்கிறது. அதைதான், நான் உங்களுக்கு கூற முயற்ச்சிக்கிறேன். பாருங்கள், **அந்த வயது சென்ற, பரிதாபமான, விசுவாசமுள்ள, சகோதரனாகிய, ஆபிரகாமை, அந்த காரியம், ஒரு துளியும் அசைக்கவில்லை. அவன் சர்வ சாதாரணமாக நடந்து சென்று, கூடாரத்தின் கதவண்டையில் இருந்த, நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான். அது எனக்கு பிடிக்கும்** (I like that). நீங்கள் கவனித்தீர்களா? **அந்த தூதர்கள், லோத்துவின் இடத்துக்கு வந்தபோது, லோத்து, வெளிவாசலண்டையில் உட்கார்ந்திருந்தான். ஆனால், ஆபிரகாமோ, கதவண்டையில் உட்கார்ந்திருந்தான்.** வெளி வாசலிலிருந்து,

முற்றத்துக்கு மட்டுமே போகமுடியும், ஆனால், கதவண்டையிலிருந்து, நேராக வீட்டுக்குள் போகலாம். **நான் அவரை எவ்வளவாக, இன்னும் நெருங்கி கிட்டிசேர, முடியுமோ, அவ்வளவாய், அவருடைய பலிபீடத்தின் கதவண்டையில், உட்கார்ந்திருக்க விரும்புகிறேன். பலிபீடத் தண்டையில், அவருடைய தோன்று தலுக்காக காத்துக் கொண்டிருப்பதே, என்னுடைய மேலான எதிர்பார்ப்பாகும்.**

*செய்தி: 60-03-28 கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ*

★★★★★

# அவனுடைய இருதயத்தில் இன்னுமாக, ஒரு சிறிய தீப்பொறி அளவு அனல் இருந்துக் கொண்டிருந்ததினால், வந்தவர்கள் தூதர்கள் தான் என்பதை, இனம் கண்டு கொண்டான்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**ஆதியாகமம் 19:1**

அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து:

**லோத்து, தன்னுடைய பின்மாற்றம் அடைந்த நிலையிலும் கூட, அந்த இரண்டு சுவிசேஷ தூதர்கள், செய்தியாளர்கள், சுவிசேஷகர்கள், அல்லது, உங்கள் விருப் பப்படி எப்படி அழைத்தாலும், அவர்கள் அங்கே வந்தபோது, லோத்து, வெளி வாசலண்டையில் உட்கார்ந்து கொண்டிருந் தான். அவனுடைய இருதயத்தில் இன் னுமாக, ஒரு சிறிய தீப்பொறி அளவு அனல் இருந்துக் கொண்டிருந்ததி னால், வந்தவர்கள் தூதர்கள் தான் என்பதை, இனம் கண்டு கொண்டான். அவர்கள் தேவனிடத்தில் இருந்து வந்த செய்தியாளர்களாய் இருந்தார்கள்.**

*செய்தி: 60-03-28 கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ*

★★★★★

# மற்ற இரண்டு பேரும் சோதோமிற்குச் சென்று





**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# ஆதியாகமம் 19:1

அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து:

அப்படியாகவே ஆபிரகாமும் கூட தூசி படிந்த வஸ்திரத்தோடு இருந்த இந்த மனிதனை சந்தித்தபோது அவரை தனியாக வரும்படி அழைத்ததைப் பார்க்கிறோம். **மற்ற இரண்டு பேரும் சோதோமிற்குச் சென்று சோதோமிலிருக்கிறவர்களை வெளியே அழைத்ததைப் பார்க்கிறோம். அது நம்முடைய நாட்களில் இருக்கிற நவீன கால பில்லிகிரஹாமிற்கு ஒத்ததாய் ஓர் அழகான காட்சியாய் இருக்கிறது.**

*செய்தி: 64-06-17 எல்லா காலங்களிலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட கிறிஸ்து*

★★★★★

~ 4 ~

# ஒரு பெண் தவறான தெரிந்தெடுத்தலைச் செய்திருந்த போது





63. அதன்பிறகு நான் வேறொரு ஞாபகச் சின்னத்தைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், அது ஒருநாள், ஒரு பெண் தவறான தெரிந்தெடுத்தலைச் செய்திருந்த போது. அவள் நீர்பாய்ச்சலான சம பூமியில் தங்க (stay up) கூடாது என தீர்மானித் தாள், அல்லது சோதோம் கொமோராவுடைய நீர்ப்பாய்ச்சலான சமபூமியில் தங்கியிருந்து, கூடிப்பழகும் இயல்புடையவளாய், அந்நாட்களில் இருந்த அந்த மற்ற பெண்களைப் போன்று ஜீவிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

64. வறண்ட தரிசு நில பூமியில் தங்கின சாராளைப் போன்று அவள் நல்ல தெரிந்து கொள்ளுதலைச் செய்யவில்லை. **அவள் (சாராள்) மாத்திரமே தேவனுடைய வார்த்தையை தன்னுடைய இருதயத்தில் வைத்திருந்தாள். அவள் தன்னுடைய கணவனுக்கு கீழ்ப்படிகிறவளாகவும் மிக அருமையானவளாகவும் இருந்தாள், அவள் அவ்வளவாய், அவனை, "ஆண்டவனே" என்று அழைத்தாள். அங்கு தான் தேவன் இரண்டு தூதர்களோடு இறங்கி**

**வந்து, அந்தக் கூடாரத்தில் அவர்களிடம் விஜயம் செய்தார்.**

65. **ஆனால், திருமதி. லோத்துவோ, அவள் மிகவும் உலகப்பிரகாரமாக ஆகி, உலகத்தின் காரியங்களை ஏற்றுக்கொண்டாள்.** இன்று, மிகவுமாக உலகப்பிரகாரமான சிந்தையை உடையவர்களாய் ஆக முடிகிற, நமக்கு அது என்னவொரு பாடமாக இருக்கிறது. நான் மிகவும் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், **இன்று முழு சபையும் மிகவும் உலகப்பிரகாரமான சிந்தையை உடையவர்களாக (worldly-minded) ஆகிக் கொண்டிருக்கிறது.** இப்பொழுது, ஒருக்கால், திருமதி. லோத்து, அவள் அங்கே போனபோது, அதைச் செய்ய கருதாமல் இருந்திருக்கலாம். அவள், "கூடிப்பழகும் இயல்புடையவளாய் இருப்பேன்" என்று நினைத்தாள். கூடிப்பழகும் இயல்புடையவர்களாய் இருப்பது எல்லாம் சரிதான், **ஆனால் உலகத்தின்**

## பழக்கவழக்கங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள் (take up).

*செய்தி: காலத்தால் பரீட்சிக்கப்பட்ட தேவனுடைய ஞாபகச் சின்னங்கள், ஆகஸ்டு 18, 1957* **(இந்தச் செய்தி இறுதி சரிபார்ப்பில் உள்ளது)**





ஜீவனுள்ள
தேவனுடைய
சபையானது பூமியை
சுதந்தரிக்க
வேண்டியிருப்பதால்,
அதற்கு எந்த
இரகசியங்களுமே
மறைக்கப் பட்டிராது.

67. இப்பொழுது நினைவிருக்கட்டும், அவர்களில் இருவர் தூதர்களாய் இருந்தனர். தூதர்கள் மானிட சரீரத்தில் இருந்தனர். **அவர்களில் ஒருவர் தேவனாகவே இருந்தார்.** தேவனாயிருந்த அந்த ஒருவர் கூடாரப்பக்கம் தன்னுடைய முதுகை திருப்பியிருந்தார்.

68. **சாராள் கூடாரத்தில் இருந்தாள். ஒரு ஸ்திரீ ஒவ்வொரு முறையும் யாராவது ஒருவர் வரும்பொழுது, அவளுடைய கணவன் என்ன செய்ய வேண்டும் என்று கூறும்படி வெளியே செல்லாமல், அதைப் போன்ற தன்னுடைய இடத்தில் தங்கியிருப்பதையே நான் காண விரும்புகிறேன். ஆனால் அவள் கூடாரத்தில் இருந்தாள்.** எனவே ஒருக்கால் அவள் ஏதோ ஒன்றை செய்து கொண்டு அல்லது தட்டுமுட்டு பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந் திருப்பாள் என்பதில் சந்தேகமேயில்லை.

69. **தேவனாயிருந்த இந்த ஒருவர், சோதோமையே நோக்கியவாறு பார்த்துக் கொண்டிருந்தார். மேலும் அவர் என்ன செய்யப் போவதாக இருந்தார் என்பதை**

**அவர் அவர்களிடத்தில் கூறினார். எனவே இரண்டு தூதர்களும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அங்கே சென்றனர். ஆனால் தேவனாய் இருந்த அந்த ஒருவர் அங்கேயே இருந்துவிட்டார். மேலும், அவர், "எனக்குத் தெரிந்த இரகசியங்களை நான் ஆபிரகாமிற்கு மறைத்து வைக்கப் போவதில்லை. ஏனென்றால் அவன் உலகத்தின் சுதந்தரவாளியாக இருக்கப் போகிறானே" என்றார்.**

70. **ஓ, சபையே, இந்த காலையில் நாம் கர்த்தருடைய வருகையின் இரகசியங்களை அறிந்து கொள்ள உரிமை பெற்றுள்ளோம்.** ஏனென்றால், "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப் படுவார்கள். நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்." **ஆகையால் ஜீவனுள்ள தேவனுடைய**

**சபையானது பூமியை சுதந்தரிக்க வேண்டியிருப்பதால், அதற்கு எந்த இரகசியங்களுமே மறைக்கப் பட்டிராது.**

*செய்தி: 59-03-01*M *வாசல் இடுக்கமாய் உள்ளது*

# சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது ஒரு அவிசுவாசியை குருடாக்குகின்றது





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**ஆதியாகமம் 19:1**

அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து:

216. நான்... அவருடைய பிரசன்னத்தை மாத்திரம் உணருகிறேன். அவர் இங்கே இருக்கின்றார் என்பதை நான் அறிவேன். கவனியுங்கள். **இயேசு, "சோதோமின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் காலத்திலும் அப்படியிருக்கும்" என்று கூறினார்.** பாருங்கள்? அது என்ன? **சோதோமின் காலத்தில் இருந்தது போலவே ஒரு காலம். சோதோமில் இருந்தது போலவே, சோதோமின் பாவத்தைப் போலவே இருக்கும் தாறுமாறைக் கவனியுங்கள். இந்த தேசத்தைப் பாருங்கள். மற்ற தேசங்களைப் பாருங்கள்.**

217. **லாஸ் ஏஞ்சல்ஸில் சமீபத்தில் நான் ஒரு செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்தேன். கடந்த வருடத்தில் ஆண்புணர்ச்சிக்காரர் நாற்பது சதவிகிதம் அதிகரித்துள்ளனர்.** ஏன்? ஆண்களின் இயற்கையான நாட்டத்தின் தன்மை மாறுகின்ற அளவிற்கு பெண்கள் தங்கள் உடலை வெளிக்காண்பித்துள்ளனர்.

**ஆண்புணர்ச்சிக்காரர், "சோதோமின் நாட்களில் நடந்தது போல ......"** கவனியுங்கள். நீதிமானாகிய லோத்தும் தன்னுடைய குடும்பமும் அங்கே இருந்த போது, அவன் அந்த நகரத்தின் மேயர் ஆனான் அல்லது அந்த நகரத்தின் வாசலில் இருந்து ஒரு நீதிபதியாக ஒரு மகத்தான அறிவாற்றல் திறமிக்கவனாக இருந்தான். **ஆனால் அந்த இடத்தின் பாவங்கள் அவனுடைய நீதியான ஆத்துமாவை அனுதினமும் வாதித்தது.**

218. **முடிவின் சமயத்திற்கு முன்னர் ஒரு நாளிலே தெரிந்து கொள்ளப்பட்ட சபையாகிய ஆபிரகாம் வெளியே அழைக்கப்பட்டான். அது சோதோமிற்குள்ளாகச் செல்லவில்லை. அது சோதோமிற்கு வெளியே சென்றது.** இப்பொழுது, **எப்பொழுதுமே இருக்கின்ற இந்த மூன்று வகையான மக்களைக் கவனியுங்கள். ஒரு விசுவாசி, ஒரு பாவனை விசுவாசி மற்றும் ஒரு அவிசுவாசி எப்பொழுதுமே மக்களின் மத்தியில் இருக்கின்றனர். அது, ஆபிரகாம்,** **லோத்து மற்றும் அந்த சோதோமியர்,** இப்பொழுது கவனியுங்கள்.

ஒவ்வொருவரும் ஒரு செய்தியைக் கொண்டிருந்தனர். தெரிந்து கொள்ளப்பட்ட சபையாகிய ஆபிரகாமிடத்தில் மூன்று தூதர்கள் வந்தனர். **அவர்களில் இரண்டு பேர் சோதோமிற்குச் சென்று லோத்துவையும் அவனுடைய மனைவி மற்றும் குமாரத்திகளையும் வெளியே கொண்டு வந்தனர். லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்தாள். சோதோமியர் எரிக்கப்பட்டனர்.**

219. **அவர்களில் இரண்டு பேர்** - **ஒரு நவீன பில்லி கிரஹாம் மற்றும் ஒரு ஓரல் ராபர்ட்ஸ்,** அவனுடைய செய்திகள் சோதோமிற்குள்ளாகச் சென்று வார்த்தையை பிரசங்கித்து அந்த வார்த்தையைக் கொண்டு அவர்களைக் குருடாக்கினர். **வார்த்தையை அவிசுவாசிப்பதென்றால் நீ குருடாயிருக்கின்றாய் என்பதே. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது ஒரு அவிசுவாசியை குருடாக்குகின்றது.**

**அதைத் தான் பில்லி கிரஹாம் மற்றும் அந்த மகத்தான சுவிசேஷகர்கள் செய்துக் கொண்டிருக் கின்றனர். குருடாக்கிக்கொண்டிருக் கின்றனர்.**

*செய்தி: 62-06-07 தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுதல்*

★★★★★

# அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?



## செய்தி: அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?

20. இங்கு தாவீது குமாரனாகிய இயேசு பெத்லகேமில், பெரிய தேவாலயங்களின் நிழலில் பிறந்தார். அந்த ஜனங்கள் பயிற்சி பெற்று, அத்தனை ஆண்டுகளாக மேசியாவை எதிர்நோக்கியிருந்தனர். நாலாயிரம் ஆண்டு களுக்கு முன்பே, மேசியா தோன்றுவார் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. மேசியா தேவாலயத்தின் நிழலில் பிறந்த அந்த பெரிய செய்தியை தேவதூதன் ஏன் மலையிலிருந்த படிப்பில்லாத, பயிற்சி பெற்றிராத மேய்ப்பர் களுக்கு அறிவித்து, அவர்கள் அந்த முதல் செய்தியை மற்றவர்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்? மற்றவர்களுக்கு அறிவிக்க அனுப் பப்பட்ட மேய்ப்பர்கள்! ஞானிகளும் பயிற்சி பெற்றவர்களும் அல்ல. ஆனால் மேய்ப்பர்கள். அது விசித்திரமான செயல் அல்லவா? ஆனால் அந்த ஏன் என்னும் கேள்வி

எங்காவது இருக்க வேண்டும். ஏன் என்னும் கேள்வி இருந்தால், அதற்கு ஒரு பதில் ஏன் என்பதற்கு இருந்தாக வேண்டும், தேவனைத் தவிர வேறு யாருக்கும் பதில் தெரியாது. அவர் ஒருவருக்கு மாத்திரமே பதில் தெரியும்.

21. இப்பொழுது, நினைவிருக்கட்டும், மேசியா ஏற்கெனவே ஊரில் இருந்தார். அந்த ஊரில், முன்னணையில் பிறந்திருந்தார். அந்த பெரிய ஆலயங்களின் அருகில்; அங்கு பிரதான ஆசாரியன்... பெரிய ஆசாரியர்களும், வேத சாஸ்திரிகளும், ஞானிகளும், சாஸ்திரி களும் பயிற்சி பெற்றவர்களும் மேசியாவுக்காக காத்திருந்தனர். அவரோ அதோ அவர்களுக்கு மத்தியில் இருந்தாரே! ஆனால் தேவ தூதர்கள் ஏன்... யூதேயாவின் மலைகளிலிருந்த படிப்பில்லாத, பயிற்சி பெற்றிராத, நாகரீகமற்ற, எல்லோரைக் காட்டிலும் ஏழையானவர்களிடத் தில் செல்ல வேண்டும்? இந்த செய்தி வெளிப்படுவதற்கும், அவர்கள் சென்று அந்த செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கவும் அவர்கள் மிகவும் தகுதியற்றவர்களாகக் காணப்பட்டனர்.

**கவனியுங்கள், வானாதி வானங்கள் பூமியிலுள்ள மிகவும் தாழ்மையான, படிப்பில்லாத ஜனங்களை கௌரவிக்க விரைந்து வருகிறது**

22. என் கருத்து என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? அது அவ்வளவு முக்கியமாகத் தென்படாமலிருக்கலாம், ஆனால் நான் என் கருத்தை தெரிவிக்க விரும்பு கிறேன். ஞானிகள் அப்படிப்பட்ட ஒரு செய்தியை அது அளிக்கப்பட்ட விதமாகவே ஏற்றுக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை தேவனுடைய ஞானம் அறிந்திருந்தது என்று நான் நினைக்கிறேன். அது அவர்களுடைய படிப்புக்கு ஒத்ததாக அமைந்திருக்கவில்லை.

அது வித்தியாசமாக இருந்தது. அவர் எப்படி இருப்பார் என்று தங்கள் வேத சாஸ்திர பயிற்சியின் மூலம் அவர்கள் கொண்டிருந்த கருத்துக்கு மாறாக அது அமைந்திருந்தது. அவர்களுடைய பயிற்சி அனைத்தும், அவர்களுடைய எல்லா வேத சாஸ்திர படிப்பும் அது ஒன்றுமற்றதாய் போனது. அப்படிப்பட்ட ஒரு செய்தியை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று தேவஞானம் அறிந்திருந்தது என்று நான் நினைக்கிறேன்.

23. மேசியா அங்கிருந்தார், அதை யாராகிலும் ஒருவர் அடையாளங் கண்டு கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட வேத சாஸ்திரத்தின் மூலம் குழப்பமடையாதவர்கள் யாரென்பதை அவர் அறிந்திருந்தார். தங்கள் சொந்த வழிகளில் சென்று குழப்பமடைந்து, எதுவுமே, தேவனுடைய வார்த்தையும் கூட, அவர்களை மாற்ற முடியாது என்னும் நிலையிலிருந்த இவர்களைக் காட்டிலும் படிப்பில்லாத கூட்டத்தினருக்கு தமது செய்தியை அறிவிப்பது அவருக்கு எளிதாயிருந்தது.


Parson

24. இப்பொழுது, கிறிஸ்தவ நண்பனே, முழு உத்தமத்தோடும், அன்போடும் உன்னிடம் நான் இந்தக் கேள்வியைக் கேட்கட்டும். அவர் இன்றிரவு அதே விதமான ஒரு செயலைப் புரிந்து, இந்த சந்ததிக்கென்று வாக்களிக்கப் பட்டுள்ள வார்த்தையை இந்த சந்ததியிலுள்ள நமக்கு அனுப்புவாரானால், நமது வேத சாஸ்திரிகளும், கல்வி கற்றவர்களும், ஞானிகளும், அவர்கள் அன்று செய்தது போலவே செய்தியை புறக்கணிக்கமாட்டார்களா என்று வியக்கிறேன். மனிதன் மாறுகிறதில்லை, தேவனுடைய வார்த்தையும் மாறாததாயுள்ளது. அவர் மாறாத தேவன், அவர் மாறுவதில்லை!

25. கவனியுங்கள், தேவ தூதர்கள் தோன்றி... இந்த எளிய, படிப்பில்லாத மேய்ப்பர்களைக் காட்டிலும் தகுதி வாய்ந்த மனிதர் இருந்த போது, (உலகப் பிரகாரமாக நினைத்துப் பார்க்கும் போது) தேவ தூதர்கள் வந்து தங்கள் செய்தியை மிகவும் தாழ்வான இந்த மனிதர்களுக்கு அறிவித்தனர். மேய்ப்பன் எல்லோரைக் காட்டிலும் மிகவும் படிப்பில்லாதவன். அவனுடைய ஆடுகளைத்

தவிர வேறொன்றும் அவனுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. அவனுக்கு கணிதம் தெரிய வேண்டிய அவசியமில்லை. அணுவை எப்படி பிளப்பதென்று அவனுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. அவனுக்கு சிறந்த படிப்பு அவசியமில்லை. அவனுக்கு அவனுடைய ஆடுகளைக் குறித்து தெரிய வேண்டும். அவ்வளவு தான் அவனுக்குத் தெரிய வேண்டும். எல்லா ஞானத்துக்கும் ஊற்றுக்கும் உறைவிடமாயுள்ள தேவன், தமது பெரிதான ஞானத்தினால் அப்படிப்பட்ட ஒரு மனிதனை (அப்படிப்பட்ட மனிதர்களை) தெரிந்து கொண்டு, இதை அறிய நன்கு பயிற்சி பெற்றிருந்த அறிவாளிகள் அனை வரையும் அசட்டை செய்து விட்டார். அவர்கள் தவறான துறையில் பயிற்சி பெற்றிருந்தனர் என்ற ஒரு காரியத்தையே அது காண்பிக்கிறது. தேசத்திலிருந்த முக்கியமான வர்கள் எல்லோரையும் அவர் கடந்து; அவர் முக்கியமானவர்கள், சிறந்த போதகர்கள், பிரதான ஆசாரியனாகிய காய்பா, இன்னும் அநேக பெரிய மனிதர், இஸ்ரவேல் அனைத்

திலும் அதிகம் படித்தவர்கள், ஸ்தாபனங்கள் பெருமையடித்துக் கொண்ட வேத சாஸ்திரிகள், இவர்கள் ஒருவரையாகிலும் தெரிந்து கொள் ளாமல் தேவன் அவர்கள் ஒவ்வொருவரையும் கடந்து சென்று விட்டாரே! அதுவே தேவ னுடைய ஞானமாயுள்ளது.

26. கவனியுங்கள், வானாதி வானங்கள் பூமியிலுள்ள மிகவும் தாழ்மையான, படிப்பில் லாத ஜனங்களை கௌரவிக்க விரைந்து வருகிறது. வானாதி வானங்களில் பெரியவர் தம்மை வெளிப்படுத்த மற்றெல்லாரையும் கடந்து வந்து பூமியில் மிகவும் தாழ்வான, சாதாரண ஆடு மேய்ப்பவர்களுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். இந்த சாதாரண ஆடு மேய்ப்பர்களுக்கு, எல்லா காலங்களுக்கும் மிகப் பெரிதாக விளங்கின செய்தியை அளிக்க வருகிறார். அநேக பெரிய செய்தியாளர்கள் இருந்திருக்கின்றனர். நாம் நோவாவின் காலம், தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் போன்றவர்களை நினைத்துப் பார்க்க விரும்புகிறோம். அதிகம் படித்தவர்கள், ராஜாக்கள், அதிபதிகள், அரசர் கள் போன்றவர் இருந்திருக்கின்றனர். ஆனால்

இதோ அவர் எல்லா செய்திகளைக் காட்டிலும் மிகவும் மகத்தான செய்தியுடன் வருகிறார். அந்த செய்தி என்ன? "மேசியா இப்பொழுது இங்கிருக்கிறார்." புரிகிறதா? அதை அறிவிக்க, அவர் பயிற்சி பெற்ற அனைவரையும் தள்ளி வைத்து விட்டு, தாழ்மையுள்ள மேய்ப்பர்களுக்கு அதை அறிவிக்கிறார்.



27. இதைக் குறித்து யோசித்துப் பாருங்கள். எல்லா குருவானவர்களும், எல்லா சபையோர்களும், எல்லா போதகர்களும்,

பணம் நிறைய செலவழித்து, வேத சாஸ்திர பயிற்சி பெற்ற அனைவரும், எல்லா சபை களும், உபதேசங்களும், ஸ்தாபனங்களும், இவையனைத்தும் தள்ளி வைக்கப்பட்டன. வேத சாஸ்திரத்தைப் போதிப்பதற்கென அவர்கள் நிறைய பணம் செலவழித்து எல்லா–எல்லா மிஷனரிமார்க்கங்களையும் உருவாக்கி, எல்லா மனம் மாறுதல், சபை அங்கத்தினர் கள், தேவனை கனப்படுத்த அவர்கள் செய் வதாக எண்ணியிருந்த அனைத்தும்; இருப்பி னும் முக்கியமான செய்தி அவர்களிடமிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டது. விசித்திரமானது! ஏன்? புரிகிறதா?

28. கவனியுங்கள், அது மாத்திரமல்ல, அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நேரிடக்கூடாத ஒரு இடம் அது. மேய்ப்பர்கள் தான் செய்தியை பெற்றுக் கொண்டவர்களாயிருந்தனர். அந்த செய்தி எங்கு அறிவிக்கப்பட்டதென்று கவனி யுங்கள். அது நேரிடுமென்று யாருமே எதிர் பாராத இடத்திலாகும். அது போன்று இன்றிரவு நாம் கர்த்தராகிய இயேசுவின் உண்மையான செய்தியை எதிர்நோக்கி கொண்டிருப்பவர்களா

யிருப்போமானால், அது இப்படிப்பட்ட எதிர் பாராத ஒரு குழுவில், ஒரு இடத்தில், இன்றைய மிகுந்த நாகரீகமுள்ள உலகமும் சபையும் மதத்துரோகிகளின் கூட்டம் என்று கருதுபவர்களிடையே காணப்படுமா என்று வியக்கிறேன். அது தான் நாம் அவரைக் காணக்கூடிய இடமாக இருக்குமாவென்று வியக்கிறேன். மிகவும் நேரிடக்கூடாத இடத்தில் மிகவும் தகுதியற்ற பேச்சாளர்களுக்கு, மேய்ப் பர்களுக்கு பேசவே தெரியாது. அவர்களுக்கு ஆடுகளைக் கூப்பிட மாத்திரமே தெரியும். ஒருக்கால் அதன் காரணமாகத்தான் அந்த செய்தி அவர்களிடம் வந்திருக்கக்கூடும்.

29. ஆனால் வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட வார்த்தை இருந்தது. அது மறுபடியும் அதையே செய்ய முடியும்.

30. அது தேசத்திலிருந்த உயர் குடும்பத் தைச் சேர்ந்த அனைவரையும் ஒதுக்கிவிட்டது. அது பெருமக்கள் அனைவரையும் ஒதுக்கி விட்டு, ஒன்றுமற்றவர்களுக்கு அதை வெளிப் படுத்தினது. தெய்வீகத்திலும், மனோதத்துவத் திலும் பெரிய பாண்டித்தியம் பெற்றவர்கள்,

உயர்ந்த கல்வி பெற்றவர்கள் போன்ற பெரு மக்களையும், பெரிய ஆலயங்களையும் அது ஒதுக்கிவிட்டு, ஒன்றுமற்றவர்களுக்கு அதை வெளிப்படுத்தினது.



Tidings of Great Joy (the Angel Appears to the Shepherds), by Walter Rane, courtesy Church Histo

சர்வ வல்லமையுள்ள தேவனின் ஞானம், அளவற்ற ஞானம், இதை செய்து, "மேசியா இப்பொழுது பூமியில் இருக்கிறார்" என்னும் மிக மகத்தான செய்தியை அவர்களுக்கு அறிவித்தது. என்னே ஒரு ஞானம்! ஞானத்தை அறிந்திருக்கும் தேவ னிடத்திலிருந்து மாத்திரமே அது வர முடியும். உலக ஞானமும், பள்ளி படிப்பும், மற்ற வைகளும் வீணாகி, தேவனுடைய மகத்தான ஞானத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டது. இது ஆழமாகப் பதிய வேண்டும் என்பதற்காகவே இதை திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். எல்லாமே வீணாயிற்று, அது உபயோக மற்றதாகிவிட்டது. தேவனுடைய ஞானம், அதன் வழியின் உரிமையைக் கைக்கொண்டு, இவையனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, ஒன்றுமற்றவர்களை தேவன் முக்கியம் வாய்ந்தவர்களாக்கும்படி செய்கிறார்.

★★★★★

# ஒரு மனிதன் எங்ஙனம் தேவனை மேற் கொள்ள முடியும்? உங்களால் முடியும். உங்களால் முடியும். ஒரு மனிதன் தேவனை மேற்கொள்ள முடியும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதறல்

Jeffersonville, Indiana, USA

63-09-01E

---

56. கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு வேதத்தில் காணப்படும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

தொடக்கத்தில் யாக்கோபு விசாரமற்ற ஒருவனாக இருந்தான். சேஷ்டபுத்திரபாகம் அவனுக்கு மிகவும் முக்கியமானது என்று அவன் மனதில் எண்ணம் கொண்டான். அதை எந்த வழியிலாகிலும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அவன் முயன்றான். அதைப் பெற்றுக் கொண்ட பின்னர் எல்லாமே சரியாயிற்று என்று அவன் நினைத்தான். ஏசா மான் வேட்டையாடிவிட்டு களைப்பாக வந்தான். அவனுக்கு அதிக பசி உண்டாயிற்று. ஒரு பெரிய பானை நிறைய கூழ் அவனுக்கு தேவைப்பட்டது. அதைக் கண்டபோது, நாள்

முழுவதும் நடந்து களைத்துப்போய் பசியுற்றிருக்கும் ஒரு மனிதனுக்கு மிகவும் சோதனையாக இருந்திருக்கும், அவன் தன் சகோதரனாகிய யாக்கோபிடம், "நான் மயக்க நிலையில் இருக்கிறேன். இதில் எனக்குக் கொஞ்சம் தா" என்று கெஞ்சினான்.



யாக்கோபு, "நீ எனக்கு சேஷ்ட புத்திர பாகத்தைத் தருவதாக ஆணையிட்டுக் கொடுத்தால் நான் தருவேன்" என்றான். பாருங்கள்? எந்த வழியில் அதைப் பெற்றாலும் அவனுக்குக் கவலையில்லை. எனவே அவன் அதைப் பெற்றுக் கொண்டான். சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு எல்லாமே முடிவுற்றது என்று அவன் நினைத்தான். (சகோ.

பிரான்ஹாம் பீடத்தை நான்கு முறை தட்டு கிறார் – ஆசி).

57. பெந்தெகொஸ்தேயினரே, அங்கு தான் நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள். தேவனுடைய ஆவியினால் நீங்கள் மறுபடியும் பிறந்துவிட்டீர்கள். சேஷ்டபுத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டீர்கள் என்பதால் எல்லாமே முடிவுற்றது என்று எண்ணம் கொண்டீர்கள். அது தொடக்கம் தான். அது தொடக்கம் தான். “அவருக்குச் செவி கொடுங்கள்” என்னும் செய்தி உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்த பிறகு அது மகனாக வளர்கிறது. அதற்கு பிறப்புரிமை உண்டு. ஆனால் குழந்தையிலிருந்து அது பயிற்சி பெற்று, நிரூபிக்கப்பட வேண்டியதா யுள்ளது. அவன் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதவன் என்று நிரூபிக்கப்பட்டால், அவன் சுதந்தரவாளியாக முடியாது. தகப்ப னுடைய வேலையில் அவன் சிரத்தை காண் பிக்காமல் போனால் அவன் சுதந்தரவாளியாக முடியாது.

அது போன்று, பரிசுத்த ஆவி பெந்தெகொஸ்தே மக்களின் மீது விழுந்த போது, அவர்கள் ஆவியின் வரங்கள் போன்றவைகளை மீண்டும் பெற்றுக் கொண்டனர். அவர்கள் ஆவியினால் மறுபடியும் பிறந்த காரணத்தால், எல்லாம் முடிவடைந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டனர். ஆனால் மகன் அவனுடைய ஸ்தானத்தில் பொருத்தப்பட வேண்டியவனாயிருக்கிறான். அவன் தகப்பனுக்கு உண்மையாயிருப்பான் என்று நிரூபிக்கப்பட்ட பின்னர், அவன் பொதுவான ஸ்தலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அவனுடைய அங்கி கழற்றப்பட்டு, வேறொரு அங்கி அவனுக்கு உடுத்துவிக்கப்படும், அதன் பின்னரே அவன் மகனாக நியமிக்கப்பட்டு அவன் தகப்பன் பெற்றுள்ள அனைத்திற்கும் சுதந்திரவாளியாகிறான்.

58. தேவன் அதைதான் தமது குமாரனுக்கு மறுரூப மலையின் மேல் செய்தார். அவர் ஒரு மேகத்தினால் நிழலிடப்பட்டு மறுரூபமானார். அவருடைய வஸ்திரம் சூரியனைப் போல் வெண்மையாயிற்று. ஒரு சத்தம், “இவர்

என்னுடைய நேசக் குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். மோசேயும் நியாயப்பிர மாணமும் தவறின. இதுதான் இவர். இவருக் குச் செவி கொடுங்கள்'' என்றது. அவர் குமாரன் ஸ்தானத்தில் நியமிக்கப்பட்டார். பாருங்கள்?



The Transfiguration by Carl Bloch

59. சேஷ்ட புத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டதனால் எல்லாமே முடிந்துவிட்டது என்று யாக்கோபு கருதினான். பெந்தெ கொஸ்தே மக்களும் அவ்வாறே கருதி, தங்களை ஸ்தாபித்துக் கொள்ள ஆரம்பித்த னர். ஒருத்துவம், திரித்துவம் போன்ற எல்லா வித ஸ்தாபனங்களும் உண்டாகி, ஒருவரோ டொருவர் சண்டையிட்டுக்கொண்டு, அதன் மூலம் அவர்களிடம் 'அடையாளம்' (Token) காணப்படவில்லை என்பதை நிரூபித்தனர். அவர்களிடையே குரோதம், விரோதம் சண்டை... பாருங்கள்? அவர்கள் அங்குதான் சென்றுவிட்டனர்.

யாக்கோபு அப்படித்தான் நினைத்தான். ஆனால் அவனுடைய ஜீவனைக் குறித்த பயம் ஓரிரவு அவனுக்குள் குடி கொண்டது, அவன் பதறல் கொண்டான். "என்னைக் கொன்று போட ஆற்றின் அக்கரையில் என் சகோதரன் காத்துக் கொண்டிருக்கிறான்" என்னும் நினைவு அவனைக் கலங்கடித்தது. அவன் பெற்றுக் கொண்ட அந்த சேஷ்ட புத்திரபாகமே. அவன் உயிரிழக்க காரணமாயிருக்கும் போலிருந்தது.

அவ்வாறே, நீங்கள் எந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்தீர்களோ, நீங்கள் கவனமாயிராமற் போனால், அதே பரிசுத்த ஆவி உங்களை முடிவில் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தும். அது உண்மை. நோவாவைக் காப்பாற்றின அதே தண்ணீர்தான் உலகத்தை நியாயந்தீர்த்தது. நீங்கள் 'மத வைராக்கியம்' (Fanaticism) என்றழைக்கும் அதுவே உங்களை உங்கள் வாழ்க்கையின் இறுதியில் குற்றப்படுத்தும்.



60. அவன் வாழ்க்கை முடிவடையப் போகிறது என்று யாக்கோபு அறிந்தான். அவன் சகோதரன் அவனைச் சந்திக்க

நானூறு ஆட்களுடன் புறப்பட்டு வருகிறான் என்னும் செய்தியை ஒருவன் கொண்டு வந்தான். திகில் அவனைச் சூழ்ந்தது. அவன் ஒரு மனிதனை காளைகளுடனும், ஆடுமாடு களுடனும் முன்னால் அனுப்பி, அவனுடைய சகோதரன் ஏசாவுக்கு சமாதான காணிக்கை யளிக்க விரும்பினான். அதன்பின்பு அவன் குழுக்களை ஒன்றன் பின் ஒன்றாக அனுப்பி, அவன் கோபத்தைத் தணிக்க முயன்றான். "இவையாவும் அவன் கோபத்தைத் தணிக்காது. ஒருக்கால் அவன் என்னைக் காட்டிலும் ஐசுவரியவானாயிருக்கலாம். இதெல்லாம் அவனுக்குத் தேவையிருக்காது" என்றும் அவன் நினைத்தான். அவன் தனது மனைவி களையும் பிள்ளைகளையும் ஏசா காணும்படி முன்னால் அனுப்பினான்; நிச்சயமாக ஏசா தன் மருமக்களைக் கொல்லமாட்டானென்று நினைத்தான். இருப்பினும் அவனால் ஒன்றும் முடியவில்லை. ஒரு மனிதனை எப்படி பிடிக்க வேண்டுமென்று தேவனுக்கு தெரியும். யாக்கோபு ஆற்றைக் கடந்தான். அங்கு அவன் முழங்காற்படியிட்டான். அதற்கு முன்பு

சற்று நாணமுள்ளவனாக இருந்தான். 'யாக்கோபு' என்பதற்கு 'எத்தன்' என்று பொருள்; அவன் எத்தனாக இருந்தான். ஆனால் ஏதோ ஒன்று அவனுக்கு சம்பவிக்க வேண்டியதாயிருந்தது. அவனுக்கு முன்பாக மரணம் படுத்துக்கிடப்பதை அவன் கண்ட போது, அவன் பதறினான்.



61. இங்கு அமர்ந்திருக்கும் அநேக ஆண்கள், பெண்கள் முன்னிலையில் மரணம் ஒருக்கால் படுத்துக் கிடக்கலாம். அதை அகற்ற வேண்டுமானால், அதற்கான ஒரே வழி பதறல் கொண்டு அவரிடம் வருதலேயாகும். "இன்றிரவு அதை நான் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுதே பெறவேண்டும். இல்லையேல் எனக்கு விமோசனம் இல்லை". நாளை என்றால் தாமதமாகியிருக்கும். இப்பொழுதே அதை நான் பெற்றுக் கொள்ளவேண்டும் நீங்கள் அடையாளமாகிய பரிசுத்த ஆவியின்

அபிஷேகத்திற்காக ஜெபம் செய்யும்போது, “ஆண்டவரே, நான் சென்று முயற்சி செய் வேன். ஆனால் எனக்கு சிறிது களைப்பாயுள் ளது” என்று கூறாதீர்கள். அப்படியானால் நீங்கள் உங்கள் இருக்கையிலேயே அமர்ந்து கொண்டு. எவ்வித முயற்சியும் செய்ய வேண்டாம். “நான் ஜெப வரிசையில் சென்று எண்ணெயை என் தலையில் பூசிக் கொள் வேன். அதனால் ஏதாவது உபயோகமுண்டா என்று பார்க்கலாம்” என்று கூறுவீர்களானால் அந்த பதறும் நிலைக்கு வரும் வரைக்கும் உங்கள் இருக்கைகளிலேயே அமர்ந்திருப்பது நல்லது. மரணத்துக்கும் ஜீவனுக்குமிடையே யுள்ள அந்த பதறும் நிலைக்கு முழு சபையுமே வரவேண்டும். இப்பொழுதே பெற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையேல் மடிந்து போக வேண்டும் என்னும் நிலைக்கு நீங்கள் வரும் போது, தேவன் அங்கு வந்து கிரியை செய்கிறார். தேவனை அங்கு கொண்டு வருவதற்கு பதறல் அவசியமா யுள்ளது.

62. யாக்கோபு என்றும் இல்லாத அளவுக்கு கதறினான். அவன் தேவனைப் பிடித்துக் கொள்ளும் வரை, அவனுடைய கலக்க நிலையில் அவரை கூப்பிட்டான். பதினைந்து நிமிடங்கள் மாத்திரம் அவன் அவருடன் போராடவில்லை; அவரைத் தன் ஆத்துமாவில் இருத்திக் கொள்ள அன்றிரவு முழுவதும் அவருடன் போராடினான். அப்படி செய்தும் கூட அவன் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றுணர்ந்தான். ஆசீர்வாதம் பெறும் வரை அவன் அவரை இறுகப் பற்றிக் கொண்டான்; அதுவரை அவன் அவருடன் தீவிரமாய் போராடினான். கர்த்தர் அங்கு வந்தார். அவன், "நான் உம்மைப் போகவிடமாட்டேன்" என்று கலக்க நிலையில் அவரிடம் கூறினான். அப்பொழுது அவன் மேல் ஆசீர்வாதம் இறங்குவதை அவன் உணர்ந்தான்... அநேகர், "தேவனுக்கு மகிமை, நான் இப்பொழுது பெற்றுக் கொண்டுவிட்டேன்" என்கின்றனர். நீங்கள் அங்குதான் ஏமாந்து விட்டீர்கள் ஆமாம்!

சிலர் சகோ. பிரான்ஹாமே, “எனக்கு நல்லுணர்வு தோன்றுகிறது. நான் அங்கு ஜெபித்தேன். ஒரு நடுக்க உணர்ச்சி எனக்குள் தோன்றினது...” என்கின்றனர். ஒருக்கால் அது தேவனாயிருக்கலாம். “எனக்கு முன்னால் ஒரு பெரிய வெளிச்சத்தைக் கண்டேன்” எனலாம். அதுவும் ஒருக்கால் தேவனாயிருக்கலாம். ஆனால் அதைக் குறித்து இப்பொழுது நான் கூற வரவில்லை.



63. எபிரேயர் 6-ம் அதிகாரத்தில் வேதம், “மழை நீதியுள்ளவர் மேலும் அநீதியுள்ளவர் மேலும் பொழிகின்றது” என்று கூறுகிறது

(மத்.5:45 - தமிழாக்கியோன்). (சகோ. பிரான்ஹாம் பீடத்தை ஏழு முறை தட்டுகிறார் - ஆசி) நீங்கள் கோதுமையையும் களை யையும் வயலில் வையுங்கள். உண்மையில் மழை கோதுமைக்காகவே அனுப்பப்படுகின்றது. ஆனால் அது களைகளின் மேலும் விழுகின் றது, மழை பெற்றதனால், கோதுமை பயிர் போலவே களைகளும் மகிழ்ச்சியடைகின்றன. அதே பரிசுத்த ஆவி அவிசுவாசியின் மேலும் விழுந்து, விசுவாசியைப் போலவே அவனை நடக்கச் செய்யும். ஆனால் அவர்களுடைய கனிகளினால் அவர்கள் அறியப்படுகின்றனர். அதைக் குறித்துதான் நான் இப்பொழுது பேசிக் கொண்டிருக்கிறேன்; அதுதான் 'அடையாளம்' (Token)

64. யாக்கோபு பதறல் கொண்டு, "நான் உம்மைத் தொட்டு உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். நீர் என்னோடு இருக்கிறீர். ஆனாலும் நான் உம்மைப் போகவிடமாட்டேன்" என்றான். சிலர் முதல் உணர்ச்சி தோன்றினவுடனே நல்லது என்று நினைத்து, மேலும் கீழும் குதித்து, பீடத்திற்குச் செல்லும் வழியில் ஓடி, "நான்

பெற்றுக் கொண்டேன். நான் பெற்றுக் கொண்டேன்'' என்கின்றனர். ஓ, இல்லை, இல்லை! அவனை வித்தியாசமான ஆளாக்க ஏதோ ஒன்று நிகழும் வரைக்கும் அவன் அதிலே நிலைத்திருந்தான். அவன் மேற்கொள் ளும் வரை அதில் நிலை நின்றான் என்பதாக வேதம் கூறுகின்றது. ஒரு மனிதன் எங்ஙனம் தேவனை மேற்கொள்ள முடியும்? உங்களால் முடியும். உங்களால் முடியும். ஒரு மனிதன் தேவனை மேற்கொள்ள முடியும்.

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. நன்றி.*

# அதே ஆறாவது புலன்தான் என்றாவது ஒரு நாளிலே சபையை எடுத்துக்கொண்டு, மகிமைக்குள்ளே கொண்டு செல்லும்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## *செய்தி:* 60-0611E **விசுவாசமானது ஆறாவது புலனாகும்** Chatauqua, Ohio, USA #42

42. அது என்ன? அந்த ஆறாவது புலனை பற்றிக் கொண்டிருத்தல். ஏதோ ஒன்று அதை உண்மையாக்கிவிடுகின்றது. ஆம் ஐயா. இந்த ஆறாவது புலனின் மூலம் இராஜ்ஜியங்கள் ஜெயிக்கப்பட்டன. ஆமென். ஆறாவது புலன் இராஜ்ஜியங்களை ஜெயம் கொள்ளச் செய்தது. இந்த ஆறாவது புலனின் மூலமாகத்தான் எரிகோவின் மதில்கள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆமென். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? ஆறாவது புலனின் மூலமாகத்தான் எரிகோவின் மதில்கள் தரையில் விழுந்தன. இந்த ஆறாவது புலனின் மூலமாகத்தான் பவுலை கடல் விழுங்கக் கூடாதபடிக்கு ஆனது. எல்லா நம்பிக்கையும் அற்றுப் போன நிலையில் அவன் அங்கே இருந்தபோது கர்த்தருடைய தூதனை அவன் தரிசனத்தில் கண்டான். அவன் திரும்பி வந்து "தைரியமாயிருங்கள்" என்று கூறினான். காரணம் என்ன? இரவும் பகலுமாக பதினான்கு நாட்கள் சந்திரனோ, நட்சத்திரங்களோ, எதுவுமே இல்லாமல்

மிகவுமாக இருண்டு போயிருந்தது. எப்பொழுதும் இல்லாத அளவிற்கு புயல் பயங்கரமாக இருந்தது. ஆனால் அவன் கர்த்தருடைய தூதனை அவன் கண்டபொழுது அந்த ஆறாவது புலன் கிரியை செய்ய ஆரம்பித்தது. அல்லேலூயா. அந்த ஆறாவது புலனால் பேதுருவை சிறைச் சாலையில் வைக்க இயலவில்லை. இல்லை ஐயா. தேவனுடைய வல்லமையானது ஒரு தூதனை அங்கே அனுப்பி அவனை விடுவித்தது. அந்த ஆறாவது புலனால் பவுலையும் சீலாவையும் தொழு மரத்தில் வைக்க இயலவில்லை. தேவன் பூமி அதிர்ச்சியை அனுப்பி எல்லாவற்றையும் முழுமையாக அசைத்துப் போட்டார். அந்த ஆறாவது புலன் சில நேரத்திற்கு உங்களுக்காக கிரியை செய்ய விடுங்கள். ஏனென்றால் அந்த ஆறாவது புலனின் காரணத்தால் தானியேலை சிங்கங்களாலும் கூட விழுங்க முடியவில்லை. அந்த ஆறாவது புலனிற்கெதிராக அவைகளால் ஒன்றுமே செய்ய இயலவில்லை. இல்லை ஐயா. அந்த ஆறாவது புலனின் காரணத்தால் நெருப்பு எபிரேயப் பிள்ளைகளை பட்சிக்கக் கூடாமல், எரிக்கக் கூடாமல் இருந்தது. மார்த்தாளுக்குள் கிரியை செய்து கொண்டிருந்த அதே ஆறாவது புலனின் மூலமாகத்தான் மரித்து நான்கு நாட்களாய் கல்லறைக்குள் கிடந்த தன் சகோதரனை இயேசு

உயிரோடு எழுப்புவதைக் காண (மார்த்தாள் - தமிழாக்கியோன்) வந்தாள்... அதே ஆறாவது புலன் ஒரு குஷ்டரோகியை சுகமாக்கினது. அதே ஆறாவது புலன்தான் இயேசு கிறிஸ்துவை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினது. அதே ஆறாவது புலன்தான் என்றாவது ஒரு நாளிலே சபையை எடுத்துக்கொண்டு, மகிமைக்குள்ளே கொண்டு செல்லும்.

★★★★★



இந்த ஆறாவது புலனின் மூலமாகத்தான் பவுலை கடல் விழுங்கக் கூடாதபடிக்கு ஆனது. எல்லா நம்பிக்கையும் அற்றுப் போன நிலையில் அவன் அங்கே இருந்தபோது கர்த்தருடைய தூதனை அவன் தரிசனத்தில் கண்டான். அவன் திரும்பி வந்து “தைரியமாயிருங்கள்” என்று கூறினான். காரணம் என்ன? இரவும் பகலுமாக பதினான்கு நாட்கள் சந்திரனோ, நட்சத்திரங்களோ, எதுவுமே இல்லாமல் மிகவுமாக இருண்டு போயிருந்தது. எப்பொழுதும் இல்லாத அளவிற்கு புயல் பயங்கரமாக இருந்தது. ஆனால் அவன் கர்த்தருடைய தூதனை அவன் கண்டபொழுது அந்த ஆறாவது புலன் கிரியை செய்ய ஆரம்பித்தது. அல்லேலூயா.

~ 6 ~



அந்த ஆறாவது புலனால் பேதுருவை சிறைச் சாலையில் வைக்க இயலவில்லை. இல்லை ஐயா. தேவனுடைய வல்லமையானது ஒரு தூதனை அங்கே அனுப்பி அவனை விடுவித்தது.



~ 8 ~



அந்த ஆறாவது
புலனால் பவுலையும்
சீலாவையும் தொழு
மரத்தில் வைக்க
இயலவில்லை.
தேவன் பூமி
அதிர்ச்சியை அனுப்பி
எல்லாவற்றையும்
முழுமையாக
அசைத்துப் போட்டார்.

# ~ 10 ~







அந்த ஆறாவது புலன் சில நேரத்திற்கு உங்களுக்காக கிரியை செய்ய விடுங்கள். ஏனென்றால் அந்த ஆறாவது புலனின் காரணத்தால் தானியேலை சிங்கங்களாலும் கூட விழுங்க முடியவில்லை. அந்த ஆறாவது புலனிற்கெதிராக அவைகளால் ஒன்றுமே செய்ய இயலவில்லை. இல்லை ஐயா.



அந்த ஆறாவது புலனின் காரணத்தால் நெருப்பு எபிரேயப் பிள்ளைகளை பட்சிக்கக் கூடாமல், எரிக்கக் கூடாமல் இருந்தது.



மார்த்தாளுக்குள் கிரியை செய்து கொண்டிருந்த அதே ஆறாவது புலனின் மூலமாகத்தான் மரித்து நான்கு நாட்களாய் கல்லறைக்குள் கிடந்த தன் சகோதரனை இயேசு உயிரோடு எழுப்புவதைக் காண (மார்த்தாள் – தமிழாக்கியோன்) வந்தாள்...



# அதே ஆறாவது புலன் ஒரு குஷ்டரோகியை சுகமாக்கினது.



அதே ஆறாவது புலன்தான் இயேசு கிறிஸ்துவை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினது







# பிசாசுகள்

# ஜெபவரிசையில் வெளவால் போன்று அசுத்த ஆவி வாலிபனை விட்டு வெளியேறுதல்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

71. அங்கே உட்கார்ந்து என்னையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிற சகோதரியே, நீங்கள் கீல்வாதத்தினாலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள், இப்பொழுது உங்கள் விசுவாசம் உங்களை இரட்சித்தது; நீங்கள் வீட்டிற்குச் சென்று சுகமாயிருக்கலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நீங்கள்... ஐ கொண்டு வருவீர்களா. வாலிபனே, வணக்கம். நான் தேவனுடைய ஊழியக்காரன் என்று நீ விசுவாசிக்கிறாயா? மற்ற அநேக ஊழியக்காரர்கள் இங்கேயிருக்கிறார்கள், ஆனால் நான் அவருடைய ஊழியக்காரனாக இருக்கிறேன். உடனடியாக, அங்கே ஒரு ஆவியானது இந்த வாலிபனிடமிருந்து இழுத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பையன் தொல்லையில் அகப்பட்டுள்ளான், அவன் கடுமையான பிரச்சனையோடு இருக்கிறான். இந்தப் பையன் மனநிலை கோளாறினால் அவதிப்பட்டு வருகிறான். நீ ஒரு மனநிலை மருத்துவமனையிலிருந்து இப்பொழுதுதான் வருகிறாய். அவர்கள் ஏதோவொரு விதமான ஒரு-ஒரு அதிர்ச்சி சிகிச்சையை உனக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன். அவர்கள் உனக்கு அதிர்ச்சி சிகிச்சையை கொடுத்திருக்கிறார்கள். உனக்கு இயற்கைக்கு மாறான ஒரு பயம் தொடர்ந்து (aphobia) இருக்கிறது:

அதாவது, நீ எல்லா நேரமும் உனக்கு முன்பாக ஒரு முகத்தைப் பார்க்கிறாய். அது ஒரு-அது நீ காண்கிற உனது தாயாரின் முகம் தான். உனக்கு விவாகம் ஆகி விட்டது. உனக்கு ஒரு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

கதரா தேசத்து மனிதனிடம் வந்து, அம்மனிதனை விடுவித்தவராகிய இயேசு கிறிஸ்து உன்னை இதிலிருந்து விடுவித்து, அந்த இயற்கைக்கு மாறான பயத்தை உன்னிலிருந்து எடுத்துப் போட்டு, அந்தப் பிசாசை உன்னை விட்டுத் துரத்தும்படி இன்றிரவு இங்கேயிருக்கிறார், நீ சுகத்தோடு உன்னுடைய வீட்டிற்கு திரும்பிச் செல்லலாம். நீ அதை விசுவாசிக்கிறாயா? உனக்காக இதைச் செய்யவே அவர் என்னை அனுப்பியிருக்கிறார் என்று நீ விசுவாசிக்கிறாயா?

72. நீங்கள் உங்கள் தலைகளை தாழ்த்தி பயபக்தியோடு இருங்கள். இது மிகவும் ஆபத்தானதும், அபாயகரமானதுமாய் இருக்கிறது. "உங்கள் தலையை உயர்த்துங்கள்" என்ற என்னுடைய சத்தத்தை நீங்கள் கேட்பது வரையில், உங்கள் தலையைத் தொடர்ந்து தாழ்த்தி வைத்துக் கொள்ளுங்கள். வாலிபனே, இங்கே வா. இந்த ஆசீர்வாதத்தை நான் கேட்கிறதற்கு முன்னால், நான் ஒரு காரியத்தை உன்னிடம் கேட்கப் போகிறேன். அவருடைய ஊழியக்காரனாக எனக்கு நீ கீழ்ப்படிந்து, செய்ய வேண்டுமென்று நான் உன்னிடம் கூறுகிறபடி

நீ செய்வாயா? நீ சுகமடையப் போகிறாய். விடுதலையின் நேரம் சமீபமாயுள்ளது. வாலிபனே, இதைச் செய்து கொண்டிருப்பது ஒரு பிசாசு தான். அவன் உன்னை முற்றிலும் பைத்தியம் பிடித்த நிலைக்கு உன்னைத் தள்ளி, உன்னுடைய எஞ்சியுள்ள வாழ்நாட்களில் அதேவிதமாவே உன்னை வைத்திருப்பான், ஆனால் உன்னுடைய சரியான மனநிலைக்கும், சரியான புத்தி தெளிந்த நிலைக்கும் உன்னைத் திரும்பவும் கொண்டு வர தேவனால் கூடும்.

நான் வேறொரு காரியத்தைக் காண்கிறேன். நீ மனநோய் மருத்துவர்களிடம் இருந்திருக்கிறாய். அவர்கள் - யாரோ ஒருவர் உன்னிடம் பேச முயற்சி செய்வதை நான் பார்க்கிறேன், ஆனால் அது (நல்ல) யோசனை அல்ல. உனக்கு அதைக் காட்டிலும் அதிகம் தேவைப்படுகிறது: அதற்கு ஜீவனுள்ள தேவனுடைய வல்லமை அவசியமாயுள்ளது. நான் கூறுவது உனக்குப் புரிகிறதா? உனக்குப் புரியவில்லை என்றால், சற்று நேரத்தில் நீ புரிந்து கொள்வாய். பயபக்தியோடு உன்னுடைய தலையைத் தாழ்த்தி, உன்னை விடுவிக்கும்படியாக தேவனுடைய குமாரனாகிய இயேசுவை தேவன் எழுப்பினார் என்று விசுவாசி.

73. பரலோகப் பிதாவே, இங்கே நின்று கொண்டிருக்கும் இந்த வாலிபன் அருமையான தோற்றம் கொண்ட ஒரு வாலிபனாயிருக்கிறான்,

வாலிப மனிதத் தன்மையின் சிறப்பமாக இங்கே நின்று கொண்டிருக்கிறான், அவனுடைய வீட்டை சுக்கு நூறாக கிழித்துப் போட்டு, அவனுடைய குடும்பத்தை உடைத்துப் போட்டு, இந்த வாலிபனை பைத்தியம் பிடிக்கும்படி செய்யவே சாத்தான் அவனிடம் வந்திருக்கிறான். ஆனால் ஓ தேவனே, வானங்களையும் பூமியையும் உண்டாக்கினவரே, கிறிஸ்து இயேசு மூலமாய் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரே, நான் இந்த வாலிபனுக்காக விசுவாசமுள்ள ஜெபத்தோடு உம்முடைய ஊழியக்காரனாக வருகிறேன், அவன் இருக்கிற நிலைமையின் காரணமாக அவனாகவே விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியாது என்பதை சற்று முன்பு அறிந்து கொண்டேன். கர்த்தாவே, உமது ஊழியக்காரனின் ஜெபத்தைக் கேட்டருளும். **சாத்தான் அவனிடத்தில் பதுங்கியிருந்து**, அவனுடைய வாழ்க்கையை ஒரு துயரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறான், ஆனால் அந்த பைத்தியக்காரனை விடுவித்த கர்த்தராகிய இயேசு, அது இந்த வாலிபனுக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக மோசமாக இருந்தது. இன்றிரவு, உம்மால் இந்த வாலிபனை சுகப்படுத்த முடியும்.

சாத்தானே, இவனைக் கட்டி வைத்திருக்கிற நீ, மனநல மருத்துவர்களிடமிருந்து தப்பித்து விட்டாய்; நீ மருத்துவ சிகிச்சைகளிலிருந்தும் தப்பித்து விட்டிருக்கிறாய்; ஆனால் தேவனுடைய

வல்லமையிடமிருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவனை விட்டு வெளியே வா. அவனை விட்டுப் போ.

இப்பொழுது, வாலிபனே, இங்கே பார். அது முடிந்து விட்டது; நீ சுகமடைந்து விட்டாய். இனிமேல் புகைபிடிக்காதே. ஒரு உண்மையான கிறிஸ்தவனைப் போன்று ஜீவி. போ, தேவனைத் துதித்துக் கொண்டும், இரவும் பகலும் அவருடைய துதிகளைப் பாடிக் கொண்டும் இரு. உன்னுடைய கரங்களை மேலே உயர்த்தி, நீ சுகமடைந்ததற்காக அவருக்கு நன்றி செலுத்து. இப்பொழுது, நீ - நீ நலமாக உணருகிறாய், இல்லையா? இவன் அருமையாக உணருவதாக இந்த வாலிபன் கூறுகிறான். இப்பொழுது, எல்லாம் போய் விட்டது, அது போன போது, ஒரு அசுத்த ஆவி அந்தவிதமாக போனது.

நான் ஒரு மதவெறியன் அல்லவென்று பரலோகத்திலிருக்கிற தேவன் அறிவார், அவரே நியாயத்தீர்ப்பின் நாளிலே நியாயம் தீர்ப்பார். **அந்தக் காரியமானது வேகமாக சுழன்ற படி, இந்தப்பையனை விட்டு அந்தத் திசையில் கடந்து சென்றது. அது அவனை விட்டுப் போன போது, வீசும் காற்று, "ஷ்ஷ்ஷ்" என்று அவ்விதமாக போவதைப் போன்று கூட அது உணரப்பட்டது.** அந்த அசுத்த (ஆவியின்) வல்லமைகள் இந்த வாலிபனை விட்டு அகன்று

விட்டது. போ, உன்னுடைய மனைவியிடமும், குடும்பத்திடமும் சென்று, களிகூர்ந்து கொண்டே சந்தோஷமாயிரு. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு.

74. அந்த சீமாட்டியை அழைத்து வாருங்கள். (ஒரு **அசுத்த (ஆவி) காரியமானது காணக்கூடிய விதத்தில் யாரோ ஒருவரை விட்டு கடந்து போனதை நான் நீண்ட காலமாக பார்த்தது இதுதான் முதல் தடவை. அது ஒரு வெளவால்** (bat) **போன்று கடந்து சென்றது**, அவ்விதமாக ஒரு பக்கத்திலிருந்து கடந்து போனது) சீமாட்டியே, இங்கே வாருங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம் எல்லாரிடத்திலும் இரக்கமாயிருக்கிறார். அவருடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் இரத்தமானது நம்மை மூடி, சகல பொல்லாத வல்லமைகளிலிருந்தும் நம்மைப் பாதுகாப்பதாக. இயேசு அற்புதமானவர். தேவனே, இரக்கமாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது.

***செய்தி:*** தீர்க்கதரிசியாகிய எலிசா, ஜுலை 23, 1954

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# அசுத்த ஆவி ஸ்திரீயினுள் புகுந்தது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

அங்கு தன் மனைவியினால் தொல்லை ஏற்பட்ட ஒரு சகோதரன் இருந்தார். அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது, அவள் தலையையுயர்த்தினாள். நான் தலை குனிந்திருக்க வேண்டுமென்று அவர்களிடம் கூறியிருந்தேன். அவ்வமயம் மேடையின் மேல் ஒரு ஸ்திரீ இருந்தாள். அசுத்த ஆவி அவளை விட்டுப்போக மறுத்தது. அந்த நேரத்தில்தான் இந்த ஸ்திரீ அவபக்தியாய் தன் தலையை உயர்த்தினாள். அந்த அசுத்த ஆவி மேடையின் மேலிருந்த ஸ்திரீயை விட்டு, இந்த ஸ்திரீயினுள் புகுந்தது. இது நடந்து பதினான்கு ஆண்டுகளாகிவிட்டது. அந்த ஸ்திரீ மோசமான நிலையையடைந்து, அவளுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டு, செய்யத்தகாத செயல்களைப் புரிந்து வந்தாள். உதாரணமாக, அவள் தன் கணவரை விட்டு வேறொவனை மணந்து கொண்டாள்; அப்படி செய்ததாக நினைவில்லை என்று அவள் கூறினாள்.

மருத்துவர்கள் அவளைப் பரிசோதித்தனர் அதற்கு நீங்கள் என்ன பெயர் சொல்லி அழைக்கிறீர்கள்?... அம்னீஷியாவாக (Amnesia) இருக்குமாவென்று அந்த பெயர் என்னவாயிருப்பினும். டாக்டர், அது சரியென்று நினைக்கிறேன். அது அதுவல்ல, அது ஒரு ஆவி.

***செய்தி:*** இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962

★★★★★

# ~ 3 ~

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# உதவிக்காக கூப்பிடும் ஆவி

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

ஒரு நிமிடம், அது இந்த பெண் அல்ல. இப்பொழுது, ஒரு க்ஷணம், இப்பொழுது ஒவ்வொருவரும் பயபக்தியாயிருங்கள். சாத்தான் ஏதோ ஒன்றை செய்ய முயன்றான். இதோ அது. கட்டி, கட்டி, உங்கள் இருவருக்கும் இருக்கின்றது. அது சரி. உங்களுக்கும் கட்டி இருக்கின்றது; அவளுக்கும் கட்டி இருக்கின்றது, ஆகவே **ஒருவரை நோக்கி ஒருவரிடம் பிசாசு உதவிக்காக கூச்சலிடுகின்றது**. **ஆனால் பரிசுத்த ஆவியானவரும் சத்தமிடுகின்றார்.** நீங்கள் யாரை விசுவாசிக்கப் போகின்றீர்கள், அவர்? சரி. ஸ்திரீயே அந்த கட்டிலிலிருந்து எழுந்து கொள். படுக்கையிலிருந்து எழும்பும். அதை விட்டெழுந்து விசுவாசி. **இப்பொழுது அவரை விசுவாசித்துக் கொண்டே செல்.** ஆமென்.

*செய்தி:* கடல் பயணத்தில் சாட்சி, மார்ச் 7, 1964

★★★★★

நம்முடைய கர்த்தராகிய இயேசுவால் காசநோயையோ (TB), எதையுமோ எடுத்துப் போட முடியுமானால், அது அவருக்கு அவ்வளவு எளிதாக உள்ளது. அது சரி அல்லவா? நீர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த போதே, சுகமடைந்து விட்டீர், அந்தக் காசநோய் உம்மை விட்டுப் போய் விட்டது. எனவே நீங்கள் களிகூர்ந்தபடியே உங்கள் பாதையில் சென்று, "தேவனுக்கு நன்றி" என்று கூறுங்கள். ஆமென்.

ஆமென். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

**இப்பொழுது, இதோ இரண்டு ஆவிகள் ஒன்று மற்றொன்றை அழைத்துக் கொண்டிருக்கின்றன.** என்னுடைய அருமையான கூட்டத்தாரால் மாத்திரம் இந்த பரிமாணத்திற்குள் இருந்து இதைப்பார்க்க முடிந்திருக்க வேண்டும் என்பதே என்னுடைய - என்னுடைய ஒரே விருப்பமாக உள்ளது. அங்கே தன்னுடைய கரங்களைக் குறுக்காக வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்மணி அவதிப்பட்டு கொண்டிருக்கும் அதே வியாதியால் தான் இங்கே நின்று கொண்டிருக்கும் இந்தப் பெண்மணியும் அவதிப்படுகிறாள், சரியாக அதேவிதமாகவே. **இதோ ஒரு இருண்ட வரி உள்ளது**. **ஏனென்றால் இந்தப் பெண்மணியின் மேல் இருக்கும் ஆவியானது இந்த ஆவியை நோக்கி உதவிக்காக கூப்பிட்டு கொண்டிருக்கிறது**. **இவை இரண்டுமே ஒரே வியாதி தான்: இரண்டுமே கீல்வாத நோய் தான்** (arthritis). இப்பொழுது நீ உன்னுடைய பாதையில் போகலாம். உன்னுடைய கைக்குட்டையை வைத்திருக்கும் சீமாட்டியே, உன்னுடைய காலூன்றி எழுந்து நில். அங்கே தான் காரியம். அது உன்னை விட்டுப் போய்விட்டது. இப்பொழுது, உன்னுடைய பாதையில் களிகூர்ந்தபடியே சென்று, சந்தோஷமாயிரு.

***செய்தி:*** மிக இருண்ட வேளை, அதற்குப் பிறகு இயேசு வருகிறார், நவம்பர் 14, 1955, பத்தி எண் 109

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# ஒரு கறுத்த நிழலாக

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

7. ஆனால் மேடையின் மேல் அநேக, அநேக நேரங்களில், நபரை விட்டு வெளியேறுகிற ஆவியைக் காண்கிறேன். அவைகள் எல்லாவிதமான வடிவங்களிலும் இருக்கின்றன. பிசாசுகளோடு தனிப்பட்ட முறையில் நான் தொடர்பு கொள்வதைக் குறித்து, அதைக் குறித்து நானாகவே அறிந்திருப்பவைகளைப் பற்றி, பிசாசியலின் பேரில் ஒரு புத்தகத்தை தயார் செய்து வருகிறேன்; அவைகள் ஜீவனுள்ளவைகளாக இருக்கின்றன. கிறிஸ்தவ விஞ்ஞானம் கூறுவது போன்று, அவைகள் வெறும் எண்ணம் அல்ல. அது உண்மையாகவே ஒரு ஜீவனாக இருக்கிறது. அது நபரைவிட்டு வெளியேறும் போது, நீங்கள் அதை ஒரு கறுத்த நிழலாகக் காணலாம். நான்-நான் அவைகளைக் கண்டிருக்கிறேன், அவைகளில் சில ஏறக்குறைய அவ்வளவு நீளமுடைய வௌவால்களைப் போன்று காணப்படுகின்றன, அவைகள் கீழே தொங்கிக் கொண்டிருக்கும் நீளமான மயிர்களை உடையவைகளாக இருக்கின்றன. நான் அதைப்போன்று அவைகளைக் கண்டிருக்கிறேன், அவைகள் ஆமைகளைப் (tortoises) போன்றோ, ஐம்பது பவுண்டுகள் (சுமார் 23 கிலோகிராம் - தமிழாக்கியோன்), அல்லது ஏதோ ஓர் அளவு எடை கொண்ட, மகத்தான பெரிய சிலந்திகளைப் (spiders) போன்றோ காணப்பட்டதை நான் கண்டிருக்கிறேன், அவைகள் மகத்தான பெரிய நிழலைப் போன்று, ஜனங்களை விட்டு வெளியேறுகிறது. வழக்கமாக, அது காக்கைவலிப்பாக இருக்கிறது.

***செய்தி:*** பிசாசியல், நவம்பர் 20, 1953

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# பிசாசு வந்து அதை திருடிக் கொண்டு போவான்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

மேலும் நீங்கள் தேவனுக்கென்று ஏதாவது செய்யும்படி உங்களுடைய இருதயத்தில் கொண்டிருந்து அதை வெளிப்படுத்தாமல் "நல்லது, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம், பின்னர் பார்ப்போம்" என்று அது போன்று உங்களுக்குள்ளே வைத்திருப்பீர்கள் என்றால் அப்போது நீங்கள் தேவனுக்கென்று சேவை செய்யும்படி ஒரு விசை கொண்டிருந்த அந்த சின்ன வாஞ்சையானது உங்களிலிருந்து எடுக்கப்படும். பிசாசு வந்து அதை திருடிக் கொண்டு போவான். அதன் பின் நீங்கள் அவருக்கு சேவை செய்யும்படி எந்த ஒரு வாஞ்சையும் கொண்டிருக்கமாட்டீர்கள்.

*செய்தி:* 63-0803M முதலீடுகள், அகஸ்டு 3, 1963

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# ஒரு சகோதரி யிடமிருந்து பெரிய வௌவால் வடிவத்தில் பிசாசு வெளியேறுதல்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

ஒரு சமயம் இங்கு ஒரு சிறு பெண் இருந்தாள். இன்றைக்கும் கூட அவள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அவளுடைய பெயர் நெல்லி சான்டர்ஸ். முதன் முறையாக பிசாசு துரத்தப்பட்டதை நான் கண்டிருக்கிறேன் என்றால் (நாங்கள் கல்லறைத் தோட்டத்துக்கு அப்பால் மூன்று பிளாக்குகள் தள்ளி குடியிருந்தோம். அப்பொழுது தான் நான் ஒரு பிரசங்கியானேன். நான் இந்த மூலையில் ஒரு கூடாரக் கூட்டத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன் அந்த சிறு பெண் மிகச் சிறந்த நடனக்காரி. அவள் இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தாள். அவளும் லீஹார்னும் (இந்தப் பட்டினத்திலுள்ள உங்கள் அநேகருக்கு லீஹார்னைத் தெரியும். அவன் குளிக்கும் அறை ஒன்றை நடத்தி வருகிறான். அவளும் லீ ஹார்னும் நாட்டிலேயே மிகச் சிறந்த நடன ஜோடி, அவன் ஒரு கத்தோலிக்கன். அவர்களுக்கு மதம் ஒருபொருட்டல்ல. எனவே (நெல்லியும் மற்றவர்களும், அவள் சிறந்த நடனக்காரி, அவனும் கூட. அங்கு ப்ளாக் பாட்டம், 'ஜிட்டர்பர்க்ஸ் போன்ற நடனங்கள் ஆடப்பட்டன. இவர்களிருவரும் நாட்டிலேயே மிகச்சிறந்த நடனக்காரர்கள்.

ஒருநாள் (ஒரு இரவு) அவள் தடுமாறிக்கொண்டு கூட்டத்திற்கு வந்தாள். அந்த சிறு நெல்லி பீடத்தின் முன்னால் முகங்குப்புற விழுந்தாள். தேவன் அவளை ஆசீர்வதிப்பாராக. அவள் பீடத்தின் முன்னால் விழுந்துகிடந்து, தலையை தூக்கி அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய கண்ணீர் கன்னங்களில் வழிந்தது. அவள், "பில்லி" என்றாள் அவளுக்கு என்னைத் தெரியும்). அவள், "நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்" என்றாள்.

நான், "நெல்லி, நீ இரட்சிக்கப்பட முடியும். பெண்ணே, இயேசு உன்னை ஏற்கனவே இரட்சித்து விட்டார். அவருடைய வார்த்தையின் அடிப்படையில் அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றேன். அவள் அங்கு தங்கியிருந்து, அழுது, ஜெபித்து, உலக காரியங்களுக்கு மறுபடியும் செவி கொடுப்பதில்லையென்று தேவனிடம் வாக்கு கொடுத்தாள். உடனே அவளுடைய ஆத்துமாவில் ஒரு அழகான இனிமையான சமாதானம் குடிகொண்டது. அவள் எழுந்து சத்தமிட்டு, தேவனைத் துதித்து, அவரை மகிமைப்படுத்தினாள்.

அதற்கு பின்பு ஆறு அல்லது எட்டு மாதங்கள் கழித்து, ஒரு இரவு அவள் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண்டிருந்தாள் இப்பொழுது அவள் வாலிபப் பெண், அவளுக்கு அப்பொழுது சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவள் என்னிடம் வந்து, "ஹோப்..." (அது என் மனைவி. அவள் மரித்துவிட்டாள்). அவள், "காண்பதற்கு நான் ஹோப்பையும் ஐரீனையும் போல் இருந்திருந்தால் நலமாயிருக்கும். அவர்கள் உலக காரியங்களில் சிக்கிக்கொண்டதேயில்லை" என்றாள். அவள், "உலகம் நம்மேல் ஒரு அடையாளத்தை போட்டுவிடுகிறது. எனக்கு கரடுமுரடான தோற்றம் உள்ளது. நான் முகவர்ணம் தீட்டிக்கொள்வதைவிட்டு விட்டேன். ஆயினும் என்

முகம் கரடுமுரடாக காணப்படுகிறது. அவர்களுடைய முகம் எவ்வளவு இளமையாயும் களங்கமற்றதாகவும் காணப்படுகிறது! நான் அப்படி செய்யாமலிருந்தால் நலமாயிருக்கும்" என்றாள்.

நான், "நெல்லி, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களினின்றும் சுத்திகரிக்கிறது. தேனே, நீ சென்று விசுவாசி" என்றேன்.

வேய்ன் ப்ளட்ஸோ (அவனை உங்களில் அநேகருக்கு தெரியும். அநேக ஆண்டுகளாக அவன் என் ஆப்த நண்பன்). அவன் பயங்கர குடிகாரனாயிருந்தான். என் சகோதரன் எட்வர்ட்டுடன் அவன் இங்கு வந்திருந்தான். அவன் குடித்து தெருவில் விழுந்து கிடந்தபோது, அவனை நான் தூக்கிக்கொண்டு வந்தேன். ஏனெனில் போலீசார் அவனைக் கைது செய்ய முயன்றனர். அவனை இங்கு கொண்டு வந்தேன். அப்பொழுது நான் ஒரு பிரசங்கி. என் பெற்றோருடன் வசித்து வந்தேன். அது எனக்கு விவாகமாவதற்கு அநேக ஆண்டுகட்கு முன்பு. நான் அவனைக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினேன். நான் சாய்வு நாற்காலியில் உறங்கினேன். பிரன்ஹாம் குடும்பம் பெரியது என்று உங்களுக்கு தெரியும் (நாங்கள் பத்து பேர்). எங்களுக்கு நாலு அறைகள் இருந்தன. என்னிடம் ஒரு பழைய சாய்வு நாற்காலி இருந்தது. நான் அதை இழுத்து, அதில் உறங்கினேன். குடித்திருந்த வேய்னை நான் படுக்கையில் கிடத்தினேன். அவனை வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் கிடத்த வேண்டியதாயிற்று. நான் அங்கு படுத்துக் கொண்டிருந்தேன். நான், "வேய்ன்,

இப்படி செய்வது உனக்கு வெட்கமாயில்லையா?" என்று கேட்டேன்.

அவன், "உ, து, பில்லி, என்னிடம் அப்படி பேசாதே", என்றான் (சகோ. பிரன்ஹாம் குடிகாரன் உளறுவதைப்போல் பேசி காண்பிக்கிறார் - ஆசி). நான் அவன் மேல் என் கையை போட்டு, "வேய்ன், உனக்காக நான் ஜெபிக்கப்போகிறேன். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக" என்றேன்.

நான் இரட்சிக்கப்பட்டு அப்பொழுது ஏறக்குறைய ஒரு ஆண்டு காலம் தான் ஆகியிருந்தது. அப்பொழுது திடீரென்று வாடகை காரின் கதவு திறக்கப்பட்டு வேகமாக மூடும் சத்தம் கேட்டது, யாரோ கதவை வேகமாக தட்டி, சகோ. பில், சகோ. பில் என்று கூப்பிடுவது கேட்டது (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை பதினைந்து தடவை தட்டுகிறார் - ஆசி). –

நான், "இது என்ன, யாரோ மரித்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணினேன். நான் கதவினருகே ஓடினேன். என் பழைய துணிகளை எடுத்து, என் பைஜாமாவின் மேல் சுற்றிக்கொண்டு, வேய்னையும் போர்த்திவிட்டு, கதவினருகே ஓடினேன். அது பெண்ணின் குரல் போன்றிருந்தது. நான் கதவைத்திறந்தபோது, இந்த வாலிபப் பெண் அங்கு நின்று கொண்டிருந்தாள். அவள், "உள்ளே வரலாமா?" என்று கேட்டாள். நான், "உள்ளே வா" என்று சொல்லி விளக்கைப் போட்டேன்.

அவள் அழுது கொண்டே, "ஓ, பில், பில்லி, நான் முடிந்து போனேன்,! நான் முடிந்து போனேன்!" என்றாள்.

"என்ன நேர்ந்தது, நெல்லி மாரடைப்பு ஏதாகிலும் ஏற்பட்டதா?" என்று கேட்டேன்.

அவள், "இல்லை, சகோ. பில். நான் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண்டிருந்தேன். உண்மையில் சகோ.பில், உண்மையில் சகோ. பில், நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை, நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை" என்றாள்.

நான், "என்ன நேர்ந்தது?" என்று கேட்டேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நான் அப்பொழுது ஒரு வாலிபன். நான் நினைத்தேன் ......

அவள், "ஓ, சகோ. பில், நான் சின்னா பின்னமாகிவிட்டேன்" என்றாள்.

நான், "அமைதியாயிரு, சகோதரியே, நடந்ததை கூறு" என்றேன்.

அவள், "நான் தெருவின் வழியாக நடந்து ரெட்மென் அரங்கத்தை அடைந்தேன்..." என்றாள் (அங்கு சனிக்கிழமை இரவுகளில் நடனம் நடப்பது வழக்கம்). அவள், "என் உடைகளுக்காக துணி வாங்கிக் கொண்டு திரும்பும்போது, இசையைக் கேட்டேன்," மேலும் அவள், "உங்களுக்கு தெரியுமா?" என்றாள். "நான் ஒருநிமிடம் அங்கு நின்றேன். அது இனிமையாகிக் கொண்டே இருந்தது. அங்கு நின்றால் தவறொன்றுமில்லை" என்று நினைத்தேன்.

அங்குதான் அவள் தவறு செய்தாள் - சற்று நேரம் அங்கு நின்றாள்.

அவள் இசையைக் கேட்டுக்கொண்டேயிருந்தாள். அவள், "ஓ, ஆண்டவரே, உம்மை நான் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர். நானும் நீயும் இந்த இடத்தில் நடன போட்டிகளில் எத்தனையோ விருதுகளை வென்றது. என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த இசை முன்பு என்னைக் கவர்வது வழக்கம். ஆனால் இப்பொழுது இல்லை" என்று நினைத்தாள். ஓ, ஓ! ஓ, ஓ! அது உன்னைக் கவரவில்லை என்றா நினைக்கிறாய்? அது ஏற்கனவே உன்னைக் கவர்ந்துவிட்டது. அவன் உன்னை நடன கூடத்திற்கு அனுப்பினதற்கு அது சமானம். பாருங்கள்?

எத்தனை பேருக்கு நெல்லி சான்டர்ஸை தெரியும்? நல்லது, உங்கள் அனைவருக்கும் என்று நினைக்கிறேன். ஆம், நிச்சயமாக! எனவே அவர்கள்.... அவள் தொடர்ந்து, "என்ன நேர்ந்தது தெரியுமா? நான் அரங்கத்தின் படிகளில் ஏறிச் சென்றால், ஒரு சிலருக்கு என் சாட்சியை அறிவிக்க முடியும் என்று நினைத்தேன்" என்றாள்.

பார், நீ பிசாசின் எல்லைக்குள் சென்றுவிட்டாய், அதனின்று விலகு! பொல்லாங்கானதாய் தோன்றும் எல்லாவற்றையும் உதறித் தள்ளு!

அவளோ படிகளில் ஏறி சில நிமிடங்கள் அங்கு நின்றாள். முதலாவதாக நடந்தது என்ன தெரியுமா? சில நிமிடங்களுக்குள் ஒரு பையனின் கரங்களைப் பிடித்து நடனமாடத் தொடங்கி விட்டாள். பின்பு அவளுக்கு சுய

நினைவு வந்தபோது, அங்கு நின்று, "நான் நிரந்தரமாக இழக்கப்பட்டேன்" என்று அழுதாள்.

அப்பொழுது நான் நினைத்தேன் எனக்கு வேதாகமம் அதிகம் தெரியாது. ஆனால் இயேசு, "என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்" என்று கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்" என்று. வேய்னுக்கும் அப்பொழுது குடிமயக்கம் சற்று தெளிந்து, அங்கு நடப்பதை உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். பாருங்கள்? நான், "பிசாசே, நீ யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது உன்னிடம் கூறுகிறேன். இவள் என் சகோதரி, இவளைப் பிடித்துக்கொண்டிருக்க உனக்கு எவ்வித உரிமையும் கிடையாது, அவள் அதை செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை; அவள் ஒரு நிமிடம் அங்கு நின்றாள் – (அங்குதான் அவள் தவறு செய்தாள். அவளை விட்டு நீ வெளியே வரத்தான் வேண்டும். நான் சொல்வது கேட்கிறதா?" என்றேன்.

கர்த்தர் எனக்குதவி செய்வாராக. (தேவன் நியாயாசனத்தில் உட்காருவார் என்று எனக்குத் தெரியும்). திரையிடப்பட்டிருந்த அந்த கதவு தானாகவே திறந்து மூடத் தொடங்கினது பம்பிடி, பிளம்பிடி, கா - ப்ளம்ப், கா-ப்ளம்ப், கா-ப்ளம்ப். நான் நினைத்தேன்... அவள், "பில்லி, அங்கே பாருங்கள்" என்றாள்.

நான், "ஆமாம், அது என்ன?" என்றேன் . . . அவள், "எனக்குத் தெரியாது" என்றாள்.

நான் "எனக்கும் தெரியவில்லை" என்றேன். கதவு பம்பிடி-பம்ப், டி - பம்ப் என்று ஓசையுண்டாக்கி, திறந்து மூடிக் கொண்டிருந்தது, "என்ன நேர்ந்தது?" என்று நான் நினைத்தேன். நான் இப்படி பார்த்துவிட்டு, "சாத்தானே, அவளை விட்டுப் போ; இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அவளை விட்டு வெளியே வா" என்றேன். அப்படி நான் கூறினபோது, இவ்வளவு நீளமுள்ள ஒரு பெரிய வௌவால்; அதன் செட்டைகளிலிருந்து நீண்ட ரோமம் தொங்கிக் கொண்டிருந்தது. அது அவள் பின் பக்கத்திலிருந்து 'விர்ர்ர்ர்' என்று வேகமாக பறந்து என்னை நோக்கி வந்தது. நான், "ஓ, ஆண்டவராகிய தேவனே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இதனின்று என்னை பாதுகாப்பதாக" என்றேன்.

வேய்ன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து பார்த்தான். அது நீண்ட நிழலைப் போல் அங்கு சுற்றிச் சுற்றி வட்டமிட்டு படுக்கைக்குப் பின்னால் சென்றது. வேய்ன் படுக்கையை விட்டு எழுந்து வேகமாக அடுத்த அறைக்கு ஓடினான்.

நான் நெல்லியை வீட்டுக்குக் கொண்டு சென்றுவிட்டு வந்தபோது அதை காணவில்லை அம்மா போர்வையை உதறிப் பார்த்தார்கள். ஆனால் படுக்கையில் ஒன்றுமில்லை. அது என்ன? ஒரு பிசாசு அவளை விட்டு வெளியேறினது. என்ன நேர்ந்தது? அவள் ஒரு வினாடி அங்கு நின்றாள். அவ்வளவுதான்.

நீங்கள் நிற்கவே வேண்டாம். தேவன் தமது வார்த்தையை உங்கள் இருதயங்களில் ஆழமாகப்

பதிக்கிறார். அந்த பட்டயத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு, வெட்டத் தொடங்குங்கள். அல்லேலூயா "எனக்கு எதற்கும் நேரமில்லை. இப்பொழுது தான் கடந்து வந்தேன். இளைப்பாறுவதற்கு கூட எனக்கு நேரமில்லை" என்று சொல்லுங்கள்.

அந்த தீர்க்கதரிசி, "என் கோலை எடுத்துக்கொண்டுபோய் குழந்தையின் மேல் வை. வழியில் யார் பேசினாலும் மறுமொழி கூறாதே." பிசாசு, "உன் உடல் நிலை எப்படி இருப்பதாக உணருகிறாய் ....? என்று கேட்டால், மறுமொழி கூறாதே. போய்க் கொண்டேயிரு" என்றான்.

பிசாசு சொல்கிறான், "உனக்கு இன்னாரைத் தெரியுமா? அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்பு, புத்தி சுவாதீனத்தை இழந்து விட்டார்கள்" என்று. அவனுக்கு மறுமொழி கூறாதீர்கள், சென்றுகொண்டேயிருங்கள். உங்களுக்கு இன்னாரைப்பற்றித் தெரியாது. அது உனக்கும் தேவனுக்குமிடையே உள்ள விஷயம். அது உண்மை. தேவனை உங்களுக்கு முன்பாக வையுங்கள்.

***செய்தி:*** இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# அந்த அதே பிசாசுகள் இன்றைக்கும் ஜீவித்துக் கொண்டிருக்கின்றன

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

49. இப்பொழுது, நண்பர்களே, இதை நான் ஏதோ ஒரு விதமான உளவியல் ரீதியாக கூறிக்கொண்டிருக்கவில்லை. நான் அநேக வருடங்களாக பிசாசுகளுடன் இடைப்பட்டு சமாளித்துக் கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் அறிவீர்கள். ஆராதனைகள் முடிந்த பிறகு இரவில், சில சமயங்களில் என்ன சம்பவித்துக் கொண்டிருக்கிறதென்பதை, நீங்கள் மாத்திரம் அதை அறிவீர்களானால்.... உங்களுக்கு அது தெரியாது. நினைவில் கொள்ளுங்கள், **நீங்கள் ஒரு ஆவிக்கெதிராக நிற்கும் போது, நீங்கள் எதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை அறிந்திருப்பீர்களானால் நலமாக இருக்கும்**. அங்கே அப்படியே நின்று கொண்டு முயற்சித்துக் கொண்டிருக்க வேண்டாம், ஏனெனில் அது எந்த ஒரு நன்மையும் பிறப்பிக்காது. **ஆனால் கூறப்போனால் ஒரு பிசாசு உனக்கு கீழ்ப்படிந்து தான் ஆக வேண்டுமென்றால், அது அதை அடையாளங்கண்டுகொள்ளும்**. நீ எவ்வளவு தான் கூக்குரலிட்டாலும் சரி, நீ எவ்வளவு எண்ணை ஊற்றினாலும் சரி இங்கே இருக்கின்றதைத் தான் சத்தியத்தைத்தான் அது அடையாளங்கண்டு கொள்ளும். அது தான் உண்மை. இயேசு அவனிடம் கூறினார், "வெளியே வா," என்று.

50. நினைவில் கொள்ளுங்கள், அந்த சீஷர்கள், அவனை வெளியே துரத்த, உதைத்துக் கொண்டும், முறுக்கிக் கொண்டும், முயற்சித்துக் கொண்டுமிருந்தனர்.

அவர்கள் "ஏன் எங்களால் அவனை துரத்த கூடாமற்போயிற்று?" என்றனர்.

"காரணம் உங்கள் அவிசுவாசமே" என்றார்.

51. அவர், "அவனை விட்டு வெளியே வா" என்றார். அந்த பையன் கீழே விழுந்தான். அவன் எப்பொழுதுமே கொண்டிராத ஒரு அதிகமான வலிப்பு நோயின் திடீர் எழுச்சியைக் கொண்டிருந்தான். பாருங்கள்? பாருங்கள், **அவைகள் அதிகாரத்தை அடையாளங்கண்டு கொள்கின்றன**.

52. பவுல் பிசாசுகளைத் துரத்துவதைக் கண்ட அந்த அலைந்து திரிந்து கொண்டிருந்த அந்த பையன்களை கவனியுங்கள். அந்த ஆசாரியனின் மகன்கள், அவர்கள் "நாமும் அதே காரியத்தைச் செய்ய முடியும்" என்றனர், யாரோ ஒரு ஆசாரியனின் மகன்கள். ஆகவே அவர்கள் சென்று "எங்களால் பிசாசுகளை வெளியே துரத்த முடியும்" என்றனர்: அப்போஸ்தலர் 19ம் அதிகாரம் - காக்காய் வலிப்பு திடீர் எழுச்சியைக்கொண்டிருந்த அந்த மனிதனிடம் அவர்கள் சென்று, "இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்கு கட்டளையிடுகிறோம், அவனை விட்டு வெளியே வா" என்றனர். அந்த பிசாசு கூறினது... "இப்பொழுது, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் நாமத்தில் ..."

53. அந்த பிசாசு "இப்பொழுது, இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்?" என்றது. ஆனால் என்ன சம்பவித்ததென்று உங்களுக்கு தெரியும்; அது அந்த மனிதரின் மீது பாய்ந்து, அவர்கள்

துணிகளை கிழித்து போட்டது, மேலும் அவர்களுக்கே அந்த காக்காய் வலிப்பு நோய் வந்தது, அவர்கள் தெருக்களில் ஓடினார்கள்.

54. **அந்த அதே பிசாசுகள் இன்றைக்கும் ஜீவித்துக் கொண்டிருக்கின்றன.**

*செய்தி:* பிசாசியல் #1, ஜுன் 8, 1953

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# வலிப்பு நோய் விலகியது

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

183. இப்பொழுது, இதோ ஒரு சீமாட்டி இருக்கிறார்கள், அவர்களை எனக்குத் தெரியாது, நான் அவர்களை என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் கண்டதேயில்லை. நாங்கள் இருவரும் தேவனுக்கு முன்பாக இங்கே நின்று கொண்டிருக்கிறோம், மரித்துப் போய் விழவும் முடியும், சரியாக இப்பொழுதே பக்கவாதம் தாக்கலாம். நான் கூட்டங்களில் அது சம்பவிப்பதைக் கண்டிருக்கிறேன். அது கூட்டங்களில் சம்பவிப்பதை எத்தனை பேர் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? என்னை ஹிப்னாடிஸம் செய்வதற்காக அந்த ஆள் வந்து, அந்த இரவில் அவன் அங்கே மேலே பால்(கனி)...யில் உட்கார்ந்து கொண்டிருந்ததை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? அவன் அங்கே கீழே வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார். அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான். அது ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்ததாகும், பாருங்கள். அவர்கள் அவனை கட்டிடத்தை விட்டு வெளியே தூக்கிச் சென்றனர். உங்களால் தேவனோடு விளையாட முடியாது. நீங்கள் அதை விசுவாசித்தாக வேண்டும்.

184. ஒரு ஊழியக்காரர் ஒரு சபைக் கூட்டத்தினரைக் கொண்டு வந்தார், வலிப்பு நோயினால் அவதிப்பட்ட ஒரு பிள்ளையினிமித்தம் அவர்கள் தங்களுடைய தலையை தாழ்த்திக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், அந்தப் பிள்ளை

தன்னுடைய நாவைத் தொடர்ந்து கடித்துக் கொண்டிருந்தது; அவர்கள் அதனுடைய வாயில் ஒரு குச்சியை வைத்திருந்தனர்... அல்லது, துணிகளைக் துவைத்துக் காயப் போடும் போது, அதை பற்றிப்பிடிக்க வைக்கும் கிளிப்போடு (clothespin), அதில் ஒரு துணியையும் வைத்து, அதனுடைய வாயில் வைத்திருந்தனர் அது ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்பரோவில் நடந்த சம்பவமாகும். அவன் அவ்விதமாக இந்த நாவைத் தொடர்ந்து கடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான், அப்போது மேடையிலேயே அந்தப் பிள்ளைக்கு சிறிது நேரம் உணர்விழப்பு ஏற்பட்டது. நான், "இப்பொழுது, நீங்கள் எல்லாரும் உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி இருங்கள்" என்று கூறி விட்டு, நான் ஜெபிக்கத் துவங்கினேன். அவர்களோ தங்கள் தலையைத் தாழ்த்தி வைக்கவில்லை. நான் தொடர்ந்து சுற்றிலும் நோக்கிப் பார்த்து, "உங்கள் தலையை உயர்த்தியிருப்பவர்கள், உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி விடுங்கள்" என்று கூறினேன்.

185. நான் ஜெபிக்கத் துவங்கினேன், அவர்களோ தங்களுடைய தலையைத் தாழ்த்தவில்லை. நான் சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தேன், அங்கே ஒரு ஆள் இவ்விதமாக தன்னுடைய தலையை வைத்துக் கொண்டு பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்தான், ஏறக்குறைய எட்டு அல்லது பத்து பேர் அவனோடு இருந்தனர், அல்லது அதற்கும் அதிகமான பேர் இருந்தனர். நான்,

"ஐயா, உம்முடைய தலையை கீழே தாழ்த்தி வையும்" என்றேன்.

அவன், "இது ஒரு பொது இடம், நான் அப்படி செய்ய வேண்டியதில்லை" என்றான்.

நான், "சரி, அப்படியானால், அது உம்மைப் பொறுத்தது" என்று கூறி விட்டு, "பிதாவே, அந்த மனிதனின் நிலையின் நிமித்தமாக இந்த அப்பாவி பிள்ளை அவதிப்பட அனுமதியாதேயும்" என்றேன்.

186. இது சரியா இல்லையா என்று ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்போரோவில் இருக்கும் பழைமை நாகரீகமான வேதாகம வேளை கூடாரமாகிய ஜோன்ஸ்போரோ கூடாரத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் T. ரீட் (Richard T. Reed) அவர்களைக் கேட்டுப்பாருங்கள். லிட்டில் ராக்கிலுள்ள, 505, விக்டர் தெருவைச் சேர்ந்த G. H. பிரௌன் அவர்களைக் கேட்டுப் பாருங்கள், அவர் அங்கே இருந்தார்.

187. அந்த வலிப்பு நோய் அந்தப் பிள்ளையை விட்டு விலகியது, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த 28 பேர்... மேய்ப்பரும் அந்த எல்லா 28 பேரும் வலிப்பு நோயை வாங்கிக் கொண்டார்கள், அவர்கள் வாயில் நுரை தள்ளியபடி, சரியாக அங்கே சபையோர் இருந்த இடத்திலேயே தரையில் விழுந்தார்கள். நான் அறிந்துள்ள வரைக்கும், அவர்கள் இன்னும் அதை வைத்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் வந்தார்கள், நான், "எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது, அது ஒரு தேவனுடைய சாபம், எனவே அது உங்களைப்

பொறுத்தது. கீழ்ப்படியாமலிருந்தவன் நீ தான். உனக்கு விசுவாசம் இல்லை என்றால், கூட்டத்தை விட்டு வெளியே போகவும், அதைச் செய்ய வேண்டாம் என்றும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டேனே. இப்பொழுது, அது உன்னைப் பொறுத்தது. எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது; நான் அந்த பாவத்திற்காக ஜெபிக்க மாட்டேன். இல்லை, ஐயா. அது உன்னைப் பொறுத்தது" என்று கூறி விட்டேன்.

***செய்தி:*** ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை, ஏப்ரல் 28, 1956

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# வௌவாலின் வழிவத்திலும், ஆமை போன்றும்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

ஒருஇரவில், நான், "பிசாசியலின்" பேரில் பேசப் போவதாக உங்களிடம் கூறினேன். இந்த அடுத்த சில நிமிடங்கள், நான், "பிசாசியலின்" பேரில் பேச விரும்புகிறேன். அடுத்த...

நான் ஒரு புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன், என்னால் கூடுமானால். நீங்கள்... உங்களால் அதை வாசிக்க முடியுமா இல்லையா என்று தெரியவில்லை, ஆனால் அந்த - நான் அதை எழுதும் போது, அது பிசாசியலின் பேரில்: பிசாசுகளோடு என்னுடைய தனிப்பட்ட தொடர்புகொள்ளுதல்களின் பேரிலான ஒரு புத்தகம்.

நண்பர்களே, நீங்கள் இருப்பது எவ்வளவு உண்மையோ, அப்படியே அவைகள் இருப்பதும் அவ்வளவு உண்மையாக இருக்கின்றன. அநேக நேரங்களில், அவைகள்... புறப்பட்டுப் போகும்போது, நான் அவைகளைக் காண்கிறேன். சரியாக இங்கே இந்த மேடையிலிருந்தே அவைகள் புறப்படுவதை நான் கண்டிருக்கிறேன். நான் அவைகளைக் காண்கிறேன், அவைகளில் சில வௌவாலின் வடிவத்திலும், தங்கள் கால்களின் மேல் நீண்ட மயிர்கள் (long hairs) தொங்கிக் கொண்டிருப்பது போன்றும் இருக்கின்றன. ஆனால் ஒரு காக்காய் வலிப்பு நோய் பிசாசானது (epileptic demon), வட்டமான கால்கள் அவ்விதமாக அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஆமை போன்று காணப்படுகிறது. ஆனால் பொதுவாக, அநீதி, (oppression - அட்டூழியம், கொடுமை, அடக்குமுறை, கொடுங்கோன்மை, தாங்கொணாத்துன்பம், கொடுஞ்செயல், உபத்திரவம் -

தமிழாக்கியோன்.) செய்யும் பிசாசானது அதிகமாக, ஒரு-ஒரு மேகத்தின் வடிவத்தில் (cloud form), ஒரு அலையைப் போன்று இருப்பதாகக் காணப்படுகிறது; மேலும் அது ஒரு... நீங்கள் அந்த வேறு பரிமாணத்தில் அந்த ஆவியைக் காணும்போது, அது அப்படியே மிகவும் வினோதமான ஒலியை எழுப்புகிறது.

இப்பொழுது, அது தவறு என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் அதைத் தெளிவாக அறிந்து கொள்வீர்கள். நீங்கள் மாத்திரம் ஆவிக்குரியவைகளைக் காண்கிற கண்ணாடியை எடுத்து, உங்கள் ஆத்துமாவுக்குள் அலசியாராய மாத்திரம் கூடுமானால். நீங்கள் சந்தேகிப்பீர்களானால், அது எதைப்போன்று காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வீர்கள். மிகப்பெரிய பிசாசு, பிசாசுகளுக்கெல்லாம் தலைமைப் பிசாசு அவிசுவாசம் தான். அங்கேயிருக்கும் ஒரே பாவம் அதுதான். அவிசுவாசத்தைத் தவிர வேறு எந்தப் பாவமும் கிடையாது. இந்த எல்லா சிறு ஒழுக்கம் சார்ந்தவைகளும் மற்றும் காரியங்களும்: புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாட்டம், விபச்சாரம் செய்தல்; அவை வெறுமனே தன்மைகளாக இருக்கின்றன. நீங்கள் விசுவாசியாத காரணத்தினால் தான் அதைச் செய்கிறீர்கள், அவிசுவாசம் தான், நீங்கள் அதைச் செய்யும்படி செய்கிறது. நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்திருந்தால், நீங்கள் அதைச் செய்திருக்க மாட்டீர்கள். அது சரியே.

***செய்தி:*** பிசாசியல், நவம்பர் 12, 1953

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# உங்களிலிருக்கிறவர் பெரியவர்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

அவர் பிழைத்திருக்கிறார் என்று தேவனுடைய வார்த்தை வாக்களிக்கின்றது. அவர் பிழைத்திருக்கிறபடியால் நீங்களும் பிழைத்திருக்கிறீர்கள். "நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள். அதே கிரியைகள். ஆனால் அதிகமான கிரியைகளை செய்வீர்கள். ஏனெனில் "நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன்" என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார். அவர் எல்லாவற்றின் மேலும் ஜெயங்கொண்டிருக்கிறார். அவர்தான் அன்று காற்றை நிறுத்தினார். அவர்தான் அந்த அணில்களை சிருஷ்டித்தார். அது இருமுறை சம்பவித்தது. சார்லி, ஒருமுறை அது நீங்கள் இருக்கும் இடத்தில் நிகழ்ந்தது. அடுத்த முறை சகோதரன் ஃபிரெட்டும் சகோதரன் பாக்ங்ஸ¯ம் எங்களுடன் மலையின் மேல் இருந்த போது நிகழ்ந்தது.

இது ஜெர்மனியில் நிகழ்ந்தது. **அப்பொழுது என் ஒவ்வொரு பக்கத்திலும் பதினைந்து மந்திரவாதிகள்...** பில்லியும், சகோதரன் ஆர்கன்பிரைட்டும், என்னைக் காண அவர்களுக்கு அனுமதி தர மறுத்துவிட்ட காரணத்தால், அவர்கள், "இந்த கூடாரத்தைச் சிதறப் பண்ணப் போகிறோம்"

என்று சவால்விட்டனர். **அவர்கள் அங்கு அமர்ந்து கொண்டு, மந்திரங்களைச் சொல்லி, தங்கள் தெய்வத்தை (பிசாசை) அழைத்தனர்.** அப்பொழுது பலத்த புயல் **காற்று வீசியது.** அந்த கூடாரத்தில் முப்பதாயிரம் அல்லது நாற்பதாயிரம் ஜெர்மானியர் அமர்ந்திருந்தனர். **கூடாரம் இப்படியாக மேலே உயர்ந்து, கீழே விழுந்தது.** அவர்கள் ஒரு பறவையின் சிறகை கத்தரியால் வெட்டி, அதை கூடாரத்துக்கு நேராக காண்பித்துக் கொண்டிருந்தனர். **அவர்கள் அங்கு அமர்ந்திருந்து, தங்கள் மந்திரங்களை ஓதி,** இந்த மூன்று பரிசுத்த வார்த்தைகளை, “**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி உள உள உள உள; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி உள உள உள**” என்பதாக ஓதிக் கொண்டிருந்தனர்.

**அப்பொழுது பலத்த புயல்காற்று தோன்றினது. ஆம், சாத்தான் வான**

**மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் தலைவன். அவர்கள் புயல் காற்றை வரவழைத்தனர்.** அந்த பெரிய கூடாரம் ஒரு நகர வீடு வரிசை (City block) அளவிற்கு அவ்வளவு பெரியதாயிருந்தது. கான்வஸ் (Canvas) துணியினால் அது தைக்கப்பட்டிருந்தது. **காற்று அதற்கடியில் புகுந்து அதை அப்படியே தூக்கியது. காற்றும் மின்னலும் சேர்ந்து அதை பறக்கச் செய்தது.** நானோ தொடர்ந்து பிரசங்கம் செய்து கொண்டேயிருந்தேன்.

அவர்கள் தங்கள் மந்திரங்களை ஓதி, அந்த மூன்று சிறிய பரிசுத்த வார்த்தைகளாகிய, '**பிதா, குமாரன், பரிசுத்த ஆவி**' என்பவைகளை இரு புறத்திலும் உச்சரித்துக் கொண்டேயிருந்தனர். **அவர்கள் வணங்கின நிலையில் இருந்தபோது, அவர்களைப் பிசாசுகள் சூழ்ந்து கொண்டிருப்பதை நான் கண்டேன்.** ஆனால் அது கட்டப்படவில்லை.

நான் சகோதரன் லௌஸ்டரிடம், “இதை நீங்கள் மொழி பெயர்க்க வேண்டாம்” என்று கூறி விட்டு,

“சகோதரன் ஆர்கன்பிரைட், ஜெபம் செய்து கொண்டிருங்கள்” என்றேன்.

**நான், “பிதாவாகிய தேவனே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நீர்தான் என்னை இங்கு அனுப்பினீர். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் ஜெர்மானிய நாட்டில் காலடி வைத்தேன். ஏனெனில் நீர் என்னை இங்கு அனுப்பினீர்.** அந்த மேகத்திற்கு என் மீது எவ்வித அதிகாரமுமில்லை. ஏனெனில் நான் அபிஷேகம் பண்ணப்பட்டு, ஜனங்கள் இரட்சிக்கப்படுவதற்காக இங்கு அனுப்பப்பட்டுள்ளேன். **இங்கிருந்து நீ புறப்பட்டுச் செல்ல இயேசுவின் நாமத்தில் கட்டளைடுகிறேன்” என்றேன்.**

**அப்பொழுது இடிகள் முழக்கமிட்டுக் கொண்டே, உருண்டோடிவிட்டன. சூரியன் பிரகாசிக்கத் தொடங்கினது. கூடாரமும்**

**அமைதி பெற்று தன் சுயநிலைக்கு வந்தது.**

**பத்து நிமிடங்களுக்குள் ஏறக்குறைய பத்தாயிரம் பேர் பிரசங்க பீடத்தை சுற்றிலும் வந்து, இரக்கத்திற்காக கெஞ்சி, தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையைக் காண விரும்பினர்.** ஏன்? "**உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்**" பாருங்கள்?

"உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" இந்த துன்பம், துயரங்களைக் காணும்போது, ஓ, சகோதரனே, சகோதரியே, நமக்கு எவ்வித கவலையுமில்லை. **தேவன் மகத்துவமுள்ளவர். அவர் உங்களுக்குள் இருக்கிறார். நீங்கள் நம்புகின்றீர்களா?** (சபையோர் - "ஆமென்" என்கின்றனர் - ஆசி).

*செய்தி:* 63-11-10E *உங்களிலிருக்கிறவர்*

★★★★★

# கர்த்தருடைய தூதர்கள் அவருக்கு பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்

---

# THE ANGELS OF THE LORD ARE ENCAMPED ABOUT THOSE WHO FEAR HIM

(இப்புத்தகம் சகோதரன் பிரன்ஹாம் அவர்கள் பேசிய வெவ்வேறு செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளது)

*(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)*

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**சங்கீதம் 34:7**

# கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.

The angel of the LORD encampeth round about them that fear him, and delivereth them.

★★★★★

'encampeth' (encamp) என்ற ஆங்கில வார்த்தைக்கு சில அர்த்தங்கள்:

1. பாளயமிறங்குதல்
2. முகாமிடுவது, குறிப்பாக இராணுவம் முகாமிடுதல்
3. சேனை பாளயமடித்து இறங்குதல்
4. கூடாரங்களைப் போட்டு இறங்குதல்
5. பாளயத்தில் தங்கி வசித்தல்
6. படை தங்கும் பாசறையில் வசித்தல்

_________________

*வெளியிடப்பட்டது: ஜூலை 2020*

# கர்த்தருடைய தூதர்கள் அவருக்கு பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்

## (THE ANGELS OF THE LORD ARE ENCAMPED ABOUT THOSE WHO FEAR HIM)

24. கவனியுங்கள். நாம் இங்கே மிக மோசமான ஒரு இருள் நிறைந்த காட்சியை வரைந்து கொண்டிருக்கிறோம். நாம் ஒருமுறை நம்முடைய கேமராவை இந்தவிதமாகத் திருப்புவோம்.

ஓ, என்னே. இங்கே கீழே ஏதாவது ஒன்று நடந்து கொண்டிருக்கும் போது, அங்கே மேலேயும் கூட ஏதாவது நடந்து கொண்டு தான் இருக்கிறது. அதற்கு எப்போதுமே இரண்டு பக்கங்கள் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். சாத்தான் வேலையில் ஈடுபடும்போது, இயேசுவும் கூட வேலையில் ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கிறார். நீங்கள் எப்பொழுதாவது உங்கள் விசுவாசத்தை ஒப்புவிப்பது, அது அந்தவிதமாகத்தான் போகிறது. அதை கிறிஸ்துவுக்குக் கொடுங்கள்.

நாம் இவ்விதமாக மேலே நோக்கிப் பார்க்கலாம். உங்களுக்குத் தெரியும், அவர் அங்கே தம்முடைய மகத்துவத்தில் வீற்றிருப்பதை என்னால் காண முடிகிறது. அவருடைய

ஆசாரிய வஸ்திரத்தை தம்மைச் சுற்றிலும் தொங்கிக் கொண் டிருக்க, அவர் கீழே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஒரு மகத்தான தூதன் அவருடைய வலது பாரிசத்திற்கு வருவதை நான் காண்கிறேன். அவனுடைய பெயர் காபிரி யேல், அவன் மகா பிரதான தூதனாயிருந்தான். அவன் மேலே ஓடிவந்து, தன்னுடைய பட்டயத்தை உருவி, "எஜமானே, கீழே பாபிலோனில் பார்த்தீரா? அங்கே கீழே உமது ஜனங்கள் உமக்காக அசையாமல் உறுதியாக நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிற்பதற்கான வேளை வந்தி ருக்கிறது, அவர்கள் உறுதியாக நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கேயிருக்கும் அந்த ஒரு கூட்ட ஜனங்கள் அவர்களை எரிகிற அக்கினி சூளைக்குள் தள்ளப் போகி றார்கள். நான் அங்கே கீழே இறங்கிச் சென்று, அந்தக் காரி யத்தையே ஒன்றுமில்லாமல் ஆக்கிப் போடுகிறேன்" என்றான்.

அவனால் அதைச் செய்ய முடிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆம், ஐயா. அவர் தமது தூதர்களுக்கு இவை களின் மேல் கட்டளையிடுவார் என்று அவர் சொல்லி யிருக்கிறார். தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர் களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள் என்று நான் விசுவா சிக்கிறேன்.

***செய்தி:*** **வேளை வந்தது, ஏப்ரல் 15, 1951 மாலை**

★★★★★

219. அவர்கள் நதிக்குச் செல்கின்றனர். ஓ, அது ஒரு மகத்தான பெரிய நதியாகும், ஏறக்குறைய உலகத்திலே இருக் கிற பெரிய நதிகளில் இரண்டாவதாகும். மேலும் எனவே, பிறகு, மகத்தான பெரிய நதி, தண்ணீர் வேகமாக ஓடும், பெரிய பெரிய முதலைகளும் ஆட்பிடியன் முதலைகளும் நிறைந்த நதி. ஓ, அவைகள் தடித்துக் காணப்பட்டன. வ்யூ!

அந்தச் சிறிய பிள்ளைகள் எல்லாரையும் அவைகளுக்கு இரையாக கொடுத்தனர். (ஆகவே) அவைகள் தடித்து புஷ்டி யாக காணப்பட்டன. அவள் கூறுகிறாள், யோகெபேத் தன் னுடைய கணவனாகிய அம்ராமிடம் "ஓ, இந்த முதலைகள் இதைப் பிடித்துக்கொண்டால் என்னவாகும்? இங்கே இருக்கின்ற முதலைகள் இதை (குழந்தையைத்) தொடுமானால் என்னவாகும்?" என்றாள்.

220. அவன், "கவலைப்படாதே, அவைகள் எப்பொழு தாவது இந்தத் தாரின் மேல் தங்கள் மூக்கை வைக்குமானால், அவைகள் கீழே ஓடிவிடும், பாருங்கள். காரணம் என்ன வென்றால் தார் நாறும், பார். தன் மூக்கை இதில் ஒட்ட வைத்துக் கொள்ளும். அவைகள் ஓடிவிடும் அளவுக்கு, தார் மிகவுமாக நாற்றமெடுப்பதால் மானிட மாமிச வாசனையை அதனால் முகர்ந்து பார்க்க முடியாது, எனவே அது ஓடி விடும். அது பாதுகாப்பாகவே இருக்கும். நீ கவலைப்படாதே" என்றான். ஆகவே அவர்கள்... அந்தச் சிறிய பேழையை கீழே வைத்தான். அவள் சொன்னாள்... "இப்பொழுது குழந் தைக்கு பால் கொடு" என்றான்.

221. ஆகவே அந்த தாய் அந்த குழந்தையை எடுத்து, அதற்கு பால் கொடுக்கிறாள், அதனுடைய காலை ஆகார உணவை அது பெற்றுக்கொள்ளும் வரையில், அதிகாலை யிலே அதற்கு பாலை கொடுக்கிறாள். பிறகு அவள் [சகோ தரன் பிரான்ஹாம் மூன்று முறை முத்தமிடுகிற சத்தத்தை உண்டாக்குகிறார் - ஆசி] அதற்கு முத்தமிடுகிறாள். பிறகு அவள், "இப்பொழுது, ஆரோனே, நீ இதற்கு முத்தமிடலாம்" என்றாள். ஆரோன் குழந்தைக்கு முத்தம் கொடுக்கிறான். பிறகு மிரியாமிடம் அதைக் கொண்டு போகிறாள், மிரியாம் அதற்கு முத்தம் கொடுக்கிறாள். பிறகு தாய் அதற்கு முத்த மிட்டு "ஓ, என்னால்..." என்றாள்.

222. "இப்பொழுது, உஷ்-உஷ்-உஷ்! இப்பொழுது கேளுங்கள், நாம் யுத்த வீரர்களாக இருக்க வேண்டும். பாருங்கள்? நாம் யுத்த வீரர்களாக இருக்க வேண்டும். இப்பொழுது நீங்கள் எல்லாரும் இதை மறுபடியுமாக முத்த மிட விரும்புகிறீர்களா?" சுற்றிலும் (இருந்து), மறுபடியுமாக அதை அவர்கள் எல்லோரும் முத்தமிட்டார்கள். பிறகு அதை பெட்டிக்குள் வைத்தார்கள்.

223. அந்தத் தாய் சிறிய போர்வையையும் சிறிய தலையணையையும் செய்து அதன் மேல் வைத்து, அங்கே அதன்மேல் அதை (குழந்தையை) வைத்துவிட்டு, "என்னு டைய பிரியமான சிறிய குழந்தையே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக" என்றாள்.

"உஷ்-உஷ்-உஷ்! இப்பொழுது, தேவன் அதைப் பார்த்துக் கொள்வார். கவலைப்படாதே."

224. சிறிய மூடியை மூடினார்கள். முதலாவது காரியம் என்னவென்று உங்களுக்கு தெரியுமா, அப்பா தன்னுடைய கோட்டு, மற்றும் சட்டையை கழற்றி விட்டு, இதோ சிரமத் தோடு தண்ணீரில் நீந்திச் செல்கிறார் (wading).

225. ஏறக்குறைய இந்தச் சமயத்தில் பரலோகத்தில் என்ன நடந்து கொண்டிருந்தது என்று நீங்கள் நினைக்கி றீர்கள்? அல்லேலூயா! உங்களுக்குத் தெரியுமா, இங்கே காரியங்கள் நடைபெறுகின்ற போது, அங்கே மேலேயும் கூட ஏதோவொன்று நடந்து கொண்டிருக்கும். ஆமென்! தேவன் தம்முடைய சிங்காசனத்திலிருந்து எழுந்து நடந்து சென்று, "காபிரியேல்! காபிரியேல்! எங்கேயிருக்கிறாய்" என்று கூப்பிடு வதை என்னால் காண முடிகிறது.

"கர்த்தாவே, இதோ இருக்கிறேன்" என்றான் காபிரியேல்.

226. "இங்கே வா! உனக்கு ஒன்றை நான் காண்பிக்க போகிறேன், தூதர்களே எல்லாரும் இங்கே சுற்றிலும் ஒருநிமிடம் வாருங்கள், நான் உங்களுக்கு ஒன்றை காண்பிக்க விரும்புகிறேன். என்னை விசுவாசிக்கிற ஜனங்களை நான் கொண்டிருக்கிறேன். ஆம், என்னில் நம்பிக்கை வைக்கிற ஜனங்களை நான் கொண்டிருக்கிறேன். ஒரு நிமிடம் இங்கே வாருங்கள்! இதை நீங்கள் பாருங்கள், தூதர்களே, இது உங்கள் எல்லாருக்கும் நல்லதாக இருக்கும், பாருங்கள்!"

"அது எங்கேயிருக்கிறது?"

"அதோ கீழே நோக்கிப் பாருங்கள்."

"ஆமாம், ஆம். ஆமாம், நான் காண்கிறேன்".

227. "அதோ கீழே பார். அங்கே அந்த - அந்த - அந்த நதியிலுள்ள நாணல் புதர்களின் ஓரத்தில், அந்த நடைபாதை கற்கள் (அண்டையிலும்) மற்றும் காரியங்களிலும் பார்த்தீர்களா?"

"ஆமாம்"

"அங்கே பார்!"

"அது என்ன?"

228. "அங்கே ஒரு மனிதன் முழங்காற்படியிட்டு தன் கரங்களையுயர்த்தி என்னைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறான். அங்கே அழுது கொண்டிருக்கிற தாயும், அழுகிற இரு சிறு பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்கள் கடைசி வரை என்னில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். காபிரியேல், நீ அங்கே உள்ளே சென்றதை நினைவில் வைத்திருக்கிறாயா? அந்த மனிதனை ஞாபகங்கொண்டிருக்கிறாயா?"

229. “ஆம், அந்த இரவில் அந்த அறையில் அவனை சந்தித்து பேசினேன். உ-ஊ”

230. “அவன் இன்னும் என்னில் நம்பிக்கை வைத்தி ருக்கிறான். என்னை விசுவாசிக்கின்ற ஜனங்களை நான் கொண்டிருக்கிறேன்! காரியத்தின் முடிவு வரை என்னில் நம்பிக்கையாயிருக்கிற ஜனங்கள் எனக்கு இருக்கின்றனர்!” [சகோதரன் பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை ஆறு தடவைகள் தட்டுகிறார் - ஆசிரியர்.] “அவனைப் பார்? அவனை நோக்கிப்பார்.”

“ஆமாம், ஓ, அது வீரமுள்ள செயல் அல்லவா!”

231. அந்த தகப்பன் தண்ணீரில் நடந்து சென்று, அந்த சிறிய படகை தள்ளி விடத் தொடங்குகிறான்.

“காபிரியேல்!” என்று **அவர்** கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

“ஆம், கர்த்தாவே?”

232. “பத்தாயிரம் தூதர்களை இங்கு கூப்பிடு. சீக்கிர மாக அவர்களுக்கு கட்டளை கொடுத்து அனுப்பு. பரலோ கத்தின் சேனைகளை கூப்பிடு. அவைகள் எல்லாம் வானத் தின் பலகணி வழியாக கீழிறங்கும்படி அனுப்பு, நைல் நதியண்டை அவைகளைக் கொண்டு வந்து நிறுத்து. ஒரு முதலையும் அந்த சரக்கைத் தொடக்கூடாதென்று நான் கட்டளையிடுகிறேன்! ஒன்றுமே அதைத் தொடாது! அந்த பெட்டியின் அருகே ஒரு மரத்துண்டு கூட வராதவாறு பார்த்துக்கொள்.” அல்லேலூயா!

233. “அப்படியே ஆகக்கடவது” என்று காபிரியேல் கூறினான். என்னே! அவன் எக்காளத்தை ஊத! பத்தாயிரம் தூதர்கள் ஆயுதம் தரித்தவர்களாக வந்து நின்றனர்!

"முன்னின்று நடத்தப் போகிறவர். நீர் எங்கேயிருக்கப் போகிறீர், கர்த்தாவே?"

234. "மறுமுனையில் **நான்** இருப்பேன்." எப்பொழுதுமே அவர் காரியத்தின் கடைசியில் தான் இருக்கின்றார். "நான் கீழே மறுமுனையில் காத்திருப்பேன். எனக்கு ஒரு நோக்கம் உண்டு. ஜனங்கள் என்னில் நம்பிக்கை வைக்கும் போது, நான் ஏதோவொன்றை, ஒரு நோக்கத்தை உடையவராக இருக்கிறேன்; அவர்களோடு எல்லாம் சரியாக இருக்கும்." சரி, அவர் மறுமுனைக்குச் செல்கின்றார்.

***செய்தி:* மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956**

★★★★★

310. இந்த பீடத்தை சுற்றிலும் இருக்கிற இந்த எல்லா சிறிய பையன்களையும் சிறுமிகளையும் ஆசீர்வதியும். இந்தக் காலையில் இங்கே இருக்கும் தாய்மார்களையும் தகப்பன்களையும் ஆசீர்வதியும். ஓ, உம்முடைய அன்புள்ள கிருபையும், இரக்கமும் அவர்கள் எல்லார் மேலும் இருப்பதாக. எங்களுடைய எல்லா பாவங்களையும் குற்றங்களையும் எங்களுக்கு மன்னியும், கர்த்தாவே. வியாதியை எங்கள் மத்தியிலிருந்து விலக்கியருளும்.

311. தேவனே, காபிரியேலுக்கும் மற்றும் அணிவகுத்த வண்ணம் இருந்த பத்தாயிரம் தூதர்களுக்கும் கட்டளையிட்டவரே, தூதர்களை அனுப்பும்! அல்லேலூயா! இந்தக் காலையில், இந்தச் சிறிய ஏழைப் பிள்ளைகள் இந்த பீடத்தின் அண்டையில் முழங்காற்படியிட்டுள்ளதை அவர்கள் கண்டபோது, எத்தனை அதிகமான தூதர்கள் சுற்றிலும் வந்திருப்பார்கள்! இந்த பீடத்தைச் சுற்றிலும் எல்லா திசைகளிலும், இந்தச் சபை முழுவதிலும், தேவ தூதர்கள் நின்று கொண்டிருக்கின்றனர். பதிவு செய்யும் தூதனும் இங்கே இருந்து

கொண்டு, அவர்களின் பெயர்களை ஒரு புஸ்தகத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறான். அவர்கள் தங்கள் ஆத்துமாவை இழந்து போகப் பண்ணுகிறார்கள், ஆதலால் அதை அவர்கள் கிறிஸ்துவுக்குள் கண்டடைய முடியும்! இதையளிவும், கர்த்தாவே.

312. இந்த நாள் முதற்கொண்டு, இனிமேல் அவர்களுடைய சிறிய ஜீவியங்களானது இனிமையாகவும் தாழ்மையுள்ளதாகவும் இருக்கட்டும். நீர் அவர்களை வீட்டிற்கு அழைத்துக் கொள்ளும் அந்த நாள் வரை, இவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கும், தங்கள் பரலோகப் பிதாவிற்கும் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாக இருக்கட்டும். ஒவ்வொரு சுழலினூடாகவும் தங்களுடைய சிறிய கப்பலில் இருக்கையில் இவர்களை வழிநடத்தும். ஒவ்வொரு முறையும் புதர்களில் அது அகப்பட்டுக் கொள்ளும் போது, தேவனுடைய தூதர்கள் தாமே, தேவனுடைய அன்பென்னும், பாயும் நீரோட்டத்தில் அதைத் தள்ளி விடுவார்களாக. கர்த்தாவே, இதை அளியும். பிறகு பாதையின் முடிவில், ஒரு அன்பார்ந்த வீட்டை இவர்கள் கண்டு, அந்த நாளிலே வரவேற்கும்படியாக, தேவன் வாசலில் நிற்கும், அங்கே, மகிமையில் தங்களுடைய தாயையும், தாங்கள் நேசித்தவர்களையும் காண்பார்களாக. பிதாவே, இதை அளியும்.

***செய்தி:* மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956**

★★★★★

263. அவள், "இப்பொழுது நான் இவனை மோசே என்றழைப்பேன், இவன் என்னுடைய சொந்த குழந்தையாக இருப்பான். நான் இவனைக் காப்பாற்றுவேன்" என்றாள். ஆனால் இப்பொழுது, அவள், "ஆனால் நான் ஒரு மணமாகாத கன்னிப் பெண்ணாயிற்றே, என்னால் இவனுக்கு

பாலூட்ட முடியாது. இவனுக்கு பால்கொடுக்க எனக்கு - எனக்கு - எனக்கு எந்த வழியும் இல்லையே" என்றாள். இந்தப் பால் புட்டிகளும் மற்றும் காரியங்களும் அவர்களி டத்தில் அப்பொழுது இருக்கவில்லை. இப்பொழுது அவர்கள் செய்வது போன்று, அப்பொழுது ஸ்திரீகள் சிகரெட் புகைக்க வில்லை, நீங்கள் பாருங்கள், அவர்கள் தங்களைக் கெடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே அவள், "நல்லது, உங்களுக்குத் தெரிந்தால் ஒரு… என்ன - நான் என்ன செய்வது?" என்றாள். எனவே அவள், "நான்…" என்றாள்.

264. அவர்களில் ஒருத்தி "நான் கூறுகிறேன், மேன் மைக்குரிய அரசியே, உம்முடைய குழந்தைக்குப் பால் கொடுக்கும் செவிலித்தாயை (wet nurse) நான் கண்டுபிடிக் கிறேன்" என்றாள்.

அதற்கு அவள், "ஓ, அது மிகவும் நல்லது" என்றாள். சிறிய…

265. அப்போது ஏதோவொன்று பேசினது, அங்கே அந்த புதற்றுக்கருகில் ஒரு தூதன் நின்று, (மிரியாமிடம்), "மிரியாமே, இதோ உன் தருணம்! இதோ உனக்குரிய வாய்ப்பு!" என்றான். [சகோதரன் பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை எட்டு முறை தட்டுகிறார் - ஆசிரியர்.] (உடனே) சிறிய மிரியாம் துரிதமாக ஓடிச்சென்றாள், "ஒன்றையுமே இப்பொழுது கூறாதே, இரகசியத்தை வெளிப்படுத்தாதே. நீ போய், 'ஒரு செவிலித் தாயை தேடிக்கண்டுபிடிக்கிறேன்' என்று கூறி, போய் உன்னுடைய தாயாரைக் கூட்டிக் கொண்டு வா" என்றான்.

சரி, ஆகவே அவள் அதைச் சொன்னாள். அவள், "மேன்மைக்குரிய அரசியே!" என்றாள்.

266. இப்பொழுது, சாதாரணமாக, "இங்கே நீ என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்?" என்று தான் அவள் கேட்டிருப்பாள். ஆனால், பாருங்கள், தேவன் முழுவதுமாக அங்கே பிரசன்னமாயிருந்தார். என்ன? அணிவகுத்து நடந்து கொண்டிருந்த பத்தாயிரம் தூதர்களை அவர் கொண்டிருந்தார். பாருங்கள்? அவருடைய திட்டம் அருமையாக செய்து முடிக்கப்படப்போகிறது. அங்கே நின்று கொண்டிருந்த பத்தாயிரம் தூதர்களை அவர் உடையவராயிருந்தார்.

***செய்தி:*** **மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956**

★★★★★

245. அந்த வழியாகத் தான் அது செல்கிறது. சில சமயங்களில் நாமும் ஒரு சுழலில் சிக்கிக் கொள்கிறோம், இந்த சிறிய கப்பல். கவலை கொள்ளாதீர். அங்கே யாரோ ஒருவர் கவனித்துக் கொண்டிருக்கிறார். "தேவனுடைய தூதர் கள் அவருக்கு பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்." இப்பொழுது அணிவகுப்பு செய்யும் பட்டியலில் பத்தாயிரம் பேர்களை அவர் கொண்டிருக்கிறார்.

***செய்தி:*** **மோசேயைக் குறித்த போதனை, மே 13, 1956**

★★★★★

102. அங்கே அவர்கள் வெளியே வந்தார்கள், அவரோ அவர்களோடு கூட இருந்தார். இப்பொழுது அவன் சொன் னான்... ஓ, அவர்களிடம் ஒரு சிறு கூடை அப்பம் இருந்தது, அதை அவர்கள் தங்கள் தலையில் வைத்திருந்தார்கள்; அவை எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்து விட்டார்கள், அவர்களிடம் இனியும் இல்லாதிருந்தது. எதுவும் இல்லா திருந்தது. அவர்கள் அந்த இரவில் சிறிது பசியுடனே படுக்கைக்குப் போனார்கள். ஆனால் அடுத்தநாள் காலையில்,

அவர்கள் எழுந்தபோது, அங்கே தரையெல்லாவற்றிலும் அப்பங்கள் கிடந்தன.

103. தேவன் அந்தவிதமாகத்தான் காரியங்களைச் செய்கிறார்; நீங்கள் சரியாகக் கடைசி நிமிடம் வரை வரும்படி விட்டு விடுகிறார், அதன்பிறகு அவரால் அதைக் குறித்து என்ன செய்ய முடியும் என்பதை உங்களுக்குக் காட்டுகிறார். அது சரியே. அதைச் செய்ய அவர் விரும்புகிறார். அதைச் செய்வது அவருக்குப் பிரியம். அவர் தம்முடைய ஜனங்களை எதிர்பாரா ஆச்சரியத்தில் ஆழ்த்த விரும்புகிறார்.

104. மனிதர்களாகிய நீங்கள் அவ்விதமாக உங்கள் மனைவியுடம் செய்வது போன்று. அவளுடைய பிறந்த நாள் வரை காத்திருந்து, அவளை அப்படியே சந்தேகத்தின் கீழாக வைத்து விடுவீர்கள், ஏனென்றால் நீங்கள் அவளை நேசிக்கிறீர்கள்.

105. அந்த காரணத்தினால் தான் தேவன் சிலசமயங் களில் நம்மை பாதையின் முடிவு வரைக்கும் வரும்படி செய்து விடுகிறார், ஏனென்றால் அவர் நம்மை நேசித்து, தம்முடைய இயற்கைக்கு மேலானவைகளையும் அவருடைய வல்லமையையும் நிரூபித்துப் காண்பிக்கும்படி அவர் விரும்பு கிறார். ஏனென்றால் அவர் நம்மை நேசிக்கிறார், ஆகையால் தான் அவர் அதைச் செய்கிறார். ஆம். நாம் ஏறக்குறைய கடைசி அடியெடுத்து வைக்க ஆயத்தமாகும் அந்த இடத்துக்கு நம்மை இறங்கி வரும்படி செய்து விடுகிறார், அதன்பிறகு அவர் காட்சியில் நடந்து உள்ளே வருகிறார்.

106. எபிரெய பிள்ளைகள் சரியாக எரிகிற அக்கினிச் சூளையில் நடந்து செல்ல அவர் அனுமதித்தார், ஆனால் அங்கே ஒரு விசிறியோடு நின்று கொண்டிருந்த ஒரு நாலாவது மனிதர் அங்கேயிருந்தார், அவர் அவர்களை அதிலிருந்து வெளியே கொண்டு வந்தார் (keeping off).

பாருங்கள்? அவர் எப்போதுமே அங்கேயிருக்கிறார். அவர் ஒருபோதும் விலகுவதில்லை. அவர் எப்போதுமே அருகில் இருக்கிறார். "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர் களைச் சூழப் பாளயமிறங்குகிறான்."

107. அங்கே, அந்த இரவில், அவர்கள் அடுத்தநாள் காலையில், அந்த அப்பத்தைப் பொறுக்கினார்கள். சற்று முன்பு தான் சிவந்த சமுத்திரத்தினூடாக கடந்து வந்து; இரத் தத்தின் மூலமாக மீட்கப்பட்டு; தேவனுடைய சுகமளித்தலின் வல்லமையைக் கண்டு, அல்லது தேவனுக்கும்... இடையே, இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் இடையே நின்று கொண் டிருந்த அற்புதமான வல்லமையையும்; அதற்குப் பின்னால் சத்துருக்கள் தண்ணீரில் அமிழ்ந்து மாண்டு போயிருந்ததைக் கண்டிருந்த அந்த இஸ்ரவேலர்களை என்னால் காண முடிகிறது.

***செய்தி:* முழுமையான சந்தோஷத்தில் மீட்பு, மார்ச் 30, 1954**

★★★★★

61. நாம் இங்கேயிருக்கிறோம், எழுப்புதல் நடந்து கொண்டிருக்கிறது. முழு கட்டிடமும் தேவ தூதர்களால் நிரம்பி யிருக்கிறது. தேவனுடைய தூதர்கள் அவரை நேசிக்கிறவர் களைச் சூழ, (அது சரிதானா?), அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்.

இப்பொழுது, பரிசுத்த ஆவியைப் பெற்றிராதவர்களே, இந்த ஜனங்களோடு கூட எழுந்து நின்று, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை விரும்புகிற அவர்கள் மேல் உங்கள் கரங்களை வையுங்கள். பரிசுத்த ஆவியைக் கொண்டிருக்கிற நீங்கள், எழுந்து நின்று, பரிசுத்த ஆவியில்லாதவர்கள் மேல்

உங்கள் கரங்களை வையுங்கள். அங்கே ஒரு பாவி இருப்பான் என்றால், நீயும் கூட எழுந்து நில்.

ஒரு தேவ ஊழியனாக, நான் உலகத்திலுள்ள எதற்காகவும், தவறான எதையும் கூற மாட்டேன் என்று, ஏறக்குறைய பத்து மில்லியன் ஜனங்களோடுள்ள என்னுடைய நற்பெயரை உணர்ந்தவனாக. சரியாக இப்பொழுதே, ஒவ்வொரு பாவியும் இரட்சிக்கப்பட முடியும் என்றும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைத் தேடுகிற ஒவ்வொரு நபரும் சரியாக இப்பொழுதே இந்த நிமிடத்திலேயே நிரப்பப்பட முடியும் என்றும் நான் விசுவாசிக்கிறேன். அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட வருகையின் அடையாளங்கள் தோன்றுவதைப் பார்க்கிறீர்களா?

***செய்தி:* வரவிருக்கிற மகத்தான எழுப்புதலும் பரிசுத்த ஆவியானவரின் ஊற்றப்படுதலும், ஜூலை 18, 1954 பிற்பகல்**

★★★★★

38. எனவே நான், "சீமாட்டியே, அந்த-அந்த தந்தி எந்நேரத்தில் ஆப்பிரிக்காவிலிருந்து வந்தது என்று உங்களால் என்னிடம் கூற முடியுமா?" என்று கேட்டேன்.

அவள், "ஓ, ஆமாம்" என்றாள். அது எப்போது அங்கிருந்து வந்தது என்று என்னிடம் கூறினாள். நான் சென்று, என்னிடம் இருந்த வடக்கு, தெற்கு, மற்றும் மத்திய அமெரிக்க வரைபடத்தை எடுத்தேன், என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அது அப்படியே சகோதரன் பாஸ்வர்த் அவர்கள் அந்த தந்தியை இங்கே (அனுப்ப) துவங்கின நேரத்திலிருந்து இருபத்து நான்கு மணி நேரங்களாக இருந்தது, கர்த்தருடைய தூதனானவர் 24 மணி நேரத்தில், அதை இங்கே வந்து சேரும்படி செய்து, சகோதரன் பாஸ்வர்த் அவர்களுக்காக ஜெபிக்கும்படி என்னிடம் சொன்னார்.

மேலும் இந்த... கர்த்தருடைய தூதனானவர் என்னிடம் பேசியிருந்தார். நான் அவரை மறுபடியும் தொலைபேசியில் அடைய முடிந்த நேரத்தில், கர்த்தர் ஏற்கனவே அவரைச் சுகமாக்கியிருந்தார், அவர் படுக்கையை விட்டு வெளியே வந்து போய்க் கொண்டிருந்தார். அது தொடர்புகொள்வதில் உள்ள அன்பாக இருக்கிறது.

ஓ, சகோதரனே, நீங்கள் தொலைபேசியைக் குறித்து பேசுகிறீர்கள். என்னே, தேவன் அந்த மின் சமிக்ஞைகளை (beat) பத்து இலட்சம் மைல்கள் (தூரத்திலும்) பெற்றிருக்கிறார். கர்த்தருடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள். அவருடைய அற்புதமான கிரியைகள் எவ்வளவாய்...

அந்த வயதான மனிதர் என்னை நேசிக்கிறவர்; என்னே, என்னே, அவர் எனக்காக தம்முடைய ஜீவியத்தை சமர்ப்பித்திருக்கிறார். நானும் அவருக்காக அதைச் செய்திருக் கிறேன். நாங்கள் சகோதரர்களாக இருக்கிறோம்; தொடர்பு.

***செய்தி:*** இப்பொழுது நீ விசுவாசிக்கிறாயா?, ஜூன் 10, 1955

★★★★★

14. இப்பொழுது, நாம் தேவனை நோக்கிப் பார்ப்போம். நிச்சயமாகவே, அவர் இருக்கிறார் என்று நாம் சொல்லுகிற வண்ணமாக, தேவன் உண்மையாயிருந்தால், ஏதோவொன்று அவரை அறிவிக்க வேண்டும். நம்மால் அப்படியே நம்முடைய கண்களைத் திறக்க முடியுமானால், உங்களால் தேவனைக் காண முடியும்.

15. இப்பொழுது, ... போன்று, எலிசா தோத்தானில் இருந்தபோது, கேயாசி என்று அழைக்கப்பட்ட ஒரு ஊழியக் காரனையும் தன்னோடு வைத்திருந்தான். கேயாசி தரிசனங்

களைக் கண்டதில்லை, ஆனால் எலிசா தரிசனங்களைக் கண்டான். அவன் தன்னுடைய வீட்டில் இருந்தபடியே, சீரியாவின் இராஜா என்னச் செய்யப் போகிறான் என்பதை அறிந்தவனாயிருந்தான்.

16. எனவே ஒருநாள் அவர்கள்... ஒரு இரவில், அவர்கள் தோத்தானில் உறங்கினார்கள், கேயாசி அடுத்த நாள் அதிகாலையில் எழுந்து, வெளியே வந்தபோது, சீரிய இராணுவங்கள் எல்லாம் பட்டணத்தை சுற்றி வளைத்திருந்தன. உடனே அவன் உள்ளே ஓடிச்சென்று, "பட்டணம் ஒவ்வொரு பக்கத்திலும் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது" என்றான்.

ஆனால் தீர்க்கதரிசியோ, உணர்ச்சிவசப்படாமல் சாந்த மாகவும், அமைதியாகவும், "அவர்களோடிருப்பவர்களைப் பார்க்கிலும் நம்மோடியிருக்கிறவர்கள் அதிகம்" என்றான்.

அவன் சுற்றிலும் நோக்கிப் பார்த்தான், கேயாசி அவ்வாறு சுற்றிலும் பார்த்த போது, எதையும் அவனால் காண முடியவில்லை. எலிசா தன்னுடைய கரங்களை முன்னே நீட்டி (put forth), "தேவனே, இந்த மனிதனுடைய கண்களைத் திறந்தருளும்" என்றான்.

17. ஆவிக்குரிய உலகத்தைக் காணும்படி அவனுடைய கண்கள் திறக்கப்பட்ட போது, அந்த வயதான தீர்க்க தரிசியைச் சுற்றிலும் எல்லா திசையிலும் தூதர்கள் இருந்தார் கள். அந்தமலைகள் தூதர்களைக் கொண்ட அக்கினிமயமான இரதங்களால் கொழுந்து விட்டு எரிகிறதாய் இருந்தது. பாருங்கள், இப்பொழுது சரியாக இங்கேயே ஒரு உலகம் இருக்கிறது; இந்தக் கட்டிடத்தில் லேகியோன் கணக்கில் தூதர்கள் இருக்கிறார்கள்.

சங்கீதங்களில், தேவனுடைய தூதர்கள் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள் என்று தாவீது மூலமாக இயேசு கூறியுள்ளார்.

18. எனவே இங்கே தேவனுக்குப் பயப்படுகிற விசுவாசிகளை நோக்கிப் பாருங்கள், எனவே தான் தூதர்கள் எல்லாவிடங்களிலும் இருக்கிறார்கள். இப்பொழுது, உங்களால் அப்படியே தேவனை ஆராதிக்க முடியுமானால், நம்முடைய கண்களைத் திறந்து, நம்மைச் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் தேவன் இருக்கிறார் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

***செய்தி:* பிதாவை எங்களுக்குக் காண்பியும், ஜூன் 25, 1955**

★★★★★

200. இயேசு அந்த ஸ்திரீயோடு தொடர்பு கொள்ள வேண்டியிருந்த போது, அவரும் கூட தமது சீஷர்களை தூரமாக அனுப்பி விட்டார். பாருங்கள்? நீங்கள் எப்பொழு தாவது அந்தக் கதையை வாசித்திருக்கிறீர்களா? அந்த ஸ்திரீ நின்றிருந்த இடத்தில் நீங்களும் நின்றிருக்க முடிந்திருக்குமா என்று நீங்கள் எப்பொழுதாவது எண்ணிப் பார்த்ததுண்டா என்று வியப்படைகிறேன். அது அற்புதமாக இருந்திருக்காதா? நீங்கள்-நீங்கள்… என்று எப்போதுமே நினைத்தீர்கள். அது அற்புதமாக இருந்திருக்கும்.

201. என்னுடைய அன்பு சகோதரியே, உனக்கு மாத்திரம் தெரிந்திருக்குமானால், நீ அதே இடத்தில் தான் நின்று கொண்டிருக்கிறாய். உம்-உம். அது சரியே. ஏதோ வொன்று நடந்து கொண்டிருக்கிறது என்பதை, நீ ஒரு விசுவாசியாக இப்பொழுது, அறிந்திருக்கிறாய். நான் *இந்த* விதமாக திரும்பிப் பார்த்து, பேசத் தொடங்கினது முதற் கொண்டு, ஒரு உண்மையான, இனிமையான, தாழ்மையான

உணர்வு உன்மேல் வந்திருக்கிறது. அது சரிதானா? அது சரியென்றால், இந்த ஜனங்களை நோக்கி உன்னுடைய கரத்தை உயர்த்து. அது சரியே. காரணம் உனக்கும் எனக்கும் இடையில், நீ அநேகமாக அதைக் குறித்த புகைப்படத்தை ஒருபோதும் கண்டதில்லை, அந்த ஒளியானது உனக்கும் எனக்கும் இடையில் அப்படியே சுற்றிலும் அசைந்து கொண் டிருக்கிறது.

202. இப்பொழுது உடனடியாக, தேவனுக்குச் சித்தமா னால், அவர்... நீங்கள் ஒருக்கால் மூன்று பரிமாணங்களில் இருக்கலாம். இது வேறொரு பரிமாணமாக இருக்கிறது. இது என்மேல் அசைவாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் இது ஒரு **ஆவியாக** இருக்கிறது. உங்களுக்குப் புரிகிறதா? இது வேறொரு உலகத்தில் உள்ளது.

203. ஜனங்களே, தூதர்களும் மற்ற எல்லாமும், அவர்கள் போய்விடவில்லை, அவர்கள்-அவர்கள் எங்க ளுக்கு அருகில் இருக்கிறார்கள்; "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்."

அந்தக் காலையில், தோத்தானில், அந்தப் பையன், "ஓ, சீரிய இராணுவங்கள் நம்மேல் (வந்து) விட்டது" என்று கூறினபோது, எலிசாவை நினைவுகூருங்கள்.

அவன், "அங்கே அவர்களோடிருப்பவர்களைப் பார்க் கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" என்றான். அவனால் யாரையும் காண முடியவில்லை. அவன், "தேவனே, இந்த வாலிபனின் கண்களைத் திறந்தருளும்" என்றான்.

204. அவர் அவனுடைய கண்களைத் திறந்தபோது, அந்த வயதான தீர்க்கதரிசியைச் சுற்றிலும் அக்கினிமயமான தூதர்களும், அக்கினிமயமான இரதங்களும் இருந்தன. அந்த... அங்கே அப்படியே... அப்படியானால் அங்கே அவர்களோ

டிருப்பவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்.

205. பிறப்பின் மூலமாக, அது இப்பொழுது அந்தப் பரிமாணமாக இருக்கிறது. ஒருக்கால் நீங்கள் ஒருபோதும் அப்படிப்பட்டவைகளைக் கண்டிருக்கவே மாட்டீர்கள் (பாருங் கள்?). ஆனால் எப்படியும் நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள். "ஒருபோதும் கண்டிராமல் இருந்தும், விசுவாசிக்கிறவனுக்கு வரும் பலன் எவ்வளவு அதிகமாக இருக்கிறது." ஆனால் நம்மில் சிலர் அதற்காகவே பிறந்திருக்கிறோம். குழந்தையாக பிறந்ததிலிருந்து, தேவன் அதை சபையில் வைக்கிறார். தீர்க்கதரிசிகள் வெறுமனே மனிதன் மூலமாக உள்ளே வைக் கப்படுவதில்லை; அது பிறப்பிலேயே ஒரு வரமாக இருக் கிறது; வேதவாக்கியத்தினூடாக எல்லாமே, குழந்தைப்பருவத் திலிருந்து பிறந்து விடுகிறது.

***செய்தி:*** **குருடனாகிய பர்த்திமேயு, நவம்பர் 15, 1955**

★★★★★

32. ஓ, அல்லேலூயா. ஆனால் தீர்க்கதரிசி, "ஒரு கல் சீயோனிலே வைக்கப்படும், அது விலையேறப்பெற்றதும், பரீட்சிக்கப்பட்டதுமான கல்." என்றான். அது நங்கூரமாக இருக்கும். ஆமாம், ஒரு அற்புதமான கல்… அதன்பிறகு தேவன், அவர் பரலோகத்தில் தேவனாக இருக்கிறார், ஏணி யானது தம்முடைய சொந்த சிங்காசனத்திற்குள் பிணைத் திருக்க, அதோடு கூட அவர் அதை பிரதான மூலைக்கல் லாயிருக்கிற, இயேசு கிறிஸ்துவாகிய மனுஷ குமாரனைத் தவிர வேறு எதிலும் அதை இணைக்கவில்லை. தேவன் தம்முடைய ஏணியை, சுற்றிலும் சறுக்கிச் செல்ல விரும்ப மாட்டார். அவர் அதை ஆதாமோடு கூட ஒரு உடன் படிக்கையில் பிணைக்க முயற்சித்தார். அவனோ அதை

உடைத்துப் போட்டான். அவர் அதை… யோடு செய்து கொண்ட ஒரு உடன்படிக்கையோடு பிணைத்தார், அதை உடைத்துப் போட்டான்.

ஆனால் தேவனோ நிபந்தனையற்றவிதமாக உடன் படிக்கை செய்தார், அவர் அதை கிறிஸ்து இயேசுவுக்குள் பிணைத்தார். அங்கே தான் அது நங்கூரம் பாய்ச்சப் பட்டிருக்கிறது; அங்கே எந்த சறுக்கலோ வழுக்குதலோ கிடையாது; தூரமாகப் போவதற்கு அங்கே எந்த வழியுமே கிடையாது. அது என்னவாக இருக்கிறது? அது பரத்திலுள்ள தேவன் மூலமாக, கீழே தேவ குமாரன் மூலமாகவும் பிணைக்கப்பட்டிருக்கிறது. அது என்ன? அது ஒரு நடை பாதையாக இருக்கிறது; அது பூமியிலிருந்து மகிமையை நோக்கி செல்லும் பிரயாணிகளின் பாதையாக இருக்கிறது. உங்களால் தவறிப்போக முடியாது. கவனியுங்கள், இங்கே மேலும் கீழுமாக இருக்கும் தூதர்களின் மகா கூட்டங்கள், அவர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய், களைப் புற்றவர்களையும் வியாதிப்பட்டவர்களையும் தூக்குகிறவர் களுமாய், அவர்களின் சரீரங்களை சுகப்படுத்தி, தரிசனங் களையும் வல்லமைமிக்க அடையாளங்களையும் அற்புதங் களையும் காண்பிக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள். அது தவறிப்போக முடியாது. அதனால் வழுவிப்போக முடியாது; அதனால் சறுக்கவும் முடியாது. நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். தேவன் அவ்வாறு கூறியுள்ளார்; அது அதை என்றென்றுமாக தீர்த்து வைக்கிறது.

33. அது பரலோகத்திலுள்ள தேவனுடைய இருதயத் தைச் சுற்றிலும், இங்கே கீழேயுள்ள தேவ குமாரனைச் சுற்றிலும் பிணைக்கப்பட்டிருக்கிறது, நாம் அதற்குள்ளே தான் கொண்டுவரப் படுகிறோம். தேவ குமாரன் மூலமாக, நாம் அவரிடத்திற்கு ஏறிச்செல்கிறோம். ஆமென். ஓ, என்னே. அப்படியானால் நீங்கள் எதைக் குறித்து பயப்படுகிறீர்கள்?

தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமிடையே நம்முடைய வாக்குத்தத்தமானது பிணைக்கப்பட்டிருக்கிறது, நாம் அவர்களுக்கு இடையே, தூதர்களோடு கூட இருக்கிறோம்... அவர், "அவர் உங்களைக் குறித்து தமது தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" என்று கூறியிருக்கிறார். தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்.

மேலும் கீழுமாக எல்லாம், நாம் இந்த அஸ்திபாரத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும் போது, ஒவ்வொரு நாளும் உயரமாக, உயரமாக ஏறிக் கொண்டிருக்கிறோம், நான் மேலே, மேலே, மேலே போகையில், ஒவ்வொரு நாளும் ஒரு சுற்று உயரமாக, உயரமாக என்னைக் கொண்டு வருகிறது. ஏதாவது சம்பவித்து, நான் சாலையின் பக்கத்தில் விழுந்தாலோ, அல்லது எனக்கு ஏதாகிலும் சம்பவித்தாலோ, ஒரு பெரிய திரள்கூட்டமான தூதர்களின் சேனை என்னைத் தூக்கும் படியாக அங்கே நின்றுகொண்டிருக்கிறது. "வாருங்கள், நாம் சீயோனை நோக்கி, பரத்திலுள்ள அந்த அழகான பட்டணத்தை நோக்கி அணிவகுத்து மேலே சென்று கொண்டிருக்கிறோம்."

34. அது தவறிப்போக முடியாது, அங்கே அதில் எந்த தவறிப்போகுதலும் கிடையாது. அது நான் என்ன செய்கிறேன் என்பதின் பேரில் இளைப்பாறாது; அது அவர் என்ன செய்திருக்கிறார் என்பதின் பேரில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறது. ஆமென். அது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டு விட்டது. விசுவாசி ஒருமுறை கிறிஸ்து இயேசுவுக்குள் நங்கூரமிடப்பட்டு விட்டான், அவன் அங்கே பின்னாலுள்ள அந்த வாசலினூடாக வந்து, இந்த பெரும்பாதையில் (highway) வருகிறார்கள், நீங்கள் அதைக்கொண்டு நேராக மேலே தேவனை நோக்கி செல்வதைத் தவிர எவ்விதத்திலும் (வேறெங்கும்) போக முடியாது, உங்களைக் கவனித்துக்

கொள்ள தூதர்கள் இருக்கிறார்கள். தேவன் இதற்கு ஒரு வழியை உண்டாக்கியிருக்கிறார்.

அவர் ஆதியிலே, நம்முடைய முதலாவது பெற்றோர்கள் விழுந்ததைக் கண்டபோது, அவர் ஆதாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையைக் கண்டார்; அவர் அவனுக்குள் அந்த ஏணியைப் பிணைக்க முயற்சித்தார், அதுவோ தோல்வியடைந்தது. அதன்பிறகு அவரால் அதைப் பிணைத்து வைக்கக்கூடிய வேறு எதுவுமே அங்கே இல்லாதிருந்தது, ஆனால் அவர் தம்முடைய சொந்த குமாரனை கீழே கொண்டு வந்து, அதை அவரோடு பிணைத்தார். எனவே இப்பொழுது, அதனால் தோல்வியடைய முடியாது. எனவே நாம் எதைக் குறித்துக் கவலைப்படுகிறோம்? நாம் எதைக் குறித்து வியாகூலப்படுகிறோம்? நாம் ஏன் மகத்தான பெரிய நீண்ட முகத்தை உடையவர்களாய் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்? நாம் மேலே நோக்கிப் பார்த்து, சிரிப்போம். மேலே நோக்கிப்பார்த்து, சிரிப்பது மட்டுமல்ல, ஆனால் நகைப்போம், நகைப்பது மட்டுமல்ல, ஆனால் எல்லாவிடங்களிலும் பரிசுத்த கரங்களை உயர்த்தி, தேவனுக்குத் துதியையும் மகிமையையும் செலுத்திக் கொண்டிருப்போம், அவருடைய வாக்குத்தத்தங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது, ஆம் என்றோ இல்லை என்றோ அல்ல, ஆம் என்றும் இல்லை என்றும் அல்ல, ஆனால் ஆம் என்று தான் இருக்கிறது. அங்கே அதில் இல்லை என்பதே இல்லை. ஆமாம்.

35. நம்முடைய அஸ்திபாரம் நிச்சயமாகவே தாங்கி நிற்கிறது. தேவனுடைய அஸ்திபாரம்... தேவன் சீயோனிலே மூலைக்கல்லை வைத்தார். அங்கே தான் நாம் இருக்கிறோம், வழுவிப்போகவோ, சறுக்கிச் செல்லவோ, அசைக்கப்படவோ முடியாது. அப்போது நாம் கிறிஸ்துவின் மூலமாக, அந்த வாசலுக்குள் வந்து, இங்கே வைக்கப்படுகிறோம். ஓ, நெடு

கிலும் நமக்கு மேடுபள்ளமான (காரியங்கள்) இருக்கலாம்; அது குறைந்தபட்சம் உண்மையாக (true enough) இருக்க லாம், வியாதிகளையும் தொல்லைகளையும் உடையவர்களாக இருக்கலாம். ஆனால் பாதையின் துவக்க முதல் எல்லா நேரமும் பெருங்கூட்டம் தூதர்கள் அங்கேயிருந்து, உங்களை எந்த நேரமும் தாங்கிப் பிடித்துக்கொள்கிறார்கள். நீங்கள் விழும்போது, உங்களைத் தூக்கிவிடுகிறார்கள். ஓ, ஆமாம், அவர் அங்கேயிருக்கிறார். அவர் அதை வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார். அவர் அதற்கு ஒரு வழியை உண்டாக்க வேண்டியவராயிருந்தார்.

எனவே அவர் உண்டாக்க முடிந்த ஒரே வழி என்னவென்றால், விலையேறப்பெற்றதும், பரீட்சிக்கப்பட்டதும், தெரிந்துகொள்ளப்பட்டதுமான கல்லாகிய அந்த மூலைக்கல் லாகவே இருந்தது. "கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்: நீதிமான்கள் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பார்கள்." அது சரியே. பாதுகாப்பு, இனி எதுவும் உங்களைத் தொல்லைப் படுத்த முடியாது. நீங்கள் அந்தப் பாறையில் இருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் பிடித்திருக்கிறீர்களா என்பதல்ல; அது அந்தப் பாறை தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறதா என்பதாக இருக்கிறது. அந்தப் பாறை தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது, எனவே அப்படியானால் நீங்கள்-நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். எதுவும் உங்களுக்குத் தீங்கு செய்ய முடியாது, தேவன் அனுமதித்தாலொழிய எதுவும் உங்களிடம் வர முடியாது.

***செய்தி:*** **தேவனுடைய உரைக்கப்பட்ட வார்த்தையின் தவறாத தன்மை, ஏப்ரல் 4, 1956**

★★★★★

193. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் தலைகளைத் தாழ்த்தி, என்னோடு கூட ஜெபத்தில் இணைந்துகொள்ள விரும்புகிறேன்.

194. அன்புள்ள பரலோகப் பிதாவே, இந்தப் பரிதாப மான சிறு பெண்பிள்ளை... வாழ்க்கை மிகவும் குறுகியது. இப்பொழுது, இவள் ஒரு வாலிப தாயாக இருக்கிறாள். சற்று முன்பு, இவள் தன்னுடைய கரத்தை உயர்த்தினபோது, ஒவ்வொரு பாவமும் எடுத்துப்போடப்பட்டு விட்டன என் பதை நான் அறிவேன். தேவனே, உமது வேதாகமம் அதற்கு ஒரு சாட்சியாக உள்ளது. நீர் அதை பரலோகத்திலிருந்து, “விசுவாசிக்கிறவன் பெற்றுக்கொள்வான்” என்று உரைத்திருக்கிறீர்.

195. இப்பொழுது, கர்த்தாவே, இவளுக்கு முன்னால் பயங்கரமான போராட்டத்தை இவள் பெற்றிருக்கிறாள். சாத்தான், அதோ அங்கே மேலே, இவளைத் தள்ளி, இவளிடமிருந்து அந்தக் குழந்தைகளை எடுத்து, இவள் தன்னுடைய தலையை சுவரில் மோதும்படியாக, இவளை பைத்தியக்கார மருத்துவமனையில் வைத்து விட்டான். ஆனால் இன்றைக்கு, அவள் சரியான இடத்தில், பீடத் தண்டையில் வந்திருக்கிறாள். இவள் ஜீவனுள்ள தேவனுடைய வீட்டிற்கு வந்திருக்கிறாள். அது இருந்த வண்ணமாகவே, இவள் இங்கே, பீடத்தண்டையில் தனியாக நிற்கிறாள், ஆனால் தனியாக இல்லை. தேவனுடைய தூதர்கள் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரும் கூட அருகாமையில் இருக்கிறார். அநேக காரியங்கள் சம்பவித்துக் கொண்டிருக்கிறதை காணும் ஒரு சாட்சியாக இவள் இருந்து, நீரே தேவன் என்பதை அறிந்திருக்கிறாள். நீர் இந்த நாளில், ஓரா மேக்கு (Ora May) உதவிசெய்ய வேண்டுமென்று என்னுடைய முழு இருதயத்தோடும், என்னுடைய முழு ஆத்துமாவோடும் ஜெபிக்கிறேன்.

***செய்தி:*** பரிபூரணம், ஜூன் 10, 1956

★★★★★

102. நாம் ஜெபிப்பதற்கு முன்பாக, இன்னும் ஒருவிசை. தங்களுடைய கரங்களை உயர்த்தியிராமல், இந்த ஜெபத்தில் நினைவுகூரப்பட விரும்புகிற யாராவது அங்கேயிருப்பார் களானால், உங்கள் கரத்தை மேலே உயர்த்துவீர்களா. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோத ரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரியே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. சகோதரனே, தேவன் உன்னை ஆசீர் வதிப்பாராக. சரி. சரி. மகனே, தேவன் உன்னை ஆசீர் வதிப்பாராக. இப்பொழுது, அவர் உங்களைக் காண்கிறார். சரியாக இந்தக் காலையில், அங்கே பதிவு செய்யப் பட்டிருக்கிறது.

103. நீங்கள் என்னுடைய வார்த்தைகளைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். கனத்தின் மூலமாகவும், அன்பின் மூலமாகவும் நீங்கள் என்னை வகைப்படுத்துவீர்களானால், நீங்கள் அவ்வாறு கூறுவீர்களானால், நான் தேவனுடைய ஞானதிஷ்டிக்காரன் என்று நீங்கள் என்னை வகைப்படுத் தியிருப்பீர்களானால், இது பரலோகத்திலுள்ள புஸ்தகங்களில் இருக்கிறது என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். அவர் பிரசன் னமாயிருக்கிறார். காணக்கூடாத உலகமானது எல்லா நேர மும் சரியாக உங்களுடனே கூட இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளும் இடத்தில் ஜீவிக்க உங்களுக்கு விருப்பமிருக்காதா? நீங்கள் இங்கே வெளியே நடந்து வந்து, உங்கள் காரில் ஏறும்போது, தூதர்கள் உங்கள் பக்கத்தில் தங்கள் இடங்களை எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை உண ரும்போது. நீங்கள், அதோ அங்கே உங்களிடம் மிகவும்

அன்பற்ற முறையில் கடுமையாக நடந்து கொள்ளும் அந்த மனிதனிடம் நடந்து போகும்போது, பரிசுத்த ஆவியானவர் சரியாக உங்களுக்கு மேலாக நின்று கொண்டிருக்கிறார், அப்போது தூதர்கள் உங்களைச் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் சூழ்ந்திருக்கிறார்கள் (all around).

"அது சரிதானா, சகோதரன் பிரன்ஹாமே?"

104. வேதாகமம் அவ்வாறு கூறுகிறது. "தேவ தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் சூழ்ந்து கொள்கிறார்கள், பாளயமிறங்குகிறார்கள்." அவர்கள் திரும்ப பரலோகத்திற்கு போவதில்லை; அவர்கள் அங்கேயே முகாமிடுகிறார்கள். உங்கள் ஜீவியப் பிரயாணம் முழுவதும் ஆரம்பம் முதல் முடிவு மட்டுமாக உங்களை விழித்திருந்து காவல் காக்கும்படியான வேலைக்காக அவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஓ, அது அற்புதமாக இல்லையா?

***செய்தி:* வெளிப்படுத்தின விசேஷம், அடையாளங்களின் புஸ்தகம், ஜூன் 17, 1956**

★★★★★

88. இன்றிரவும், அந்தவிதமாகத்தான் அது இருக்கிறது. நம்மைக் காவல் காத்து பாதுகாக்கும்படியாக தேவன் தமது தூதர்களை விடுகிறார். "தேவனுடைய தூதர்கள்... சூழப் பாளயமிறங்குகிறார்கள்." அவர்கள் திரும்பிப் போவதும் வருவதுமாக (back and forth) இருப்பதில்லை. அவர்கள் இங்கேயே தங்கியிருக்கிறார்கள். எனக்கு அது பிடிக்கும். "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள்."

காபிரியேல், “ஆனால், கர்த்தாவே, இந்த நேரம் எல்லாம் நீர் எங்கேயிருக்கப் போகிறீர்?” என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. ஊ.

“நான் வரவேற்கும் முனையில் (receiving end), மறு முனையில் இருக்கப் போகிறேன்.” அது அங்கே போய்ச் சேரும்போது, அதை வரவேற்கும்படியாக அவர் அங்கே இருப்பார்.

89. இன்றிரவு, அவர் அங்கேதான் நின்று கொண்டிருக் கிறார், வரவேற்கும் முனையில். அவர் தம்முடைய பிள்ளை களை வரவேற்கும்படியாக, மகிமையின் நுழைவாயிலில், வரவேற்கும் முனையில் நின்று கொண்டிருக்கிறார். ஏதோ வொரு நாளில், வாழ்க்கை முடியும்போது, அவர் கீழே நீட்டி, அந்தப் பரிசுத்த பெரும்பாதையின் முனையை தமது கரத்தைச் சுற்றிலும் மடித்து, அதை ஒரு பெரிய இழுப்பாக இழுப்பார். அவர் அவ்வாறு செய்யும்போது, அவள் இங்கே உடைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து, அவர் ஒவ்வொரு பரி சுத்தவானையும் மறுபடியுமாக மேலே நித்தியத்தின் மண் டலத்திற்குள் திரும்ப தூக்கிக் கொள்வார், அவள் காலங் களினூடாக உருண்டு போய் விடுவாள். அவர் வரவேற்கும் முனையில் (receiving end) இருக்கிறார்.

90. நீங்கள் எதைக் குறித்து பயப்படுகிறீர்கள்? அவர் அதைச் செய்ய மாட்டாரோ என்று பயப்படுகிறீர்களா? ஆமாம், அவர் அதைச் செய்வார். பரலோகத்தில் ஒரு தேவன் இருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்ச யமாக, அவர் அதைச் செய்வார். அவர் வரவேற்பளிக்கும் முனையில் இருக்கிறார். ஓ, என்னே. அதை நோக்கிப் பாருங்கள்!

***செய்தி:*** நியாயப்பிரமாணம் ஒரு நிழலை உடைதாய் இருக்கிறது, ஜூன் 21, 1956

★★★★★

94. இயேசு, "நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்" என்று கூறினார். அப்படியானால், தேவனால் ஆணையிட்டுக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையானது உண்மையாக இருக்கிறது. அவர் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கை உண்மையாக இருக்கிறதா? அப்படியானால் நாம் எதைக் குறித்து கவலைப்பட வேண்டும்? இயேசு இங்கேயிருக்கிறார். அவருடைய ஆவி இங்கேயிருக்கிறது. நாம் ஒரு... சற்று முன்பு என்ன சம்பவித்தது? நான் வேறொரு உலகத்திற்குள் போனேன். அது காணக்கூடாத ஒரு உலகம். இவ்விதமாக ஒருவர் மற்றவரை காணத்தக்கதாக நாம் மிகவும் உணர்வுள்ளவர்களாக ஆகியிருக்கிறோம். ஆனால் அங்கே காணக்கூடாத ஒரு உலகமும் இருக்கிறது; மேலும் நீங்கள்... நீங்கள் காணக்கூடிய எதைக் காட்டிலும் அது பெரியதாக உள்ளது. இங்கே கிறிஸ்து இருக்கிறார்.

இந்த உலகத்தில், இங்கே இந்தக் கட்டிடத்தில், அசுத்த ஆவிகளும் யுத்தமும் உள்ளன. மேலும் கிறிஸ்தவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளார்கள், விசுவாசத்தைக் கொண்டு அவர்களை ஊக்கமூட்ட முயற்சிக்கும்படியாக, தேவனுடைய தூதர்கள் அவர்களைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

இதோ நான் என்னைத்தானே விட்டுக்கொடுத்தவண்ணமாக இங்கே நின்று கொண்டிருக்கிறேன், பரிசுத்த ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருக்கிறார், கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்கள் என்று நீங்கள் எதை அழைக்கிறீர்களோ அது இதுதான். ஆனால், சாத்தான் எப்போதுமே தேவ குமாரர்களை சந்தேகித்து கேள்வி கேட்பவனாக

இருக்கிறான் (skeptic) என்பது நினைவிருக்கட்டும். அவன் எப்போதுமே அதைச் செய்கிறான் என்பது உங்களுக்குத் தெரியும். சந்தேக எண்ணமுடைய யாரோ ஒருவர், அவர்கள் அதைச் செய்யும்போது, அப்படியே அவன் தலையிட முயற்சிக்கிறான். ஆனால் கிறிஸ்தவர்களோ எப்போதுமே ஜெயங்கொள்கிறார்கள்.

***செய்தி:*** **விசுவாசம், ஆகஸ்டு 15, 1956**

★★★★★

61. இப்பொழுது, கர்த்தாவே, ஒருக்கால் அநேக, அநேக தூதர்கள் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்கிறோம், ஏனென்றால் விசுவாசிகள் இங்கேயிருக்கிறார்கள், "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள் (அவர்கள் திரும்புவதும் வருவதுமாய் இருப்பதில்லை, ஆனால் அவர்கள் பாளயமிறங்குகிறார்கள்)" என்று வேதாகமம் கூறுகிறது. தங்கள் கரத்தை உயர்த்தியிருப்பவர்களைச் சுற்றிலும் பாளயமிறங்கும் படியாகவும், அவர்கள் எவ்வாறு ஜீவிக்க வேண்டும் என்ற ஜீவ மார்க்கத்தை அவர்களுக்குப் போதிப்பதற்காகவும் இன்னும் அநேக (தூதர்கள்) இன்றிரவு மகிமையிலிருந்து அழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிதாவே, இவர்கள் உம்மோடு கூட ஐக்கியத்தில் இல்லை என்பதை அடையாளம் கண்டுகொண்டவர்களாக, அவர்கள் உம்மை நோக்கி தங்கள் கரங்களை உயர்த்தியிருக்கிறார்கள். அவர்கள் ஐக்கியத்திற்கு வெளியே இருந்து, இன்றிரவு ஐக்கியத்திற்காக மிகவும் வாஞ்சையாயிருக்கிறார்கள். பிதாவே, கிறிஸ்துவின் நாமத்தில், நீர் ஒவ்வொருவரையும் உமக்கு சொந்தமான அன்புக்குரிய இராஜ்யத்திற்குள் இன்றிரவு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஜெபிக்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் மூலமாக அவர்களிடம் கெஞ்சுவீராக, பரிசுத்த ஆவியால் அவர்களை நிரப்பி,

அழிவில்லாத, நித்திய ஜீவனை அவர்களுக்குக் கொடுத் தருளும்.

அவர்களை வெளியே அழைத்து, ஒரு ஊழியத்தில் அவர்களை வைத்து, தேவனுடைய மகத்தான திராட்சைத் தோட்டத்தில் விசேஷமான வேலைகளை அவர்களுக்குக் கொடுத்தருளும். அது ஒரு சிறிய இல்லத்தரசியாக இருந்தால், அவளை எங்கே வைப்பது என்று நீர் அறிந்திருக்கிறீர். அலுவலகத்திலோ, அல்லது ஆலையிலோ (வேலை செய்யும்) ஒரு மனிதனாக அது இருக்குமானால், அந்த மிகச் சிறந்த வேலையைச் செய்யும்படி அவனை எங்கே வைப்பது என்று உமக்குத் தெரியும். வீதியிலுள்ள மனிதனோ, வெளியே பண்ணையில் (வேலை செய்யும்) ஒரு மனிதனாகவோ இருந்தால், அவனை எங்கே வைப்பது என்று நீர் அறிந் திருக்கிறீர். நீர் சகலத்தையும் அறிந்திருக்கிறீர், ஸ்தானத்தில் பொருத்தும்படி, அவர்களை எங்கே பொருத்துவது என்பதை (நீர் அறிந்திருக்கிறீர்). தங்கள் கரங்களை உயர்த்தியுள்ள அநேகர் இருக்கிறார்கள், எனவே, பிதாவே, இந்த இரவிலே, பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளின் மூலமாக, நீர் அவர்களை உம்முடைய இராஜ்யத்திற்குள் பொருத்த வேண்டு மென்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

***செய்தி:* அவருக்குச் செவிகொடுங்கள், டிசம்பர் 15, 1956**

★★★★★

232. ஓ தேவனே, நாங்கள் இதற்காக எப்படியாக உமக்கு நன்றி செலுத்துகிறோம்! இது உமது பார்வையில் மகிமையாக உள்ளது. பீடத்தண்டையில் தாழ்மையோடு முழங்கால்படியிட்டு, அவர்களுடைய தப்பிதங்களை அறிக்கையிட்டு, இரக்கத்திற்காக கெஞ்சுகிற மனிதர்களையும் ஸ்திரீகளையும் பார்க்கும்போது, அது எங்கள் இருதயத்தை

சிலிர்ப்பூட்டுகிறது. கர்த்தாவே, அதனூடாக அவர்களை வழிநடத்தும்.

233. அபிஷேகம் பண்ணப்பட்ட உம்முடைய ஊழியக் காரர்கள், வார்த்தையின் ஊழியக்காரர்கள், இந்த ஜனங்களின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள், நான் இங்கே இந்தப் புனிதமான மேஜையின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறேன்.

234. இது ஒரு அற்புதமான தருணம். இன்றிரவு தேவ தூதர்கள் இந்த இடத்தின் பக்கத்தில் கீழே தங்களுடைய பாளயத்தை போட்டு விட்டார்கள் (stuck down). "தேவனு டைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளய மிறங்குகிறார்கள்" என்று வார்த்தையில் எழுதப்பட்டிருக்கிறது.

235. இந்த மகத்தான காணக்கூடாத உலகத்தில், அது இப்பொழுது எங்களைச் சுற்றிலும் இருக்கிறது, மனந்திரும் பவும், நாங்கள் தவறுகளை நடப்பித்திருக்கிறோம் என்று, எங்களுடைய கண்களுக்கு முன்பாக பொல்லாதவைகளைக் கொண்டு வரும்படியாகவும், எங்களுடைய உணர்ச்சிகளை தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறது. மனந்திரும்புதலின் இரு தயங்களோடு கூட, நாங்கள் எங்கள் பொல்லாத வழிகளை ஒப்புவித்து, தெய்வீக இரக்கத்திற்காக வேண்டிக்கொள்ளு கிறோம், கர்த்தாவே. தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்கும், எங்களுடைய ஜீவியங்களையும் எங்கள் குணாதிசயங்களையும் அவருடைய வார்த்தைக்குப் பொருந்தும்படி உருவாக்குவதற்கும் நாங்கள் தாழ்மையோடு கெஞ்சி வேண்டிக்கொள்கையில், இரக்கத்தை எங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிற பரிசுத்த ஆவியானவர் தாமே, எங்கள் ஒவ்வொருவருக்கும் அதை அருளுவாராக. நாங்கள் கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம்.

***செய்தி:* தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்கிறார், ஜனவரி 20, 1957 மாலை**

★★★★★

74. இப்பொழுது சரியாக இந்தக் கட்டிடத்தில் அநேக, அநேக தூதர்கள் இருக்கிறார்கள். நீங்கள், "அது வேதப்பூர் வமா?" என்று கேட்கலாம். அது வேதாகமமாக இருக்கிறது. நான் உங்களுக்குக் காண்பிக்கட்டும். இங்கே எத்தனை பேர் கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்கள், உங்கள் கரத்தை உயர்த்துங் கள். சரி, நீங்கள் அவைகளைக் கீழே போடலாம். "தேவனு டைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளய மிறங்குகிறார்கள்" என்று வேதாகமம் கூறுகிறது. அப்படியா னால், இங்கே தூதர்கள் இருக்கிறார்கள்!

75. அதன்பிறகு கிறிஸ்து, "இரண்டு மூன்று பேர் என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, நான் அவர்கள் மத்தியில் இருப்பேன்" என்று கூறியிருக்கிறார். அப்படியா னால், அவர் இங்கேயிருக்கிறார்! அதைக் (குறித்த) ஒரே காரி யம் என்னவென்றால், உங்களால் அவரைக் காண முடியாது, ஆனால் விசுவாசத்தினாலே நாம் அதை விசுவாசிக்கிறோம்.

***செய்தி:* அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்துகொண்டார்கள், ஏப்ரல் 21, 1957, மாலை**

★★★★★

590. "திரைக்குள்." திரை என்பது மாம்சமாயுள்ளது. இந்த சபையில் தேவனை முகமுகமாய் காணாதபடி நம்மைத் தடுக்கிறதே திரையாய் உள்ளது. இருக்கைகளுக்கு அருகே இந்தக் காலையில் தங்களுடைய ஸ்தானங்களில் நின்று கொண்டிருக்கிற தூதர்களை நாம் காணாதபடிக்கு நம்மை தடுக்கிறதே திரையாய் உள்ளது. அவரைக் காணாதபடி நம்மைத் தடுப்பதே திரையாய் உள்ளது. நாம் திரைக்குப் பின்னால் மறைந்திருக்கிறோம், அந்தத் திரை மாம்சமா யிருக்கிறது. நாம் தேவனுடைய குமாரரும், குமாரத்தி

களுமாயிருக்கிறோம், நாம் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கிறோம், "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்த வர்களைச் சூழப் பாளயமிறங்கியிருக்கிறார்கள்." நாம் எல்லா நேரத்திலும் தேவனுடையப் பிரசன்னத்தில் இருக்கிறோம். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடு வதுமில்லை. நான் முடிவுபரியந்தம் எப்பொழுதும் உங்களு டனே கூட இருப்பேன்." ஆனால் திரையே மாம்சமாயி ருக்கிறது, அதுவே நம்மை அவருடைய பிரசன்னத்திலிருந்து தடுக்கிறது. ஆனால் நம்முடைய விசுவாசத்தினாலே ஆத்துமா, ஆவியினூடாக அவர் நம்மை கவனித்துக் கொண் டிருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர் நமக்கு அருகில் நின்று கொண்டிருக்கிறார். அவர் இப்பொழுது இங்கே இருக்கிறார்.

591. ஒரு நாள் காலை தோத்தானிலே ஒரு வயோதிக தீர்க்கதரிசி இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டபோது, அவனுடைய வேலைக்காரன் வெளியே சென்று, "ஓ தகப் பனே, முழு தேசமும் இந்த அந்நியரால் சுற்றிவளைக் கப்பட்டுள்ளதே" என்றான்.

592. அப்பொழுது எலியா எழும்பி, "ஏன்? மகனே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிற வர்கள் அதிகம்" என்றான்.

593. நல்லது, அப்பொழுது அவன் தன்னுடைய கண்ணின் இமைகள் படபட எனத் துடிக்க சுற்றும் முற்றும் பார்த்தான். அவனால் ஒன்றையுமே காணமுடியவில்லை.

594. அப்பொழுது எலிசா, "தேவனே, நீர் அவனுடைய கண்களைத் திறக்கும்படி அந்த திரையை நீக்கி போட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்றான். அவனு டைய கண்களுக்கு மேலே இருந்த திரை விழுந்தபோது,

அந்த வயதான தீர்க்கதரிசியைச் சுற்றிலும் அக்கினிமயமான இரதங்களும், மலை அக்கினிமயமான தூதர்களாலும் இரதங் களாலும் (நிறைந்து) இருந்தன. அங்குதான் உங்கள் காரியமே உள்ளது.

595. ஓ, அப்பொழுது கேயாசி, "எனக்கு-எனக்கு இப்பொழுது புரிகிறது" என்று கூற முடிந்தது. பாருங்கள், திரை விழுந்து போயிற்று. அங்குதான் தடங்கலே இருக்கிறது.

***செய்தி:* எபிரெயர், அதிகாரம் 6, பாகம் 3, செப்டம்பர் 15, 1957 காலை**

★★★★★

22. இயற்கைக்கு மேம்பட்டவைகளோடு இடைபட்டு, தேவனுடைய பிரசன்னத்தில் தரித்திருக்கிற மனிதர்கள், தேவ னுடைய திட்டமானது புறக்கணிக்கப்படுவதை நீங்கள் காணும் போது, நீங்கள் அதைப் பிரசங்கிக்கிறீர்கள், உங்களால் கூடுமான சிறந்ததை முயற்சித்து, செய்ய வேண்டுமென்று தேவன் உங்களிடம் கூறுகிற யாவற்றையும் செய்கிறீர்கள், இருந்த போதிலும் அவர்கள் அதை விட்டு விலகி நடக்கி றார்கள், அப்போது இருதயம் உடைக்கப்பட்டு விடுகிறது. அக்கினி பற்றி எரிந்து லாஸ் ஏஞ்சலஸ் வெளிச்சம் கொடுக்கும் அளவுக்கு, இங்கே போதுமான அளவு இந்தக் கடந்த வாரம் ஏஞ்சலஸ் டெம்பிளில் சர்வ வல்லமையுள்ள தேவன் கிரியை நடப்பித்துள்ளார். அவர், "நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோம் கொமோராவுக்கு நேரிடுவது இலகுவா யிருக்கும் (மத்தேயு 10:15)" என்று கூறினதில் வியப்பொன் றுமில்லை.

அந்தச் சிறிய பரிதாபமான மனிதன், மிகவும் இளைத்துப் போய் எலும்பும் தோலுமாக, அங்கே படுத்துக் கொண் டிருக்கிறான், அவனுடைய நரைத்த தலைமயிர் அவனது

தோள்கள் மேல் தொங்கிக் கொண்டிருந்தது… தேவன், “என்னுடைய ஊழியக்காரனுக்கு கொஞ்சம் ஓய்வு அவசியம்” என்றார். தேவன் தம்முடைய ஊழியக்காரன் மேல் இரக்கப் படுகிறார், அவர் அப்படியே அவனை அதிகமாக இருந்த காட்டுப் புதர்செடிகள் மேல் படுக்க வைத்தார், அவனோ உறங்கிப் போய் விட்டான் (1 இராஜா. 19:5).

அவன் அங்கே உறங்கிக் கொண்டிருப்பதை 10,000 தூதர்கள் பாதுகாப்பாக கவனித்துக் கொண்டிருப்பதை நான் கற்பனை பண்ணிப் பார்க்கிறேன். விசுவாசிக்கு ஒரு உத்தர வாதம் உண்டு, உலகம் அவனைப் புறக்கணித்தாலும், தேவன் இன்னுமாக அவனை நேசிக்கிறார். உலகம் உங்களை பரிசுத்த உருளையர்கள் என்று அழைக்கலாம்; அவர்கள் உங்களை மதவெறியர்கள் என்று அழைக்கலாம்; ஆனால் நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருப்பீர்களானால், அங்கே உறுதியான ஒரு காரியம் உண்டு: தேவன் உங்களை நேசிக்கிறார், அவருடைய தூதர்கள் அவருக்கு பயந்தவர் களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள் (சங்கீதம் 34:7).

23. ஒவ்வொரு கிளையிலும், அந்த இடம் முழுவதும், அதைச் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் திரளான தூதர்கள் இருப்பதை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். தேவன் இறங்கி வந்து, “சோர்ந்து போயிருக்கிற என்னுடைய பரிதா பமான சிறு ஊழியக்காரன். அவன் மிகவும் பதட்டம டைந்தவனாய் சுக்கு நூறாகக் கிழிக்கப்பட்டவனாக இருக்கி றான், என்ன செய்ய வேண்டும் என்றே அவனுக்குத் தெரியவில்லை. மிக மென்மையான கரங்களை உடையவ னாய் இங்கே நின்று கொண்டிருக்கிற அந்த தூதனைத் தெரிந்தெடுத்துக் கொள்ள நான் விரும்புகிறேன். நீங்கள் அவனைப் பயப்படுத்தி விடாதீர்கள்; அவனிடம் நடந்து சென்று, அவனுடைய கண் புருவத்தை மெள்ள வருடிக்

கொடுங்கள். உங்கள் மத்தியில் இருக்கிற மிகச்சிறந்த சமையல்காரன் (best cook) தான் எனக்குத் தேவை, நீங்கள் அங்கே மேலே சென்று, உங்களால் கண்டுபிடிக்க முடியும் வைட்டமின்கள் (ஊட்டச்சத்துகள்) எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, இந்த நவதானிய உணவில் சேர்த்துக் கொள் ளுங்கள். உலகம் அவனை ஒதுக்கித் தள்ளி விட்டது, ஆனால் நான் அவனைச் சரியான முறையில் நடத்தப் போகிறேன்" என்றார். அல்லேலூயா. அதற்கு, "நம்முடைய தேவனைத் துதியுங்கள்" என்று அர்த்தம். அதைக் குறித்துப் பயப்பட வேண்டாம்.

"நம்மிடம் இருக்கிற மிகச்சிறந்ததைக் கொண்டு வாருங் கள்; அவனுக்காக ஒரு நவதானிய அப்பத்தை சமைத்து அவனுடைய பக்கத்தில் கொஞ்சம் தண்ணீரையும் வைத்து விடுங்கள்." மென்மையான கரங்களைக் கொண்ட இந்த தூதனோ அவனிடம் சென்று, அந்தச் சிறு தேவ தாசனுடைய புருவத்தை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

நீங்கள் உங்களால் கூடுமான சிறந்ததைச் செய்திருப்பீர் களானால், தேவன் இன்னுமாக அந்தத் தூதர்களை ஒழுங்கில் (வரிசைக்கிரமமாக) வைத்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர் எலியாவை நேசித்தது போன்று அதேவிதமாக உங்களையும் நேசிக்கிறார்.

24. அவன் எலியாவின் புருவத்தை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தான், அப்போது எலியா விழித்துக் கொண்டான். அவன் இவ்விதமாக ஏதோவொன்றைக் கூறுவதை நான் கேட்கக்கூடும், "உன்னை நேசிக்கிற உன்னுடைய தேவனாகிய கர்த்தர்... எலியாவே, உன்னால் (கூடுமான) சிறந்ததை நீ செய்திருக்கிறாய். நியாயத்தீர்ப்பின் நாளிலே, அவர்கள் தனி யாகவே அதற்காக நிற்க வேண்டியதாய் இருக்கும் என்பதற் கான ஒரு சாட்சிக்காக மாத்திரமே நான் அந்த அடையா

ளங்களை அனுப்பினேன். நான்... செய்ய வேண்டுமென்று நான் உன்னிடம் கூறினபடியே நீ செய்திருக்கிறாய். நீ இப்பொழுது சோர்ந்து போய் களைத்து விட்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனாகிய கர்த்தர் தாம் இந்த அப்பத்தையும் இந்தத் தண்ணீரையும் கொண்டு உன்னை போஷிக்கும்படி என்னை அனுப்பியிருக்கிறார்."

எலியாவோ தன்னுடைய கண்களைப் பிசைந்து கொண்டே, எழுந்து, சிறிய பலவீனமான நடுங்கிக் கொண் டிருந்த கரங்களினால் அந்த அப்பத்தை எடுத்து அதைப் புசித்தான். சற்று கழிந்து மகத்தான தூதர்களின் பாடகற்குழு வெளியே வந்து, இவ்விதமாக அவனைச் சுற்றிலும் ஒரு சிறு காட்சியை அமைத்து, பாடல்களைப் பாடத் தொடங்கினார்கள், அது தன்னுடைய குழந்தையை உறங்க வைக்க செல்லமாகக் கொஞ்சக் கூடிய எந்த தாயும் பாடுவதைப் போல இல்லா திருந்தது. அவனை மீண்டுமாக உறங்க வைத்தார்கள். அப்போது பிதாவானவர் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்து, "நான் அவனை மிகவும் நேசிக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்; பிரயாணமோ வெகுதூரம். இன்னும் அவன் கடந்து போக வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்கிறது. நான் அவனை உபயோகப்படுத்துவதை நிறுத்தி விடவில்லை. எனவே நான் அவனை மீண்டும் போஷித்தாக வேண்டும்" என்றார்.

எனவே அவர் தூதர்களைக் அழைத்து, நிறைய இருக்கும் வேறொரு பெரிய வைட்டமின்களைச் சேர்த்து வேறொரு நவதானிய அப்பத்தை சமைத்துக் கொண்டு (வந்து), ஒரு கலசம் தண்ணீரையும் அவன் அருகில் வைத்து விட்டு, அவனுடைய புருவத்தை வருடிக் கொண்டே, அவனை மீண்டும் போஷித்தார்கள்.

25. நாம் முழுவதும் களைப்படைந்து (சோர்ந்து போய்) சுக்குநூறாக கிழிக்கப்படும் போது, அங்கே ஒரு சூரைச் செடி இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், அப்போது நாம் அந்தச் சூரைச் செடியின் கீழ் சென்று, எம்மாதிரியான ஒரு பிரயாணத்தையும் செய்யும்படியாக ஆவிக்குரிய வைட்டமின்களை கண்டுகொள்ள முடியும்.

அங்கே அவன் படுத்திருந்தான். (பிறகு) அவன் எழுந்த போது, கொஞ்சம் நலமான உணர்வைப் பெற்றவனாய், நாற்பது பகலும் நாற்பது இரவும் பிரயாணம் செய்து போனான். அங்கே ஒரு மருத்துவர் இதைக் கேட்டுக் கொண்டிருப்பரென்றால், அவன் உபயோகப்படுத்தின வைட்ட மின் எம்மாதிரியான வைட்டமின் என்று அறிய நீங்கள் விரும்பவில்லையா, ஒரு நவதானிய அப்பமும் ஒரு கலசம் தண்ணீரும் ஒரு மனிதனை நாற்பது பகலும் நாற்பது இரவும் பாதுகாத்துக் கொண்டதே (ஜீவனோடே வைத்துக் கொண்டதே - மொழிபெயர்ப்பாளர்). அதுதான் நம்முடைய தேவனுடைய வல்லமையாகும்.

***செய்தி:* எலியாவே, உனக்கு இங்கே என்ன காரியம்? ஏப்ரல் 12, 1959 மாலை**

★★★★★

31. அநேக நேரங்களில், ஏதோ மதிப்புமிக்க ஏதாகிலும் ஒன்றை ஒரு மனிதன் எப்பொழுதாவது செய்த ஒவ்வொரு முறையும், அவன் தேவனோடு கூட தனியாகவே நடந்தான். ஆனால் நம்மைப் பத்திரமாய் பாதுகாக்கும்படி நம்மைச் சுற்றிலும் குறிப்பிட்ட மகத்தான ஏதோவொன்றை நாம் கொண் டிருக்க வேண்டியிருக்கிறது என்று நினைக்கிறோம். விசுவாசி, அந்த கூட்டமான தூதர்களையும், சுற்றிலும் துணையாக உடன்செல்லும் (encompanied about) பரிசுத்த ஆவியையும் உடையவனாயிருக்கிறான். தூதர்கள் பாளயமிறங்குகிறார்கள்;

அவர்கள் நகர்ந்து செல்வதில்லை; அவர்கள் சரியாக கர்த்தருக்குப் பயந்தவர்களோடு கூடவே தங்கியிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு அசைவையும் கவனிக்கிறார்கள்.

ஒருசமயம் தோத்தானிலே எலிசா என்றொரு தீர்க்க தரிசி இருந்தான், சீரியர்கள் உள்ளே புகுந்து, மொத்த மதில்சுவர்களைச் சுற்றிலும், சுற்றி வளைந்து கொண்டார்கள். கேயாசி எழுந்து, வெளியே நோக்கிப் பார்த்து, "ஓ, சீரியர் களைப் பாரும்" என்றான்.

வயதான தீர்க்கதரிசியாகிய, எலிசா, தன்னுடைய கண்களை கசக்கிக்கொண்டே, சுற்றும் முற்றும் பார்த்து, "ஏன், அவர்களோடு இருப்பவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருப் பவர்கள் அதிகம்" என்றான். கேயாசி சுற்றும் முற்றும் பார்த்து, "நான் எதையும் காணவில்லையே" என்றான். ஒருக்கால் சென்ற இரவில் உங்களில் அநேகர் அதைக் கண்டிருக்காமல் இருக்கலாம், ஆனால் அந்த வயதான கறுப்பின சீமாட்டி அதைக் கண்டார்கள்.

அவன், "கர்த்தாவே, இந்தப் பையனுடைய கண்களைத் திறந்தருளும்" என்றான். தேவன் அவனுடைய கண்களைத் திறந்தபோது, அந்த வயதான தீர்க்கதரிசியைச் சுற்றிலும் எல்லா திசைகளிலும் அக்கினிமயமான தூதர்களும், அக்கினி மயமான இரதங்களும் இருந்தன, அந்த மலைகள் கொழுந் துவிட்டு எரிந்து கொண்டிருந்தன. நிச்சயமாக, அவன் அங்கே வெளியே நடந்து சென்று, அவர்கள் குருடாகும்படி அடித் தான், சரீரபிரகாரமான குருடல்ல, ஆவிக்குரிய குருடு. அவர்களால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை, "நீங்கள் எலியாவைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள் என்றா சொல்லுகி றீர்கள்? வாருங்கள், அவன் எங்கேயிருக்கிறான் என்று நான் உங்களுக்குக் காட்டுவேன்" என்றான். அவர்களைச் சரியாக பதுங்கிடத்துக்குள் விட்டான். ஓ, ஆமாம்.

***செய்தி:*** யேகோவா-யீரே, ஜனவரி 27, 1958

★★★★★

53. பரலோகப் பிதாவே, வானங்களை நோக்கி விரிக்கப்பட்டிருக்கிற மகா பெருந்திரள் கணக்கான கரங்களை நீர் கண்டீர். பதிவு செய்யும் தூதர்கள் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதில் நான் நிச்சயமுடையவனா யிருக்கிறேன். நீர் அருகில் இருக்கிறீர் என்பதை நான் அறிவேன். "தேவ தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ, அவரை நேசிக்கிறவர்களைச் சூழ, அவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள் (அவர்கள் அங்கிருந்து போவதே யில்லை; அவர்கள் அப்படியே அங்கேயே தங்கியிருக் கிறார்கள். அவர்கள் அங்கேயே பாளயம் போடுகிறார்கள்" என்று நீர் சொல்லியிருக்கிறீர்.

மேலும் இப்பொழுது, கர்த்தாவே, இன்றிரவு இந்தச் செய்தியின் கனிகளாக, இவர்கள் ஒவ்வொருவரையும் நீர் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன், அவர்கள் அதை - உமது ஜீவனை சமாதானத்தோடும் உண்மையோடும் ஏற்றுக்கொள்வார்களாக.

மரணமானது தாக்கும் போது, அந்த நாளில், அது எப்போதும் இருக்கலாம், தேவதூதர்கள் தாமே அவர்க ளுடைய ஆத்துமாவை யோர்தானைக் கடந்து, மறுகரைக்கு, தேவனுடைய மார்புக்குள் சுமந்து செல்வார்களாக, அங்கே அவர்கள் என்றென்றுமாக பாதுகாப்பாக இருப்பார்கள். இதை அருளும், கர்த்தாவே.

***செய்தி:*** அன்பு, மார்ச் 14, 1958

★★★★★

59. ஆனால் சிறிய கோட்பாடுகளைக் கொண்டும், தளர்ந்த இறகுகளைக் கொண்டும், கொஞ்சம் உணர்ச்சிகளைக் கொண்டும் உங்களால் அதைச் செய்ய முடியாது. இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்றும், எங்கும் பிரசன்னராயிருப்பவராக அவர் நின்று கொண்டு, உங்களை காவல் காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை அறியும்படியாகவும், உங்களிடம் கூறுகிற ஏதோ வொன்றை நீங்கள் உங்களுக்குள்ளே கொண்ட உண்மை யாகவே முற்றிலுமாக உண்டாக்கப்பட்ட ஒரு கழுகாக நீங்கள் இருக்க வேண்டும். எதுவுமே உங்களுக்குத் தீங்கு செய்ய முடியாது. எந்த ஓநாயும் (வட அமெரிக்க ஓநாய் வகை - மொழிபெயர்ப்பாள்.) உங்களிடம் வர முடியாது. எதுவுமே தீங்கு செய்ய முடியாது. தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளயமிறங்குகிறார்கள். உங்கள் வலது பக்கத்தில் பதினாயிரம் பேரும், உங்கள் இடது பக்கத்தில் ஒரு இலட்சம் பேரும் விழலாம், ஆனால் அது ஒருபோதும் உங்களை அணுகாது. அவர் தம்முடைய சொத்துக்களை (heritage) இரவும் பகலும் விழித்திருந்து காவல் காக்கிறார்.

"கர்த்தராகிய நானே அதை நட்டேன். நான் இரவும் பகலும் அதற்கு தண்ணீர்பாய்ச்சுவேன், அதை ஒருவனும் என்னுடைய கரத்திலிருந்து பறித்துக்கொள்வதில்லை ('less)". தேவனுடைய பரம்பரைச் சொத்து (heritage), ஒரு கழுகு.

***செய்தி:* கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடுவது போல, மார்ச் 16, 1958 பிற்பகல்**

★★★★★

13. ஒரு நாள், லேகியோன் என்ற பெயரைக்கொண்டு ஒரு மனிதனுக்குள் இருந்த ஒருகூட்டம் பிசாசுகள் அவரைச்

சந்தித்தன. அவைகள் வழக்கமாக எல்லாரையுமே மேற்கொண்டு (overcoming) வந்திருந்தன, எனவே யாராலும் அவர்களுடைய வழியில் கூட கடந்து செல்ல முடியாதிருந்தது. அவர்கள் வெளியே போகும்போது, அவன் அடித்து தாக்கி, சங்கிலிகளை இரண்டாக முறித்துப் போடும் அளவுக்கு, அவ்வண்ணமாக அவைகள் இந்தப் பரிதாபமான மனிதனை ஆட்கொண்டிருந்தன. சட்டமானது அவனோடு எதுவுமே செய்ய முடியவில்லை. அந்தப் பிசாசுகள் அவன் மேல் வரும்போது, அவனால் சங்கிலிகளைக் கூட உடைத்துப்போட முடிந்தது, ஏனென்றால் அம்மாதிரியான ஒரு வல்லமையை பிசாசு அவனுக்குக் கொடுத்திருந்தது.

நான் இன்றிரவு வியப்படைகிறேன், கட்டில்களிலும் சக்கரநாற்காலிகளிலும் இருக்கிற நீங்கள், பிசாசினாலே மிகவும் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு மனிதன் தன்னுடைய சொந்த மனித வல்லமையைப் போல, மூன்று அல்லது நான்கு மடங்கு வல்லமையை உடையவனாய் இருப்பான் என்றால், பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு மனிதனால் என்ன செய்ய முடியும்? அவனால் முடிந்தது...?... நீக்கம் செய்யப்பட்ட அந்த சக்கர நாற்காலிகள், ஜீவனுள்ள தேவனுடைய ஆவியின் அபிஷேகமானது அவன் மேல் வருமானால், தேவனுடைய மகிமைக்காக போய்க் கொண்டிருப்பான்.

இந்த லேகியோன் அம்மனிதனைப் பீடித்திருந்தன... "அப்படியானால், சகோதரன் பிரன்ஹாமே, நீதிமான்களிடத்தில் வருகிற லேகியோன்களும் இருக்கிறார்கள் என்றா சொல்லுகிறீர்கள்?"

வேதாகமம், "தேவனுடைய தூதர்கள் அவரை நேசிக்கிறவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள்" என்று கூறுகிறது.

***செய்தி:*** வல்லமையுள்ள ஜெயவீரர், மார்ச் 29, 1958

★★★★★

21. இப்பொழுது, நீங்கள் கவனிப்பீர்களானால், அதி காலையில், கல்லறையிலிருந்த இவர்கள். பிரகாசமான வஸ்திரத்திலிருந்த தூதர்களாகிய, இரண்டு மனுஷர்களை அவர்கள் சந்தித்தார்கள், அவர்கள் இவர்களிடம், அவர்... என்று சொன்னார்கள். "உயிரோடிருக்கிறவரை - உயிரோ டிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?" அவர்கள் கல்லறைக்குச் சென்று, அவர் அங்கே இல்லை என்பதைக் கண்டுபிடித்திருந்தார்கள். அவர்களோ, "உயிரோ டிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் சொன்னரே... அவர் இன்னும் கலிலேயாவில் இருந்த போது, இவைகளை அவர் உங்களிடம் சொன்னாரே" என்ற இந்தக் குறிப்பிடத்தக்க கேள்வியைக் கேட்டார்கள்.

22. இப்பொழுது, நீங்கள் ஒருக்கால் அதற்கும் மேலே வாசித்திருக்கலாம், ஆனால் நாம் அதை சற்றுநேரம் ஆராய்ந்து பார்ப்போம். அவன், "அவர் இன்னும் கலிலே யாவில் இருந்தபோது, இவைகளை அவர் உங்களிடம் சொன் னாரே" என்றான். அவர்கள் ஏன் அதைப் புரிந்து கொள்ள வில்லை? அவர்கள் ஏன் அதை விளங்கிக் கொள்ளவில்லை?

23. அதைக் குறித்த முக்கியமான குறிப்பிடத்தகுந்த வேறொரு மகத்தான (காரியம்) இதோ இருக்கிறது, அந்த, இதை அவனிடம், அல்லது இந்த சீஷர்களிடம் **கூறினவர்கள்** கல்லறையின் அருகில் இருந்தார்கள். அவர்களும் கூட நிச்சயமாக அவரோடு கூட கலிலேயாவில் இருந்திருக்க வேண்டும், இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, இயேசு அவர்களிடம் என்ன கூறியிருந்தார் என்பதை அவர் கள் அறிந்திருந்தார்கள். ஓ, என்னவொரு ஆசீர்வதிக்கப்பட்ட

காரியம்! நீங்கள் பாருங்கள், அந்த தூதர்கள் அங்கே இருந்தார்கள் என்பது அந்த சீஷர்களுக்குத் தெரிந்திருக்க வில்லை, ஆனால் ***அவர்கள்*** வெளிப்படையாக அங்கே இருந்தார்கள், ஏனென்றால் அவர்கள், "அவர் இன்னும் கலிலேயாவில் இருந்தபோது, அவர் உங்களிடம் இதைக் கூறவில்லையா?" என்று சொன்னார்கள்.

24. "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர் களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள்" என்று வேதவாக்கியம் கூறுவதை அது நிறைவேற்றுகிறது.

***செய்தி:*** **உயிர்த்தெழுதலின் நிரூபணம், ஏப்ரல் 6, 1958 மாலை**

★★★★★

31. தேவன் தாமே கட்டி உண்டாக்கின ஒரு நகரத்துக்கு நாம் காத்திருக்கிறோம். நாம் இந்தப் பழைய மாம்சமாகிய வஸ்திரத்தை விட்டுச் சென்று, உயிர்த்தெழுந்து, நித்திய பரிசை பிடித்துக் கொண்டு, சத்தமிட்டவாறு, ஆகாயத்தினூடாக (பறந்து) சென்று, "விடை பெறுகிறேன், விடை பெறுகிறேன், இனிய ஜெப வேளையே", என்று (கூறும்) போது, அதற்காகத் தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் இந்த அழிவுள்ள பழைய சரீரத்தை விட்டு, விடுதலையாகும் அந்த நாளுக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேலும் அடிமைத்தனம் இருக்காது, ஆனால் நம்மை நேசித்து, தம்முடைய ஜீவனையே நமக்குக் கொடுத்த அவருடைய கரங்களில் நாம் இருப்போம், அவருடைய பாதுகாப்பிலும் அவருடைய சாயலிலும் இருப்போம், தேவனுடைய பிரசன் னத்தில் இருப்பதற்கு தகுதியுள்ளவர்களாக நம்மை ஆக்கும் படி திருவசனத்தைக் கொண்டு நம்மை தண்ணீர் முழுக்கினார் (கழுவினார்). அவருடைய பிரசன்னம் நம்மோடு வருகிறது;

தேவ தூதர்கள் அவருக்கு பயந்தவர்களைச் சூழப் பாளய மிறங்குகிறார்கள்.

அவர் இன்றிரவும் இங்கேயிருக்கிறார் என்பதை நாம் அறிவோம். நாம் நம்முடைய ஜீவனுள்ள நாளெல்லாம் பரிசுத்தத்தோடு அவரை சேவிக்கிறோம், ஆனால் நாம் அவருக்கு அடிமைகளாயிருக்கிறோம். நீங்கள் இன்னும் தேவனுக்கு, கிறிஸ்துவுக்கு அடிமையாக ஆகவில்லை எனில், அவருடைய அன்பினால் பிணைக்கப்பட்ட அடிமையாக ஆகவில்லை எனில், நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த் துவோம், நீங்கள் அப்படியே ஒரு நிமிடம் அதைக் குறித்து சிந்தியுங்கள்.

*உங்கள் பாவ சுமையிலிருந்து விடுவிக்கப்பட்டீர்களா?*

*இரத்தத்தில் வல்லமை உண்டு, இரத்தத்தில் வல்லமை உண்டு;*

*ஜீவனைக் கொடுக்கின்ற இந்த (குருதி)யோட்டத்தில் பாவக் கறைகள் அகன்று விடும்;*

*ஓ, இரத்தத்தில் அற்புதமான வல்லமை உண்டு.*

***செய்தி:*** **நம்முடைய ஜீவனுள்ள நாளெல்லாம், ஜூன்** 12, 1959

★★★★★

உங்களுக்கு நன்றி. நாம் ஜெபிக்கையில், சற்று நேரம் நின்ற வண்ணமாயிருப்போம். இன்றிரவு எத்தனை பேர் ஜெபத்தில் நினைவுகூரப்பட விரும்புகிறீர்கள்? நீங்கள் உங்கள் கரங்களை உயர்த்துகையில், அதை அறியச் செய்வீர்களா. அவரை நோக்கி நமது முகத்தைத் திருப்புகையில், நாம் இப்பொழுது, நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

எங்கள் பரலோகப் பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில், நாங்கள் உம்முடைய இரக்கத்தின் சிங்காசனத்தை அணுகும்படியாக வருகையில், நாங்கள் அனுமதி கேட்கிறோம். இரக்கத்தின் சிங்காசனத்தண்டையில் நிற்பதைத் தவிர, நாங்கள் நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தண்டையில் நிற்க எந்தவிதத்திலும் எங்களுக்கு விருப்பமில்லை; நாங்கள் அவருடைய கிருபையின் மூலமாக, இந்த இரக்கத்தில் வந்து, இன்றிரவு இங்கே உள்ளே ஜீவனோடிருப்பதற்காக முதலில் உமக்கு நன்றிசெலுத்துகிறோம். ஓ, இந்த யுத்தத்தின் மத்தியில், சாத்தான் எப்படியாக எங்களை துரிதமாக காட்சியிலிருந்து எடுக்க விரும்புகிறான். ஆனால் தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள், இதற்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். அவருடைய வாக்குத்தத்தத்தின் உண்மைத்தன்மையை அறிந்துகொள்ளும்படியான புதிய அனுபவத்திற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

***செய்தி:* அழுத்தத்தை வெளியேற்றுதல், மே 18, 1962, பத்தி எண் 1**

★★★★★

55. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அந்த அடைக்கலத்தில் இருக்கிறீர்களா? நீங்கள் அங்கே உள்ளே இருப்பீர்களானால், தேவன் கொண்டிருக்கிற ஒவ்வொரு சிலாக்கியத்திற்கும் உங்களுக்கு உரிமை உண்டு. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? இந்த அடைக்கலத்தில் இருப்பதற்காக உங்களுக்கு சந்தோஷம் தானா? நீங்கள் அப்படியே பின்னால் இருந்துகொண்டு, அழுத்தத்தை வெளியேற்ற முடிகிறதா? (அப்படியானால்), “தேவனுக்கு நன்றி; கடைசியாக நான் வெற்றிகரமாக வந்து சேர்ந்துவிட்டேன். நான் தேவனுடைய கிருபையினால், இங்கேயிருக்கிறேன். நான் பாதுகாப்

பான ஸ்தலத்தில் இருக்கிறேன். இப்பொழுது எதுவுமே எனக்குத் தீங்குசெய்ய முடியாது. நான் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாதுகாப்பாக இருக்கிறேன். ஒரு கூட்டம் தூதர்கள் என்னைச் சுற்றிலும் இருக்கிறார்கள்" என்று கூறுங்கள்.

"தேவதூதர்கள்… சூழப் பாளமிறங்குகிறார்கள் (அவர்கள் அங்கிருந்து போவதேயில்லை; அவர்கள் இரவும் பகலும் அங்கேயே தங்கியிருக்கிறார்கள்.), அவர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள்." உங்களுக்கு ஒரு அடைக்கலம் உண்டு. நீங்கள் அதற்குள் வர முடியும், ஒவ்வொரு சிலாக்கியமும்… இந்த அடைக்கலத்திற்குள் இருந்து, அவரோடு கூட ஐக்கியப்படுவது என்பது என்ன வொரு நேரமாக இருக்கிறது.

நான் விசுவாசிக்கிறேன், அவருடைய பிரசன்னத்தோடு கொஞ்சம் ஐக்கியம் கொள்ள நம்மால் முடியுமா என்று நாம் இன்றிரவு அவரிடம் வேண்டிக்கொள்வோமானால், அவர் நமக்காக அதைச் செய்வார் என்று விசுவாசிக்கிறேன். நீங்கள் அதை விசுவாசிக்கவில்லையா? அவர் அதைச் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

***செய்தி:* அழுத்தத்தை வெளியேற்றுதல், ஜூன் 9, 1962 மாலை**

★★★★★

75. இப்பொழுது, சபையே, கவனி. நான் உங்களை நேசிக்கிறேன். நான் கூறுவதற்கு நீங்கள் இப்பொழுது செவிகொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன். சகோதரன் மக்கல்லி வழக்கமாக கூறுவது போல, "நானும் ஒன்றைக் கூறப் போகிறேன்." எப்பொழுதுமே தேவனை உங்களுக்கு முன்பாக வைத்திருங்கள். அவருடைய சமுகத்தில் நீங்கள்

எதைச் செய்ய விரும்பமாட்டீர்களோ, அது எதையுமே செய்யாதீர்கள். ஏனெனில் அவர் உங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார். பாருங்கள்? கர்த்தர் தமக்குப் பயந்தவர் களைச் சூழப் பாளயமிறங்குகிறார். அவர்… அவர் சரியாக உங்கள் அருகில் இருக்கிறார். நீங்கள் செய்யும் ஒவ்வொன்றும் அவருக்குத் தெரியும், நிச்சயமாக அதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஒரு பொய்யைச் சொல்லத் தொடங்கும்போது, அதை செய்யாதீர்கள். நீங்கள் கூறுவதை தேவன் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் கொஞ்சம் ஏமாற்றம் செய்யத் தொடங்கினால், அதை செய்யாதீர்கள். தேவன் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருடைய நாமத்தை நீங்கள் வீணிலே வழங்கத் தொடங்கினால், அதை செய்யாதீர்கள், தேவன் உங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். ஒரு சிகரெட்டை புகைக்கத் தொடங்கினால், அவர் உங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார். பாருங்கள்? அவருடைய… நாங்கள், "ஆத்துமாவின் உண்மையான வாசஸ்தலத்துக்கு செல்லும் பாதை முழுவதிலும், ஒரு கண் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறது; நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியையும், இந்த மகத்தான கண் விழித் திருந்து, அது உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறது" என்னும் ஒரு பாடலை நாங்கள் பாடுவது வழக்கம்.

ஞாபகம் கொள்ளுங்கள், தாவீதைப் போல், கர்த்தரை எப்பொழுதும் உங்கள் முகத்துக்கு முன்பாக வைத்திருங்கள். அப்பொழுது உங்கள் இருதயம் பூரித்து உங்கள் மாம்சம் நம்பிக்கையோடே தங்கியிருக்கும், அவர் அதை வாக்குத் தத்தம் செய்திருக்கிறார். ஆம், ஐயா. தாவீது, தான் உயிரோ டெழும்புவான் என்பதை அறிந்திருந்தான், ஏனெனில் தேவன் அதை வாக்களித்திருந்தார். சரி.

76. அவருடைய சமுகத்தில் நாம் வரும்போது மாறிப்போகிறோம், நாம் ஒருபோதும் முன்பிருந்தது போல் இருப்பதில்லை. காலங்கள் தோறும் ஒவ்வொரு நிலையிலும் (every walk of life) இருந்த மனிதரைப் பாருங்கள். ஆபிரகாமைப் பாருங்கள். நீங்கள், "நல்லது, மாற்றப்பட்ட வாழ்க்கை வெறுமனே ஊழியக்காரர்களுக்குத்தான்" எனலாம். ஓ, இல்லை. மாற்றப்பட்ட வாழ்க்கை எல்லோருக்குமே, பாருங்கள்?

***செய்தி:* அவருடைய சமுகத்தில், செப்டம்பர் 9, 1962 மாலை**

★★★★★

103. உங்களுக்குத் தெரியுமா, முன்பெல்லாம், ஒரு மனிதன் அல்லது பெண் தங்களைக் கிறிஸ்தவர் என்று கூறிக் கொண்டால், ஜனங்கள் அதற்கு மதிப்பு கொடுத்தனர். ஆனால், இன்றைக்கோ, அவர்கள் அதை எவ்வளவு கேலி செய்ய முடியும் என்று பார்க்க விரும்புகிறார்கள். பாருங்கள்? புரிகிறதா? அவபக்தியுள்ள கூட்டம். என்னே!

ஏன்? ஏன் தெரியுமா? இதுதான் அதற்கு காரணம். இதுதான் சத்தியம் என்பதை அவர்கள் அறியாமலிருக் கின்றனர். அவர்கள் தேவனை குறித்து உணர்வில்லா தவர்களாயிருக்கிறார்கள். "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகின்றனர்" என்று வேதம் கூறியுள்ளது அவர்களுக்கு ஞாபகமில்லை. தேவ தூதர்கள் வந்து அவர்களை விஜயம் செய்வது மாத்திரமல்ல, அவர்கள், அவர்கள் தங்களுடைய கூடாரங்களைப் போடுகின்றனர் (stick down). ஆமென். "தேவனுடைய தூதர்கள் அவருடைய நாமத்துக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகின்றனர்" அங்கு இரவும் பகலும் தங்குகின்றனர்.

அந்த வயதான கறுப்பு நிற சகோதரன், *தூதர்கள் என்னைப் பாதுகாப்பாக காவல் செய்து கொண்டேயிருக்கின்றனர்* என்னும் அந்தப் பாடலைப் பாடினார். "இரவும் பகலும் எல்லா நேரத்திலும் தூதர்கள் என்னைக் காக்கின்றனர்" என்று கூறினார். அது சரியே. "இரவும் பகலும் எல்லா நேரத்திலும், தூதர்கள் என்னைக் காக்கின்றனர்."

104. "சிறு பிள்ளைகளைக்" குறித்து இயேசு, "இந்த சிறியரில் ஒருவனுடைய உள்ளத்தையும் புண்படுத்தாதபடி (offend) எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்" என்றார். பாருங்கள்? அவர்கள் எப்பொழுதுமே சுற்றிலும் பாளயமிறங்கி அவர்களை விழிப்புடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

105. அவர்கள் அதை விசுவாசிப்பது கூட இல்லை, தேவபக்தியற்ற ஜனங்கள் "தேவபக்தி, அவபக்தி என்றால் என்ன" என்று, கர்த்தருக்கு சித்தமானால், காலையில் பார்க்கப் போகிறோம். இப்பொழுது கவனியுங்கள், அவர்கள் அதை விசுவாசிப்பதும் கூட கிடையாது. அவர்கள் எல்லா கண்ணியத்தையும், மரியாதையும், பயபக்தியையும் இழந்துவிட்டனர், என்றாலும் அவர்கள் சபைக்கு செல்கின்றனர். அங்கே மிகவும் அவபக்தியுள்ள கூட்டம் எது என்றால், சபைக்கு செல்லுகிற கூட்டமே. அது சரியே.

106. ஒரு பழைய கள்ளச்சாராயம் விற்பவனோ, அல்லது கள்ளச்சாராயம் காய்ச்சுபவனோ அரைகுறையான குடி போதையில், தெருவில் வந்து கொண்டிருக்கும் போது அவனிடம் நீங்கள் கர்த்தரைக் குறித்து பேசுவீர்களானால், அவன் நின்று உங்களிடம் பேசுவான்.

(ஆனால்) விசுவாசிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும், அந்த பாரம்பரிய சபை அங்கத்தினர்களில் சிலர் உங்கள் முகத்துக்கு (முன்னே) ஏளனமாக சிரிப்பார்கள். ஏனெனில் நீங்கள் அவர்களுடைய ஸ்தாபனத்தை சேர்ந்த வர்கள் இல்லை என்பது தான் காரணம். அது சரியே. நிச்சயமாக. அவர்கள் அவபக்தியுள்ளவர்கள். அவர்களுடைய சிறு குழுவை நீங்கள் சேர்ந்திருக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் அவர்களுடைய பாதையின் ஓரத்தில் கூட நீங்கள் வசிக்கவில்லை என்றும் நீங்கள் நினைக்கின்றீர்கள். பாருங்கள்? அது உண்மை. அவபக்தியுள்ளவர்கள்!

107. இப்பொழுது, இந்த தூதர்கள், அவர்கள் தேவ னுடைய சமூகத்திலிருக்கும் போது, அவர்கள்...

தாவீது கூறினான் என்பதை விசுவாசியுங்கள். ஒரு சில இரவுகளுக்கு முன்பு, நான் ஏதோ ஒன்றைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்த போது, நாம் இங்கே கொண்டிருந்தது ஞாபகமிருக்கும். மேலும் அவன் சொன் னான், தாவீது, "கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். நான் அசைக்கப்படுவதில்லை. மேலும்," என்றான், அவன், "அப்படி நான் செய்யும் போது, என் மாம்சம் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்" என்றான். ஆம், ஐயா. "ஏனெனில் எனக்குத் தெரியும்... அவர் என் ஆத்து மாவை பாதாளத்தில் விடார், அவருடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டார். ஏனெனில் கர்த்தர் எப்பொழுதும் எனக்கு முன்பாக இருக்கிறார்" என்றான்.

108. நீங்கள் எங்கு சென்றாலும், தேவனை வையுங்கள். ஒரு மனிதன் கோபங்கொண்டு உங்களை சாபமிட்டால், உங்களுக்கும் அவனுக்குமிடையே தேவனை வையுங்கள். ஒருவன் உங்களை உருளும் பரிசுத்தன் என்று அழைத்தால், உங்களுக்கும் அவனுக்குமிடையே தேவனை வையுங்கள்.

மனைவி உங்களிடம் கோபங்கொண்டால், தேவனை வையுங்கள். கணவர் கோபங்கொண்டால், தேவனை வையுங்கள். பிள்ளைகள் உங்களுக்கு கோபமூட்டினால், தேவனை வையுங்கள். பாருங்கள்? நீங்கள் என்ன செய்தாலும், தேவனை வையுங்கள். உங்கள் தகப்பனும் தாயும் உங்களைப் புட்டத்தில் கையினால் சிறு அடி கொடுத்து, உங்களைத் திருத்துவார்களானால், தேவனை வையுங்கள். அதைக் குறித்து தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பது நினைவிருக்கட்டும். "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை வளர்த்து". பாருங்கள்? தேவனை (முன்பாக) வைக்க எப்பொழுதும் ஞாபகம் கொள்ளுங்கள். தேவனை உங்களுக்கு முன்பாக வையுங்கள், அப்பொழுது உங்களுக்கு தேவனிடம் பயபக்தியும் மரியாதையும் உண்டாயிருக்கும். அது சரியே.

***செய்தி:*** **வேறொருவரால் விளையும் பாதிப்பு, அக்டோபர் 13, 1962**

★★★★★

4. கடந்த இரவு, இங்கே சாலையில் விபத்திற்குள்ளான எங்கள் சகோதரி. உன்கிரனின் (Sis. Ungren) உயிரைக் காப்பாற்றினதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். ஆண்டவரே, நீர் அவர்களுக்குக் கிருபையாக இருந்தீர். அதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பரம பிதாவே, எங்கள் பிரயாணத்தில் நாங்கள் முன் செல்லும் போது, நீர் தொடர்ந்து எங்களோடு கூட இருக்க வேண்டுமென்றும், எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் இப்பொழுது ஜெபிக்கிறோம், எங்கள் ஒவ்வொருவருக்கும் அவ்விதமே செய்வீராக. உம் அசையாத உறுதியான அஸ்திபார வல்லமையையும் (undergirding power), என்றும் தவறாத உம் பிரசன்னம் எங்களுடன் இருக்கும் என்பதை அறியும் விசுவாசத்தையும் எங்களுக்கு அருளுவீராக. நாங்கள், எங்களுக்கு உதவி

செய்துக் கொள்ள முடியாத அந்த வேளையில், "தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி, எங்கள் பாதம் கல்லில் மோதாதபடிக்கு எங்களை எந்நேரமும் ஏந்திக்கொண்டு செல்வார்கள்" என்று நாங்கள் அறிவோம். வார்த்தைக்கான உம் ஆசீர்வாதங்களை எங்களுக்கு அளித்து, எங்கள் மூலமாக பேசி, எங்களுக்குள் இருக்க வேண்டுமென்று இப்பொழுது ஜெபிக்கிறோம், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

***செய்தி:* முறையிடுகிறது என்ன? சொல்!, ஜூலை 14, 1963 காலை**

★★★★★

58. மேலும் நான், "மறுபடியும், 'தேவனுடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள்' என்று வேதவாக்கியம் இதைக் கூறுகிறது. எனவே ஐம்புலன் களும் வெளிப்படுத்தாத வேறொரு உலகத்திலே."

59. ஐம்புலன்கள் இவ்வுலகுடன் மாத்திரமே தொடர்பு கொண்டுள்ளன. உங்களுக்கு ஸ்பரிச உணர்ச்சி எதுவும் இல்லையென்றால், உங்களால் எதையுமே உணர முடியாது. உங்களுக்கு ஸ்பரிச உணர்ச்சி எதுவுமில்லையென்றால்; அது வேறொரு உலகம். உங்களுக்கு எந்தப் பார்வையும் இல்லையென்றால், நீங்கள் பார்ப்பது வேறொரு உலகைத்தான், அப்பொழுது இதைக் குறித்து உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. எனவே போகும்படி தேவன் அனுமதித்திருக்கிற ஒரே காரியம் இந்த ஐம்புலன்களைத்தான்.

60. இப்பொழுது அங்கே விசுவாசம் என்று அழைக் கப்படும் வேறொன்று உள்ளது. ஆனால் விசுவாசத்தினாலே, நீங்கள் ஒரு ஏணியில் ஏறிச்சென்று, கடைசியாக வேறொரு உலகிற்குள் வல்லமையாகப் பிரவேசிக்கும் அளவிற்கு

அவ்வளவு உயரமாகச் சென்றுவிட முடியும். அதுதான் தரிசனம். அங்கே உங்களால் பார்க்க முடியும்.

61. உணர்வு என்னும் உங்கள் புலனைக் கொண்டு நீங்கள் என்ன உணர்ந்தீர்கள் என்பதை ஒருபோதும் நீங்கள் அறியாமலிருப்பது போன்று, ஒருபோதும் அதைக் கண்ட தில்லை; பிறகு உங்கள் கண்கள் திறக்கப்பட்டு, உங்களால் அதைக் காணமுடிகின்றது. அதை ஒருபோதும் காணமுடியாத அந்த நபருக்கு அதெல்லாமே ஒரு இரகசியமாகவே இருந் திருக்கும், அது அவனுக்கு ஒரு பரம இரகசியமாகவே இருந்திருக்கும், ஆனாலும் அதுதான் அது.

***செய்தி:* கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார், ஜூலை 28, 1963**

★★★★★

629. மகிமை! அந்த மகத்தான உடன்படிக்கையின் தூதன், வனாந்தரத்தில் மோசேயுடன் கூட இருந்தவர், தமஸ் குவுக்குப் போகும் வழியில் பவுலிடம் வந்தவர், நம்மிடம் உள்ள தமது புகைப்படத்தை எடுக்க அனுமதித்த அதே ஒருவர்; *லைஃப்* பத்திரிக்கையில் அன்றொரு நாள் (வெளி யான) புகைப்படத்தில் இருந்த அதே ஒருவர்; அதே வார்த்தை, அதே தேவன், அதே வாய்க்கால்கள், அதே வழியாக, அதே வாக்குத்தத்தம்! "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருகிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்". அப்படியானால் அவர் இங்கு இருக்கிறார். அவருடைய வார்த்தையில் மாத்திரம் சார்ந்திருப்பவர்களை, "தேவனுடைய தூதர்கள் அவ ருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள்". தேவனுக்கு பயப்படாத எந்த மனிதனும் வார்த்தைக்கு மதிப்பு கொடுக்க முடியாது. பாருங்கள்? அப்படியானால், அவரை

நாம் ஆவியில் தொழுது கொள்ளுகையில், இந்தக் காலை யில், இதோ அவர் இங்கே நம்மோடு கூட இருக்கிறார்.

***செய்தி:*** **கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார், ஜூலை 28, 1963**

★★★★★

79. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சிறிய ஐந்து புலன்கள், அது வெறுமனே நம்முடைய சொந்த சிறிய உலகமாக இருக்கிறது. பாருங்கள்? ஆனால் தேவன்... அதாவது, நமக்கு இவைகள் மாத்திரமே கொடுக்கப்பட் டிருக்கின்றன, எனவே நாம் நம்முடைய பூமிக்குரிய வீட் டோடு தொடர்புகொள்ள முடிகிறது. ஆனால் அதற்கும் அப்பால் புலன்கள் உள்ளன, அது வேறு பரிமாணங்கள்.

80. தேவன் எப்போதுமே பிரசன்னராயிருக்கிறார். நம்மால் மாத்திரம் அதை நினைவில் வைத்திருக்க முடியு மானால். "கர்த்தருடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர் களைச் சூழப் பாளயமிறங்குகிறார்கள்." இன்றிரவு, இந்தக் கட்டிடத்தில், இயேசு கிறிஸ்து நின்று கொண்டிருக்கிறார். இன்றிரவு இந்தக் கட்டிடத்தில், தூதர்களின் சேனைகள், அவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் சுற்றிலும் கூடியிருக்கி றார்கள். நீங்கள் அவர்களைக் காண்பதில்லை, ஆனால் அவர்கள் இங்கேயிருக்கிறார்கள் என்று உங்களிடம் கூறிக் கொண்டிருக்கும், அவர்களுடைய நடமாட்டத்தை உங்களால் உணர முடியும். அது அவ்வாறு இல்லை என்றால், அப்படி யானால் வேதவாக்கியம் அவ்வண்ணமாக இல்லை. வேதவாக் கியம் சரியாக இல்லை என்றால், அப்போது தேவனும் சரியாக இல்லை. "தேவதூதர்கள் பாளயமிறங்குகிறார்கள்," என்று வேதாகமம் கூறுகிறது, அவர்கள் விட்டு விலகு

வதேயில்லை, “அவருக்குப் பயந்தவர்களின் அருகாமையில் அவர்கள் தங்கியிருக்கிறார்கள்.”

***செய்தி:* செல்வாக்கு, ஆகஸ்டு 3, 1963 மாலை**

★★★★★

51. “ஒவ்வொரு நபருடனும் பிறப்பு முதல் தங்கி யிருக்கும் அவர்களுடைய தூதனைக் குறித்து விளக்கவும்.” இப்பொழுது. நீங்கள் கவனிப்பீர்களானால்... இப்பொழுது, இது மிகவும் ஆழமானது. இப்பொழுது, நான் ஒருபோதும்... இப்பொழுது தான் இதைக் கையிலெடுத்தேன். இப்பொழுது... இதனுடைய ஒரு பாகம் தட்டெழுத்திலும் மற்ற பாகம் பென்சிலிலும் - அல்லது பேனாவிலும் எழுதப்பட்டுள்ளது.

52. இப்பொழுது, ஒரு தூதன் உண்டு, ஆனால் இந்த கர்த்தருடைய தூதன் அவர்களுக்குப் பயந்தவர்களை... அவருக்குப் பயந்தவர்களைச் சூழத் தான் பாளயமிறங் குகிறான். பாருங்கள்? இப்பொழுது, பாவிகளுக்கு தூதர்கள் இருக்கிறார்கள் என்று வாக்களிக்கப்படவில்லை, மீட்கப்பட்ட வர்களுக்கு மாத்திரமே தூதர்கள் உள்ளனர். அது உங்க ளுக்குத் தெரியுமா? கர்த்தருடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகின்றனர்.

***செய்தி:* கேள்விகளும் பதில்களும், ஆகஸ்டு 30, 1964 மாலை**

★★★★★

183. அதைச் செய்யும்படி, இயேசு என்ன செய்தார்? அவர் பகிரங்க அறிக்கை செய்தார். சாத்தான் பாவியாக இருந்தபடியால், அவனால் பாவங்களுக்காக மரிக்க முடிய வில்லை. அவன் பாவத்துக்கு பிதா. ஆனால், இயேசு, குற்ற மற்றவர், பரலோகத்தின் தேவன், மரிக்க அவசியமில்லாதவர்,

கீழே இறங்கி வந்து, வானங்களுக்கும் பூமிக்கும் இடையே உயர்த்தப்பட்டு (மரித்து), தமது மரணத்தின் மூலம் பகிரங்க அறிக்கை செய்தார். ஒரு பகிரங்க அறிக்கை; அவருடைய வஸ்திரங்களை அவர்கள் களைந்து, அவரை அவமானப் படுத்தினார்கள், அவர் வானங்களுக்கும் பூமிக்கும் இடையே தொங்கினார். நம்மை மீட்பதற்கென, அவர் பாவமுள்ள, அவமானமுள்ள மரணம் எய்தினார். ஒரு பகிரங்க அறிக்கை! ஆமென்.

184. அவர் என்ன செய்தார்? தம்முடைய சொந்த நீதியைக் உதைத்துப்போட்டு, தம்முடைய சொந்த மகிமையை உதைத்து தள்ளினார். உதைத்து… "எனக்கு அதிகாரம் உண்டு. நான் என் பிதாவிடம் பேசினால், உடனடியாக அவர் எனக்கு இருபது லேகியோன் தூதர்களை அனுப்புவார்." அவர்கள் போக்கையே மாற்றியிருக்க முடியும். ஒரே தூதன் அதைச் செய்திருக்க முடியும். அவர் இருபது லேகியோன் தூதர்களை வரவழைத்திருக்க முடியும். அது ஏறக்குறைய 40,000 தேவதூதர்கள். அவர்கள் என்ன செய்திருப்பார்கள்? அவர், "நான் என் பிதாவிடம் பேசினால் அவர் உடனே, அது சரியாக இப்பொழுதே, எனக்கு இருபது லேகியோன் தூதர் களை அனுப்புவார். லேகியோன் கணக்கில் தூதர்கள் இங்கு வந்து இதை ஜெயித்திருப்பார்கள்." (ஒரே) ஒரு தேவதூதன் என்ன செய்திருப்பான்? ஒரு நொடிப்பொழுதில் அவன் இந்த பூமியை அழித்துப் போட்டிருப்பான். சற்று கவனியுங்கள், ஆயிரக்கணக்கான தேவதூதர்கள் அவரிடம் வந்திருக்க முடியும். பாருங்கள்? ஆனால் அவர் அதை உதறித் தள்ளினார் (kicked off). அவர் அதை ஒருபுறம் வைத்து விட்டார். அவர் தமது மதிப்பு அனைத்தும், எல்லாவற் றையுமே ஒரு புறம் தள்ளி வைத்து, உங்களுக்காகவும் எனக்காகவும் ஒரு பாவியாகி, மரித்தார்.

***செய்தி:*** **இனத்தான் மீட்பர், அக்டோபர் 2, 1960**

★★★★★

நிச்சயமாக, ஒவ்வொரு இரவும், பரிசுத்த ஆவியானவர் இங்கேயிருக்கிறார். நீங்கள் எங்கே போனாலும், அவர் எப்போதுமே அங்கேயிருக்கிறார். நீங்கள் - நீங்கள் ஒரு போதும் அவரை விட்டு விலகிப் போகவே மாட்டீர்கள். தாவீது தன்னுடைய படுக்கையை எங்கு போட்டாலும் காரிய மில்லை, தேவன் அங்கே இருந்ததாக அவன் கூறினான். ஏனென்றால் தேவதூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளையமிறங்குகிறார்கள். சற்று எண்ணிப் பாருங்கள், அவர் கள் பாளையமிறங்கி, சரியாக உங்கள் பக்கத்திலேயே இருந்து, எல்லா நேரமும் உங்களை காவல் காக்கிறார்கள்.

***செய்தி:*** **இந்த மலையைப் பார்த்துப் பேசு, நவம்பர் 23, 1959, பத்தி எண் 6**

★★★★★

81. இயேசு, "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருந்தாலும், நான் அவர்கள் நடுவிலே இருப்பேன்" என்றார். அப்படியானால் அது நாம் காணக்கூடாத, நம்முடைய ஐந்து புலன்கள் தொடர்பு கொள்ளாத ஒரு உலகத்தில் அவரை வரும்படி செய்கிறது. இயேசு கிறிஸ்து இங்கே பிரசன்னமாயிருக்கிறார். நம்மால் அதை உணர முடியுமானால்!

82. மேலும், இங்கே மட்டுமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் நீங்கள் தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போதும், நீங்கள் எங்கே இருந்தாலும், விசுவாசிகள் என்றும் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் என்றும் உரிமை கொண்டாடி, (அதை வெளிப்படையாகத் தெரிவிக்கிற) நீங்கள் எங்கேயிருந்தாலும், தேவ தூதர்கள்

உங்களுடனே கூட வந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நினைவிருக்கட்டும். நீங்கள் செய்கிற யாவற்றையும், உங்கள் மனதின் வழியாகக் கடந்து செல்கிற ஒவ்வொரு நினைவையும் அவர்கள் கவனிக்கிறார்கள், உங்களைக் குறித்த எல்லாவற்றையும் அவர்கள் அறிவார்கள். ஆகையால், நாம் அதைக் குறித்த உணர்வுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

83. அதைக் குறித்த உணர்வு நமக்கு இல்லை என்றால், நீங்கள் எந்த விதமாகவும் நடந்து கொள்வீர்கள். எனவே பெரும்பாலும் இன்று ஜனங்கள், அநேக ஜனங்கள் கர்த்தராகிய இயேசுவின் பிரசன்னத்தைக் குறித்த உணர்வில்லாதவர்களாய் இருக்கிறார்கள், இப்பொழுது நாம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிற, இந்த சரியல்லாத காரியங்களை (அவர்கள்) நாம் கொண்டிருப்பதற்கு அதுதான் காரணம்.

***செய்தி:*** செல்வாக்கு, ஆகஸ்டு 3, 1963 மாலை

★★★★★

**<u>இலவச பிரதிகளுக்கு:</u>**

சகோ. பினேகாஸ்

போன்: 8838623242, 9551855108

**www.thefinish.in**

# அசுத்த ஆவிகளின் வெவ்வேறு வித்தியாசமான வழவங்கள்

*(தமிழாக்கம்: சகோ. S. A. ஜெபகுமார்)*

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

7. அநேக நேரங்களில் ஆவிக்குரிய காரியங்களோடு இடைபடும்போது, அவைகள் வெளியே போகும்போது, நீங்கள் அவைகளைக் காணலாம். சமீபத்தில் யாரோ ஒருவர் என்னிடம் கேட்டுக் கொண்டிருந்தார். நான் கனடாவிலுள்ள கால்கரியில் இருந்தேன், அப்போது ஒரு பையன் உள்ளே வந்தான்; அவர்கள் அவனை உள்ளே அடைத்து வைத்திருந்தனர். அவர்கள் அந்த அறையின் பின்னால் உள்ளே வந்தார்கள், அவன் சபித்துக்கொண்டும், அவ்வாறு தொடர்ந்து செய்துகொண்டும் இருந்தான், நான் அப்படிப்பட்டவைகளை என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் கேட்டதேயில்லை. அந்தத் தகப்பனாரோ அவனைப் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார், அவன் உள்ளே வந்தபோது, அவன் என்னை நோக்கிப்பார்த்து, "வில்லியம் பிரன்ஹாமே, உனக்கு என்னோடு எந்த சம்பந்தமும் கிடையாது" என்று கூறினான்.

ஓ, அந்தத் தகப்பனார் நோக்கிப் பார்த்து, "அவனுக்குத் தன்னுடைய சொந்த பெயர் கூடத் தெரியாதே. எப்படி உம்முடைய பெயர் அவனுக்குத் தெரிந்தது?" என்றார்.

நான் அவனிடமிருந்து அதிக தூரத்தில் நின்று கொண்டிருந்தேன். ஓ, அவன் எப்படியாக என்னை சபித்துக் கொண்டும், அப்படியே தொடர்ந்து செய்து கொண்டும் இருந்தான். அவன், "உமக்கு என்னோடு எந்த சம்பந்தமும் கிடையாது" என்றான். அப்போது கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தினர், அவர்கள் அப்படியே பயபக்தியாக இருக்கும்படி அவர்களிடம் கேட்டுக்கொண்டேன். வாயில் காப்போர்கள் (ushers) அவனை வெளியே கொண்டு போகும்படி வந்தார்கள், அப்போது பரிசுத்த ஆவியானவர் அசைவாடுவதை (move out) நான் கண்டேன், அந்தக்

கர்த்தருடைய தூதனானவர். நான், “இப்பொழுது, அவனை ஒருநிமிடம் இங்கே கொண்டு வாருங்கள்” என்றேன். அவனைக் கொண்டு வரும்படியாக அவர்கள் போனபோது, அவன் காலால் உதைக்கவும், நுரைதள்ளவும், கடிக்கவும் தொடங்கினான். அவன் உள்ளே அடைத்து வைக்கப்பட்டிருந்தான் (straitjacket), அவர்கள் அவனை மேலே... அருகில் கொண்டு வந்தார்கள். பிறகு தரிசனம் வந்து, அது என்னவென்று கூறினது, அவனுடைய தகப்பனார் செய்திருந்த ஒரு பாவம் தான், பிள்ளை அந்த நிலையில் இருக்க காரணமாகியதாக அது கூறினது, உடனே தகப்பனார் தரையில் விழுந்து, மனந்திரும்பினார். அந்த அசுத்த ஆவி அந்தப் பையனை விட்டுப் போனபோது, அந்த இரவில் அங்கே நெருக்கியடித்துக் கொண்டு தரைகளில் இருந்த ஆயிரமாயிரக்கணக்கான ஜனங்கள், அதைப் பார்த்தார்கள், அது ... அங்குமிங்கும் மிதந்து கொண்டிருந்த ஒரு கறுத்த நிழலாக இருந்த ஒரு மகத்தான பெரிய சிலந்தியைப் (spider) போன்று அது இருந்தது. ஓ, என்னே. அது உண்மையிலேயே முழுமையாக இருந்தது. அது ஜனங்களை விட்டு வெளியே சுற்றிலும் போய், கட்டிடத்தினூடாக வெளியேறி, தூரமாகச் சென்றுவிட்டது.

8. அநேக நேரங்களில் நீங்கள் அவைகளை வெவ்வேறு வித்தியாசமான வடிவங்களில் காணலாம். இங்கே சமீபத்தில் ஒரு பெண்மணியை விட்டு வெளியே வந்த ஒரு அசுத்த ஆவியைக் கண்டேன், அது தன்னுடைய கால்களின் கீழே தொங்கிக் கொண்டிருந்த மகத்தான பெரிய மயிர்களை உடையதாயிருந்த ஒரு வௌவாலைப் (bat) போன்று காணப்பட்டது, அதனுடைய இறக்கைகள் சரியாக வெளியே வந்து, நேராக மேல் நோக்கி இருந்தன. அவைகள் அசுத்த ஆவிகளாகும். அநேக நேரங்களில் யாராவது ஒருவர்

எப்பொழுதாவது வெளிப்புறத்தில் மிகவும் அழகாக காணப்படலாம், உங்களால் மாத்திரம் உள்ளே நோக்கிப் பார்க்கக் கூடுமானால், அது என்னவென்று காண்பீர்கள். நாம் ஆவியைக்கொண்டு ஆதிக்கம் செலுத்தப்படுகிறோம்.

***செய்தி:*** தீட்டுக்கழிக்கும் தண்ணீர், ஜுன் 6, 1955

★★★★★

ஒருஇரவில், நான், "பிசாசியலின்" பேரில் பேசப் போவதாக உங்களிடம் கூறினேன். இந்த அடுத்த சில நிமிடங்கள், நான், "பிசாசியலின்" பேரில் பேச விரும்புகிறேன். அடுத்த...

நான் ஒரு புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன், என்னால் கூடுமானால். நீங்கள்... உங்களால் அதை வாசிக்க முடியுமா இல்லையா என்று தெரியவில்லை, ஆனால் அந்த - நான் அதை எழுதும் போது, அது பிசாசியலின் பேரில்: பிசாசுகளோடு என்னுடைய தனிப்பட்ட தொடர்புகொள்ளுதல்களின் பேரிலான ஒரு புத்தகம்.

நண்பர்களே, நீங்கள் இருப்பது எவ்வளவு உண்மையோ, அப்படியே அவைகள் இருப்பதும் அவ்வளவு உண்மையாக இருக்கின்றன. அநேக நேரங்களில், அவைகள்... புறப்பட்டுப் போகும்போது, நான் அவைகளைக் காண்கிறேன். சரியாக இங்கே இந்த மேடையிலிருந்தே அவைகள் புறப்படுவதை நான் கண்டிருக்கிறேன். நான் அவைகளைக் காண்கிறேன், அவைகளில் சில வெளவாலின் வடிவத்திலும், தங்கள் கால்களின் மேல் நீண்ட மயிர்கள் (long hairs) தொங்கிக் கொண்டிருப்பது போன்றும் இருக்கின்றன. ஆனால் ஒரு காக்காய் வலிப்பு நோய் பிசாசானது (epileptic

demon), வட்டமான கால்கள் அவ்விதமாக அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஆமை போன்று காணப்படுகிறது. ஆனால் பொதுவாக, அநீதி, (oppression - அட்டூழியம், கொடுமை, அடக்குமுறை, கொடுங்கோன்மை, தாங்கொணாத்துன்பம், கொடுஞ்செயல், உபத்திரவம் - தமிழாக்கியோன்.) செய்யும் பிசாசானது அதிகமாக, ஒரு-ஒரு மேகத்தின் வடிவத்தில் (cloud form), ஒரு அலையைப் போன்று இருப்பதாகக் காணப்படுகிறது; மேலும் அது ஒரு... நீங்கள் அந்த வேறு பரிமாணத்தில் அந்த ஆவியைக் காணும்போது, அது அப்படியே மிகவும் வினோதமான ஒலியை எழுப்புகிறது.

இப்பொழுது, அது தவறு என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் இந்நாட்களில் ஒன்றில் நீங்கள் அதைத் தெளிவாக அறிந்து கொள்வீர்கள். நீங்கள் மாத்திரம் ஆவிக்குரியவைகளைக் காண்கிற கண்ணாடியை எடுத்து, உங்கள் ஆத்துமாவுக்குள் அலசியாராய மாத்திரம் கூடுமானால். நீங்கள் சந்தேகிப்பீர்களானால், அது எதைப்போன்று காணப்படுகிறது என்பதைக் கண்டுகொள்வீர்கள். மிகப்பெரிய பிசாசு, பிசாசுகளுக்கெல்லாம் தலைமைப் பிசாசு அவிசுவாசம் தான். அங்கேயிருக்கும் ஒரே பாவம் அதுதான். அவிசுவாசத்தைத் தவிர வேறு எந்தப் பாவமும் கிடையாது. இந்த எல்லா சிறு ஒழுக்கம் சார்ந்தவைகளும் மற்றும் காரியங்களும்: புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாட்டம், விபச்சாரம் செய்தல்; அவை வெறுமனே தன்மைகளாக இருக்கின்றன. நீங்கள் விசுவாசியாத காரணத்தினால் தான் அதைச் செய்கிறீர்கள், அவிசுவாசம் தான், நீங்கள் அதைச் செய்யும்படி செய்கிறது. நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்திருந்தால், நீங்கள் அதைச் செய்திருக்க மாட்டீர்கள். அது சரியே.

***செய்தி:*** பிசாசியல், நவம்பர் 12, 1953

★★★★★

7. ஆனால் மேடையின் மேல் அநேக, அநேக நேரங்களில், நபரை விட்டு வெளியேறுகிற ஆவியைக் காண்கிறேன். அவைகள் எல்லாவிதமான வடிவங்களிலும் இருக்கின்றன. பிசாசுகளோடு தனிப்பட்ட முறையில் நான் தொடர்பு கொள்வதைக் குறித்து, அதைக் குறித்து நானாகவே அறிந்திருப்பவைகளைப் பற்றி, பிசாசியலின் பேரில் ஒரு புத்தகத்தை தயார் செய்து வருகிறேன்; அவைகள் ஜீவனுள்ளவைகளாக இருக்கின்றன. கிறிஸ்தவ விஞ்ஞானம் கூறுவது போன்று, அவைகள் வெறும் எண்ணம் அல்ல. அது உண்மையாகவே ஒரு ஜீவனாக இருக்கிறது. அது நபரைவிட்டு வெளியேறும் போது, நீங்கள் அதை ஒரு கறுத்த நிழலாகக் காணலாம். நான்-நான் அவைகளைக் கண்டிருக்கிறேன், அவைகளில் சில ஏறக்குறைய அவ்வளவு நீளமுடைய வௌவால்களைப் போன்று காணப்படுகின்றன, அவைகள் கீழே தொங்கிக் கொண்டிருக்கும் நீளமான மயிர்களை உடையவைகளாக இருக்கின்றன. நான் அதைப்போன்று அவைகளைக் கண்டிருக்கிறேன், அவைகள் ஆமைகளைப் (tortoises) போன்றோ, ஐம்பது பவுண்டுகள் (சுமார் 23 கிலோகிராம் - தமிழாக்கியோன்), அல்லது ஏதோ ஓர் அளவு எடை கொண்ட, மகத்தான பெரிய சிலந்திகளைப் (spiders) போன்றோ காணப்பட்டதை நான் கண்டிருக்கிறேன், அவைகள் மகத்தான பெரிய நிழலைப் போன்று, ஜனங்களை விட்டு வெளியேறுகிறது. வழக்கமாக, அது காக்கைவலிப்பாக இருக்கிறது.

***செய்தி:*** பிசாசியல், நவம்பர் 20, 1953

★★★★★

ஒரு சமயம் இங்கு ஒரு சிறு பெண் இருந்தாள். இன்றைக்கும் கூட அவள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அவளுடைய பெயர் நெல்லி சான்டர்ஸ். முதன் முறையாக பிசாசு துரத்தப்பட்டதை நான் கண்டிருக்கிறேன் என்றால் (நாங்கள் கல்லறைத் தோட்டத்துக்கு அப்பால் மூன்று பிளாக்குகள் தள்ளி குடியிருந்தோம். அப்பொழுது தான் நான் ஒரு பிரசங்கியானேன். நான் இந்த மூலையில் ஒரு கூடாரக் கூட்டத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன் அந்த சிறு பெண் மிகச் சிறந்த நடனக்காரி. அவள் இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தாள். அவளும் லீஹார்னும் (இந்தப் பட்டினத்திலுள்ள உங்கள் அநேகருக்கு லீஹார்னைத் தெரியும். அவன் குளிக்கும் அறை ஒன்றை நடத்தி வருகிறான். அவளும் லீ ஹார்னும் நாட்டிலேயே மிகச் சிறந்த நடன ஜோடி, அவன் ஒரு கத்தோலிக்கன். அவர்களுக்கு மதம் ஒருபொருட்டல்ல. எனவே (நெல்லியும் மற்றவர்களும், அவள் சிறந்த நடனக்காரி, அவனும் கூட. அங்கு ப்ளாக் பாட்டம், 'ஜிட்டர்பர்க்ஸ் போன்ற நடனங்கள் ஆடப்பட்டன. இவர்களிருவரும் நாட்டிலேயே மிகச்சிறந்த நடனக்காரர்கள்.

ஒருநாள் (ஒரு இரவு) அவள் தடுமாறிக்கொண்டு கூட்டத்திற்கு வந்தாள். அந்த சிறு நெல்லி பீடத்தின் முன்னால் முகங்குப்புற விழுந்தாள். தேவன் அவளை ஆசீர்வதிப்பாராக. அவள் பீடத்தின் முன்னால் விழுந்துகிடந்து, தலையை தூக்கி அழ ஆரம்பித்தாள். அவளுடைய கண்ணீர் கன்னங்களில் வழிந்தது. அவள், "பில்லி" என்றாள் அவளுக்கு என்னைத் தெரியும்). அவள், "நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்" என்றாள்.

நான், “நெல்லி, நீ இரட்சிக்கப்பட முடியும். பெண்ணே, இயேசு உன்னை ஏற்கனவே இரட்சித்து விட்டார். அவருடைய வார்த்தையின் அடிப்படையில் அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்றேன். அவள் அங்கு தங்கியிருந்து, அழுது, ஜெபித்து, உலக காரியங்களுக்கு மறுபடியும் செவி கொடுப்பதில்லையென்று தேவனிடம் வாக்கு கொடுத்தாள். உடனே அவளுடைய ஆத்துமாவில் ஒரு அழகான இனிமையான சமாதானம் குடிகொண்டது. அவள் எழுந்து சத்தமிட்டு, தேவனைத் துதித்து, அவரை மகிமைப்படுத்தினாள்.

அதற்கு பின்பு ஆறு அல்லது எட்டு மாதங்கள் கழித்து, ஒரு இரவு அவள் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண்டிருந்தாள் இப்பொழுது அவள் வாலிபப் பெண், அவளுக்கு அப்பொழுது சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவள் என்னிடம் வந்து, “ஹோப்...” (அது என் மனைவி. அவள் மரித்துவிட்டாள்). அவள், “காண்பதற்கு நான் ஹோப்பையும் ஐரீனையும் போல் இருந்திருந்தால் நலமாயிருக்கும். அவர்கள் உலக காரியங்களில் சிக்கிக்கொண்டதேயில்லை” என்றாள். அவள், “உலகம் நம்மேல் ஒரு அடையாளத்தை போட்டுவிடுகிறது. எனக்கு கரடுமுரடான தோற்றம் உள்ளது. நான் முகவர்ணம் தீட்டிக்கொள்வதைவிட்டு விட்டேன். ஆயினும் என் முகம் கரடுமுரடாக காணப்படுகிறது. அவர்களுடைய முகம் எவ்வளவு இளமையாயும் களங்கமற்றதாகவும் காணப்படுகிறது! நான் அப்படி செய்யாமலிருந்தால் நலமாயிருக்கும்” என்றாள்.

நான், “நெல்லி, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களினின்றும் சுத்திகரிக்கிறது. தேனே, நீ சென்று விசுவாசி” என்றேன்.

வேய்ன் ப்ளட்ஸோ (அவனை உங்களில் அநேகருக்கு தெரியும். அநேக ஆண்டுகளாக அவன் என் ஆப்த நண்பன்). அவன் பயங்கர குடிகாரனாயிருந்தான். என் சகோதரன் எட்வர்ட்டுடன் அவன் இங்கு வந்திருந்தான். அவன் குடித்து தெருவில் விழுந்து கிடந்தபோது, அவனை நான் தூக்கிக்கொண்டு வந்தேன். ஏனெனில் போலீசார் அவனைக் கைது செய்ய முயன்றனர். அவனை இங்கு கொண்டு வந்தேன். அப்பொழுது நான் ஒரு பிரசங்கி. என் பெற்றோருடன் வசித்து வந்தேன். அது எனக்கு விவாகமாவதற்கு அநேக ஆண்டுகட்கு முன்பு. நான் அவனைக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினேன். நான் சாய்வு நாற்காலியில் உறங்கினேன். பிரன்ஹாம் குடும்பம் பெரியது என்று உங்களுக்கு தெரியும் (நாங்கள் பத்து பேர்). எங்களுக்கு நாலு அறைகள் இருந்தன. என்னிடம் ஒரு பழைய சாய்வு நாற்காலி இருந்தது. நான் அதை இழுத்து, அதில் உறங்கினேன். குடித்திருந்த வேய்னை நான் படுக்கையில் கிடத்தினேன். அவனை வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் கிடத்த வேண்டியதாயிற்று. நான் அங்கு படுத்துக் கொண்டிருந்தேன். நான், “வேய்ன், இப்படி செய்வது உனக்கு வெட்கமாயில்லையா?” என்று கேட்டேன்.

அவன், “உ, து, பில்லி, என்னிடம் அப்படி பேசாதே”, என்றான் (சகோ. பிரன்ஹாம் குடிகாரன் உளறுவதைப்போல் பேசி காண்பிக்கிறார் - ஆசி). நான் அவன் மேல் என் கையை போட்டு, “வேய்ன், உனக்காக நான் ஜெபிக்கப்போகிறேன். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக” என்றேன்.

நான் இரட்சிக்கப்பட்டு அப்பொழுது ஏறக்குறைய ஒரு ஆண்டு காலம் தான் ஆகியிருந்தது. அப்பொழுது திடீரென்று

வாடகை காரின் கதவு திறக்கப்பட்டு வேகமாக மூடும் சத்தம் கேட்டது, யாரோ கதவை வேகமாக தட்டி, சகோ. பில், சகோ. பில் என்று கூப்பிடுவது கேட்டது (சகோ. பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை பதினைந்து தடவை தட்டுகிறார் - ஆசி). –

நான், "இது என்ன, யாரோ மரித்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணினேன். நான் கதவினருகே ஓடினேன். என் பழைய துணிகளை எடுத்து, என் பைஜாமாவின் மேல் சுற்றிக்கொண்டு, வேய்னையும் போர்த்திவிட்டு, கதவினருகே ஓடினேன். அது பெண்ணின் குரல் போன்றிருந்தது. நான் கதவைத்திறந்தபோது, இந்த வாலிபப் பெண் அங்கு நின்று கொண்டிருந்தாள். அவள், "உள்ளே வரலாமா?" என்று கேட்டாள். நான், "உள்ளே வா" என்று சொல்லி விளக்கைப் போட்டேன்.

அவள் அழுது கொண்டே, "ஓ, பில், பில்லி, நான் முடிந்து போனேன்,! நான் முடிந்து போனேன்!" என்றாள்.

"என்ன நேர்ந்தது, நெல்லி மாரடைப்பு ஏதாகிலும் ஏற்பட்டதா?" என்று கேட்டேன்.

அவள், "இல்லை, சகோ. பில். நான் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண்டிருந்தேன். உண்மையில் சகோ.பில், உண்மையில் சகோ. பில், நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை, நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை" என்றாள்.

நான், "என்ன நேர்ந்தது?" என்று கேட்டேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நான் அப்பொழுது ஒரு வாலிபன். நான் நினைத்தேன் ......

அவள், "ஓ, சகோ. பில், நான் சின்னா பின்னமாகிவிட்டேன்" என்றாள்.

நான், "அமைதியாயிரு, சகோதரியே, நடந்ததை கூறு" என்றேன்.

அவள், "நான் தெருவின் வழியாக நடந்து ரெட்மென் அரங்கத்தை அடைந்தேன்..." என்றாள் (அங்கு சனிக்கிழமை இரவுகளில் நடனம் நடப்பது வழக்கம்). அவள், "என் உடைகளுக்காக துணி வாங்கிக் கொண்டு திரும்பும்போது, இசையைக் கேட்டேன்," மேலும் அவள், "உங்களுக்கு தெரியுமா?" என்றாள். "நான் ஒருநிமிடம் அங்கு நின்றேன். அது இனிமையாகிக் கொண்டே இருந்தது. அங்கு நின்றால் தவறொன்றுமில்லை" என்று நினைத்தேன்.

அங்குதான் அவள் தவறு செய்தாள் - சற்று நேரம் அங்கு நின்றாள்.

அவள் இசையைக் கேட்டுக்கொண்டேயிருந்தாள். அவள், "ஓ, ஆண்டவரே, உம்மை நான் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர். நானும் நீயும் இந்த இடத்தில் நடன போட்டிகளில் எத்தனையோ விருதுகளை வென்றது. என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த இசை முன்பு என்னைக் கவர்வது வழக்கம். ஆனால் இப்பொழுது இல்லை" என்று நினைத்தாள். ஓ, ஓ! ஓ, ஓ! அது உன்னைக் கவரவில்லை என்றா நினைக்கிறாய்? அது ஏற்கனவே உன்னைக் கவர்ந்துவிட்டது. அவன் உன்னை நடன கூடத்திற்கு அனுப்பினதற்கு அது சமானம். பாருங்கள்?

எத்தனை பேருக்கு நெல்லி சான்டர்ஸை தெரியும்? நல்லது, உங்கள் அனைவருக்கும் என்று நினைக்கிறேன். ஆம், நிச்சயமாக! எனவே அவர்கள்.... அவள் தொடர்ந்து, "என்ன நேர்ந்தது தெரியுமா? நான் அரங்கத்தின் படிகளில்

ஏறிச் சென்றால், ஒரு சிலருக்கு என் சாட்சியை அறிவிக்க முடியும் என்று நினைத்தேன்" என்றாள்.

பார், நீ பிசாசின் எல்லைக்குள் சென்றுவிட்டாய், அதனின்று விலகு! பொல்லாங்கானதாய் தோன்றும் எல்லாவற்றையும் உதறித் தள்ளு!

அவளோ படிகளில் ஏறி சில நிமிடங்கள் அங்கு நின்றாள். முதலாவதாக நடந்தது என்ன தெரியுமா? சில நிமிடங்களுக்குள் ஒரு பையனின் கரங்களைப் பிடித்து நடனமாடத் தொடங்கி விட்டாள். பின்பு அவளுக்கு சுய நினைவு வந்தபோது, அங்கு நின்று, "நான் நிரந்தரமாக இழக்கப்பட்டேன்" என்று அழுதாள்.

அப்பொழுது நான் நினைத்தேன் எனக்கு வேதாகமம் அதிகம் தெரியாது. ஆனால் இயேசு, "என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்" என்று கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்" என்று. வேய்னுக்கும் அப்பொழுது குடிமயக்கம் சற்று தெளிந்து, அங்கு நடப்பதை உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். பாருங்கள்? நான், "பிசாசே, நீ யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது உன்னிடம் கூறுகிறேன். இவள் என் சகோதரி, இவளைப் பிடித்துக்கொண்டிருக்க உனக்கு எவ்வித உரிமையும் கிடையாது, அவள் அதை செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை; அவள் ஒரு நிமிடம் அங்கு நின்றாள் – (அங்குதான் அவள் தவறு செய்தாள். அவளை விட்டு நீ வெளியே வரத்தான் வேண்டும். நான் சொல்வது கேட்கிறதா?" என்றேன்.

கர்த்தர் எனக்குதவி செய்வாராக. (தேவன் நியாயாசனத்தில் உட்காருவார் என்று எனக்குத் தெரியும்). திரையிடப்பட்டிருந்த அந்த கதவு தானாகவே திறந்து மூடத்

தொடங்கினது பம்பிடி, பிளம்பிடி, கா - ப்ளம்ப், கா-ப்ளம்ப், கா-ப்ளம்ப். நான் நினைத்தேன்... அவள், “பில்லி, அங்கே பாருங்கள்” என்றாள்.

நான், “ஆமாம், அது என்ன?” என்றேன் . . . அவள், “எனக்குத் தெரியாது” என்றாள்.

நான் “எனக்கும் தெரியவில்லை” என்றேன். கதவு பம்பிடி-பம்ப், டி - பம்ப் என்று ஓசையுண்டாக்கி, திறந்து மூடிக் கொண்டிருந்தது, “என்ன நேர்ந்தது?” என்று நான் நினைத்தேன். நான் இப்படி பார்த்துவிட்டு, “சாத்தானே, அவளை விட்டுப் போ; இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அவளை விட்டு வெளியே வா” என்றேன். அப்படி நான் கூறினபோது, இவ்வளவு நீளமுள்ள ஒரு பெரிய வௌவால்; அதன் செட்டைகளிலிருந்து நீண்ட ரோமம் தொங்கிக் கொண்டிருந்தது. அது அவள் பின் பக்கத்திலிருந்து ‘விர்ர்ர்ர்’ என்று வேகமாக பறந்து என்னை நோக்கி வந்தது. நான், “ஓ, ஆண்டவராகிய தேவனே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இதனின்று என்னை பாதுகாப்பதாக” என்றேன்.

வேய்ன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து பார்த்தான். அது நீண்ட நிழலைப் போல் அங்கு சுற்றிச் சுற்றி வட்டமிட்டு படுக்கைக்குப் பின்னால் சென்றது. வேய்ன் படுக்கையை விட்டு எழுந்து வேகமாக அடுத்த அறைக்கு ஓடினான்.

நான் நெல்லியை வீட்டுக்குக் கொண்டு சென்றுவிட்டு வந்தபோது அதை காணவில்லை அம்மா போர்வையை உதறிப் பார்த்தார்கள். ஆனால் படுக்கையில் ஒன்றுமில்லை. அது என்ன? ஒரு பிசாசு அவளை விட்டு வெளியேறினது. என்ன நேர்ந்தது? அவள் ஒரு வினாடி அங்கு நின்றாள். அவ்வளவுதான்.

நீங்கள் நிற்கவே வேண்டாம். தேவன் தமது வார்த்தையை உங்கள் இருதயங்களில் ஆழமாகப் பதிக்கிறார். அந்த பட்டயத்தை நீங்கள் எடுத்துக்கொண்டு, வெட்டத் தொடங்குங்கள். அல்லேலூயா "எனக்கு எதற்கும் நேரமில்லை. இப்பொழுது தான் கடந்து வந்தேன். இளைப்பாறுவதற்கு கூட எனக்கு நேரமில்லை" என்று சொல்லுங்கள்.

அந்த தீர்க்கதரிசி, "என் கோலை எடுத்துக்கொண்டுபோய் குழந்தையின் மேல் வை. வழியில் யார் பேசினாலும் மறுமொழி கூறாதே." பிசாசு, "உன் உடல் நிலை எப்படி இருப்பதாக உணருகிறாய் ....? என்று கேட்டால், மறுமொழி கூறாதே. போய்க் கொண்டேயிரு" என்றான்.

பிசாசு சொல்கிறான், "உனக்கு இன்னாரைத் தெரியுமா? அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்பு, புத்தி சுவாதீனத்தை இழந்து விட்டார்கள்" என்று. அவனுக்கு மறுமொழி கூறாதீர்கள், சென்றுகொண்டேயிருங்கள். உங்களுக்கு இன்னாரைப்பற்றித் தெரியாது. அது உனக்கும் தேவனுக்குமிடையே உள்ள விஷயம். அது உண்மை. தேவனை உங்களுக்கு முன்பாக வையுங்கள்.

***செய்தி:*** இதுவரை சண்டையிட்டவைகளில்
மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962

★★★★★

71. அங்கே உட்கார்ந்து என்னையே நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிற சகோதரியே, நீங்கள் கீல்வாதத்தினாலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள், இப்பொழுது உங்கள் விசுவாசம் உங்களை இரட்சித்தது; நீங்கள் வீட்டிற்குச் சென்று சுகமாயிருக்கலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

நீங்கள்... ஐ கொண்டு வருவீர்களா. வாலிபனே, வணக்கம். நான் தேவனுடைய ஊழியக்காரன் என்று நீ விசுவாசிக்கிறாயா? மற்ற அநேக ஊழியக்காரர்கள் இங்கேயிருக்கிறார்கள், ஆனால் நான் அவருடைய ஊழியக்காரனாக இருக்கிறேன். உடனடியாக, அங்கே ஒரு ஆவியானது இந்த வாலிபனிடமிருந்து இழுத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பையன் தொல்லையில் அகப்பட்டுள்ளான், அவன் கடுமையான பிரச்சனையோடு இருக்கிறான். இந்தப் பையன் மனநிலை கோளாறினால் அவதிப்பட்டு வருகிறான். நீ ஒரு மனநிலை மருத்துவமனையிலிருந்து இப்பொழுதுதான் வருகிறாய். அவர்கள் ஏதோவொரு விதமான ஒரு-ஒரு அதிர்ச்சி சிகிச்சையை உனக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறதை நான் காண்கிறேன். அவர்கள் உனக்கு அதிர்ச்சி சிகிச்சையை கொடுத்திருக்கிறார்கள். உனக்கு இயற்கைக்கு மாறான ஒரு பயம் தொடர்ந்து (aphobia) இருக்கிறது: அதாவது, நீ எல்லா நேரமும் உனக்கு முன்பாக ஒரு முகத்தைப் பார்க்கிறாய். அது ஒரு-அது நீ காண்கிற உனது தாயாரின் முகம் தான். உனக்கு விவாகம் ஆகி விட்டது. உனக்கு ஒரு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

கதரா தேசத்து மனிதனிடம் வந்து, அம்மனிதனை விடுவித்தவராகிய இயேசு கிறிஸ்து உன்னை இதிலிருந்து விடுவித்து, அந்த இயற்கைக்கு மாறான பயத்தை உன்னிலிருந்து எடுத்துப் போட்டு, அந்தப் பிசாசை உன்னை விட்டுத் துரத்தும்படி இன்றிரவு இங்கேயிருக்கிறார், நீ சுகத்தோடு உன்னுடைய வீட்டிற்கு திரும்பிச் செல்லலாம். நீ அதை விசுவாசிக்கிறாயா? உனக்காக இதைச் செய்யவே அவர் என்னை அனுப்பியிருக்கிறார் என்று நீ விசுவாசிக்கிறாயா?

72. நீங்கள் உங்கள் தலைகளை தாழ்த்தி பயபக்தியோடு இருங்கள். இது மிகவும் ஆபத்தானதும், அபாயகரமானதுமாய் இருக்கிறது. "உங்கள் தலையை உயர்த்துங்கள்" என்ற என்னுடைய சத்தத்தை நீங்கள் கேட்பது வரையில், உங்கள் தலையைத் தொடர்ந்து தாழ்த்தி வைத்துக் கொள்ளுங்கள். வாலிபனே, இங்கே வா. இந்த ஆசீர்வாதத்தை நான் கேட்கிறதற்கு முன்னால், நான் ஒரு காரியத்தை உன்னிடம் கேட்கப் போகிறேன். அவருடைய ஊழியக்காரனாக எனக்கு நீ கீழ்ப்படிந்து, செய்ய வேண்டுமென்று நான் உன்னிடம் கூறுகிறபடி நீ செய்வாயா? நீ சுகமடையப் போகிறாய். விடுதலையின் நேரம் சமீபமாயுள்ளது. வாலிபனே, இதைச் செய்து கொண்டிருப்பது ஒரு பிசாசு தான். அவன் உன்னை முற்றிலும் பைத்தியம் பிடித்த நிலைக்கு உன்னைத் தள்ளி, உன்னுடைய எஞ்சியுள்ள வாழ்நாட்களில் அதேவிதமாவே உன்னை வைத்திருப்பான், ஆனால் உன்னுடைய சரியான மனநிலைக்கும், சரியான புத்தி தெளிந்த நிலைக்கும் உன்னைத் திரும்பவும் கொண்டு வர தேவனால் கூடும்.

நான் வேறொரு காரியத்தைக் காண்கிறேன். நீ மனநோய் மருத்துவர்களிடம் இருந்திருக்கிறாய். அவர்கள் - யாரோ ஒருவர் உன்னிடம் பேச முயற்சி செய்வதை நான் பார்க்கிறேன், ஆனால் அது (நல்ல) யோசனை அல்ல. உனக்கு அதைக் காட்டிலும் அதிகம் தேவைப்படுகிறது: அதற்கு ஜீவனுள்ள தேவனுடைய வல்லமை அவசியமாயுள்ளது. நான் கூறுவது உனக்குப் புரிகிறதா? உனக்குப் புரியவில்லை என்றால், சற்று நேரத்தில் நீ புரிந்து கொள்வாய். பயபக்தியோடு உன்னுடைய தலையைத் தாழ்த்தி, உன்னை விடுவிக்கும்படியாக தேவனுடைய குமாரனாகிய இயேசுவை தேவன் எழுப்பினார் என்று விசுவாசி.

73. பரலோகப் பிதாவே, இங்கே நின்று கொண்டிருக்கும் இந்த வாலிபன் அருமையான தோற்றம் கொண்ட ஒரு

வாலிபனாயிருக்கிறான், வாலிப மனிதத் தன்மையின் சிற்பமாக இங்கே நின்று கொண்டிருக்கிறான், அவனுடைய வீட்டை சுக்கு நூறாக கிழித்துப் போட்டு, அவனுடைய குடும்பத்தை உடைத்துப் போட்டு, இந்த வாலிபனை பைத்தியம் பிடிக்கும்படி செய்யவே சாத்தான் அவனிடம் வந்திருக்கிறான். ஆனால் ஓ தேவனே, வானங்களையும் பூமியையும் உண்டாக்கினவரே, கிறிஸ்து இயேசு மூலமாய் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரே, நான் இந்த வாலிபனுக்காக விசுவாசமுள்ள ஜெபத்தோடு உம்முடைய ஊழியக்காரனாக வருகிறேன், அவன் இருக்கிற நிலைமையின் காரணமாக அவனாகவே விசுவாசத்தைக் கொண்டிருக்க முடியாது என்பதை சற்று முன்பு அறிந்து கொண்டேன். கர்த்தாவே, உமது ஊழியக்காரனின் ஜெபத்தைக் கேட்டருளும். சாத்தான் அவனிடத்தில் பதுங்கியிருந்து, அவனுடைய வாழ்க்கையை ஒரு துயரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறான், ஆனால் அந்த பைத்தியக்காரனை விடுவித்த கர்த்தராகிய இயேசு, அது இந்த வாலிபனுக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக மோசமாக இருந்தது. இன்றிரவு, உம்மால் இந்த வாலிபனை சுகப்படுத்த முடியும்.

சாத்தானே, இவனைக் கட்டி வைத்திருக்கிற நீ, மனநல மருத்துவர்களிடமிருந்து தப்பித்து விட்டாய்; நீ மருத்துவ சிகிச்சைகளிலிருந்தும் தப்பித்து விட்டிருக்கிறாய்; ஆனால் தேவனுடைய வல்லமையிடமிருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவனை விட்டு வெளியே வா. அவனை விட்டுப் போ.

இப்பொழுது, வாலிபனே, இங்கே பார். அது முடிந்து விட்டது; நீ சுகமடைந்து விட்டாய். இனிமேல் புகைபிடிக்காதே. ஒரு உண்மையான கிறிஸ்தவனைப் போன்று ஜீவி. போ, தேவனைத் துதித்துக் கொண்டும், இரவும் பகலும் அவருடைய துதிகளைப் பாடிக் கொண்டும் இரு. உன்னுடைய

கரங்களை மேலே உயர்த்தி, நீ சுகமடைந்ததற்காக அவருக்கு நன்றி செலுத்து. இப்பொழுது, நீ - நீ நலமாக உணருகிறாய், இல்லையா? இவன் அருமையாக உணருவதாக இந்த வாலிபன் கூறுகிறான். இப்பொழுது, எல்லாம் போய் விட்டது, அது போன போது, ஒரு அசுத்த ஆவி அந்தவிதமாக போனது.

நான் ஒரு மதவெறியன் அல்லவென்று பரலோகத்திலிருக்கிற தேவன் அறிவார், அவரே நியாயத்தீர்ப்பின் நாளிலே நியாயம் தீர்ப்பார். அந்தக் காரியமானது வேகமாக சுழன்ற படி, இந்தப்பையனை விட்டு அந்தத் திசையில் கடந்து சென்றது. அது அவனை விட்டுப் போன போது, வீசும் காற்று, "ஷ்ஷ்ஷ்ஷ்" என்று அவ்விதமாக போவதைப் போன்று கூட அது உணரப்பட்டது. அந்த அசுத்த (ஆவியின்) வல்லமைகள் இந்த வாலிபனை விட்டு அகன்று விட்டது. போ, உன்னுடைய மனைவியிடமும், குடும்பத்திடமும் சென்று, களிகூர்ந்து கொண்டே சந்தோஷமாயிரு. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு.

74. அந்த சீமாட்டியை அழைத்து வாருங்கள். (ஒரு அசுத்த (ஆவி) காரியமானது காணக்கூடிய விதத்தில் யாரோ ஒருவரை விட்டு கடந்து போனதை நான் நீண்ட காலமாக பார்த்தது இதுதான் முதல் தடவை. அது ஒரு வௌவால் (bat) போன்று கடந்து சென்றது, அவ்விதமாக ஒரு பக்கத்திலிருந்து கடந்து போனது) சீமாட்டியே, இங்கே வாருங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம் எல்லாரிடத்திலும் இரக்கமாயிருக்கிறார். அவருடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவின் இரத்தமானது நம்மை மூடி, சகல பொல்லாத வல்லமைகளிலிருந்தும் நம்மைப் பாதுகாப்பதாக. இயேசு

அற்புதமானவர். தேவனே, இரக்கமாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது.

***செய்தி:*** தீர்க்கதரிசியாகிய எலிசா, ஜுலை 23, 1954

★★★★★

அங்கு தன் மனைவியினால் தொல்லை ஏற்பட்ட ஒரு சகோதரன் இருந்தார். அநேக ஆண்டுகளுக்கு முன்பு நான் கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது, அவள் தலையையுயர்த்தினாள். நான் தலை குனிந்திருக்க வேண்டுமென்று அவர்களிடம் கூறியிருந்தேன். அவ்வமயம் மேடையின் மேல் ஒரு ஸ்திரீ இருந்தாள். அசுத்த ஆவி அவளை விட்டுப்போக மறுத்தது. அந்த நேரத்தில்தான் இந்த ஸ்திரீ அவபக்தியாய் தன் தலையை உயர்த்தினாள். அந்த அசுத்த ஆவி மேடையின் மேலிருந்த ஸ்திரீயை விட்டு, இந்த ஸ்திரீயினுள் புகுந்தது. இது நடந்து பதினான்கு ஆண்டுகளாகிவிட்டது. அந்த ஸ்திரீ மோசமான நிலையைய டைந்து, அவளுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டு, செய்யத்தகாத செயல்களைப் புரிந்து வந்தாள். உதாரணமாக, அவள் தன் கணவரை விட்டு வேறொவனை மணந்து கொண்டாள்; அப்படி செய்ததாக நினைவில்லை என்று அவள் கூறினாள்.

மருத்துவர்கள் அவளைப் பரிசோதித்தனர் அதற்கு நீங்கள் என்ன பெயர் சொல்லி அழைக்கிறீர்கள்?... அம்னீஷியாவாக (Amnesia) இருக்குமாவென்று அந்த பெயர் என்னவாயிருப்பினும். டாக்டர், அது சரியென்று நினைக்கிறேன். அது அதுவல்ல, அது ஒரு ஆவி.

***செய்தி:*** இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962

★★★★★

183. இப்பொழுது, இதோ ஒரு சீமாட்டி இருக்கிறார்கள், அவர்களை எனக்குத் தெரியாது, நான் அவர்களை என்னுடைய ஜீவியத்தில் ஒருபோதும் கண்டதேயில்லை. நாங்கள் இருவரும் தேவனுக்கு முன்பாக இங்கே நின்று கொண்டிருக்கிறோம், மரித்துப் போய் விழவும் முடியும், சரியாக இப்பொழுதே பக்கவாதம் தாக்கலாம். நான் கூட்டங்களில் அது சம்பவிப்பதைக் கண்டிருக்கிறேன். அது கூட்டங்களில் சம்பவிப்பதை எத்தனை பேர் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? என்னை ஹிப்னாடிஸம் செய்வதற்காக அந்த ஆள் வந்து, அந்த இரவில் அவன் அங்கே மேலே பால்(கனி)...யில் உட்கார்ந்து கொண்டிருந்ததை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? அவன் அங்கே கீழே வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார். அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான். அது ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்ததாகும், பாருங்கள். அவர்கள் அவனை கட்டிடத்தை விட்டு வெளியே தூக்கிச் சென்றனர். உங்களால் தேவனோடு விளையாட முடியாது. நீங்கள் அதை விசுவாசித்தாக வேண்டும்.

184. ஒரு ஊழியக்காரர் ஒரு சபைக் கூட்டத்தினரைக் கொண்டு வந்தார், வலிப்பு நோயினால் அவதிப்பட்ட ஒரு பிள்ளையினிமித்தம் அவர்கள் தங்களுடைய தலையை தாழ்த்திக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், அந்தப் பிள்ளை தன்னுடைய நாவைத் தொடர்ந்து கடித்துக் கொண்டிருந்தது; அவர்கள் அதனுடைய வாயில் ஒரு குச்சியை வைத்திருந்தனர்... அல்லது, துணிகளைக் துவைத்துக் காயப் போடும் போது, அதை பற்றிப்பிடிக்க வைக்கும் கிளிப்போடு (clothespin), அதில்

ஒரு துணியையும் வைத்து, அதனுடைய வாயில் வைத்திருந்தனர் அது ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்பரோவில் நடந்த சம்பவமாகும். அவன் அவ்விதமாக இந்த நாவைத் தொடர்ந்து கடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான், அப்போது மேடையிலேயே அந்தப் பிள்ளைக்கு சிறிது நேரம் உணர்விழப்பு ஏற்பட்டது. நான், “இப்பொழுது, நீங்கள் எல்லாரும் உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி இருங்கள்” என்று கூறி விட்டு, நான் ஜெபிக்கத் துவங்கினேன். அவர்களோ தங்கள் தலையைத் தாழ்த்தி வைக்கவில்லை. நான் தொடர்ந்து சுற்றிலும் நோக்கிப் பார்த்து, “உங்கள் தலையை உயர்த்தியிருப்பவர்கள், உங்களுடைய தலையை கீழே தாழ்த்தி விடுங்கள்” என்று கூறினேன்.

185. நான் ஜெபிக்கத் துவங்கினேன், அவர்களோ தங்களுடைய தலையைத் தாழ்த்தவில்லை. நான் சுற்றும் முற்றும் திரும்பிப்பார்த்தேன், அங்கே ஒரு ஆள் இவ்விதமாக தன்னுடைய தலையை வைத்துக் கொண்டு பின்னால் உட்கார்ந்து கொண்டிருந்தான், ஏறக்குறைய எட்டு அல்லது பத்து பேர் அவனோடு இருந்தனர், அல்லது அதற்கும் அதிகமான பேர் இருந்தனர். நான், “ஐயா, உம்முடைய தலையை கீழே தாழ்த்தி வையும்” என்றேன்.

அவன், “இது ஒரு பொது இடம், நான் அப்படி செய்ய வேண்டியதில்லை” என்றான்.

நான், “சரி, அப்படியானால், அது உம்மைப் பொறுத்தது” என்று கூறி விட்டு, “பிதாவே, அந்த மனிதனின் நிலையின் நிமித்தமாக இந்த அப்பாவி பிள்ளை அவதிப்பட அனுமதியாதேயும்” என்றேன்.

186. இது சரியா இல்லையா என்று ஆர்கன்ஸாஸிலுள்ள ஜோன்ஸ்போரோவில் இருக்கும் பழைமை நாகரீகமான

வேதாகம வேளை கூடாரமாகிய ஜோன்ஸ்போரோ கூடாரத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் T. ரீட் (Richard T. Reed) அவர்களைக் கேட்டுப்பாருங்கள். லிட்டில் ராக்கிலுள்ள, 505, விக்டர் தெருவைச் சேர்ந்த G. H. பிரௌன் அவர்களைக் கேட்டுப் பாருங்கள், அவர் அங்கே இருந்தார்.

187. அந்த வலிப்பு நோய் அந்தப் பிள்ளையை விட்டு விலகியது, ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்த 28 பேர்... மேய்ப்பரும் அந்த எல்லா 28 பேரும் வலிப்பு நோயை வாங்கிக் கொண்டார்கள், அவர்கள் வாயில் நுரை தள்ளியபடி, சரியாக அங்கே சபையோர் இருந்த இடத்திலேயே தரையில் விழுந்தார்கள். நான் அறிந்துள்ள வரைக்கும், அவர்கள் இன்னும் அதை வைத்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் வந்தார்கள், நான், “எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது, அது ஒரு தேவனுடைய சாபம், எனவே அது உங்களைப் பொறுத்தது. கீழ்ப்படியாமலிருந்தவன் நீ தான். உனக்கு விசுவாசம் இல்லை என்றால், கூட்டத்தை விட்டு வெளியே போகவும், அதைச் செய்ய வேண்டாம் என்றும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டேனே. இப்பொழுது, அது உன்னைப் பொறுத்தது. எனக்கு அதனோடு எந்த சம்பந்தமும் கிடையாது; நான் அந்த பாவத்திற்காக ஜெபிக்க மாட்டேன். இல்லை, ஐயா. அது உன்னைப் பொறுத்தது” என்று கூறி விட்டேன்.

***செய்தி:*** ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை, ஏப்ரல் 28, 1956

★★★★★

49. இப்பொழுது, நண்பர்களே, இதை நான் ஏதோ ஒரு விதமான உளவியல் ரீதியாக கூறிக்கொண்டிருக்கவில்லை. நான் அநேக வருடங்களாக பிசாசுகளுடன் இடைப்பட்டு

சமாளித்துக் கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் அறிவீர்கள். ஆராதனைகள் முடிந்த பிறகு இரவில், சில சமயங்களில் என்ன சம்பவித்துக் கொண்டிருக்கிறதென்பதை, நீங்கள் மாத்திரம் அதை அறிவீர்களானால்.... உங்களுக்கு அது தெரியாது. நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் ஒரு ஆவிக்கெதிராக நிற்கும் போது, நீங்கள் எதைக் குறித்து பேசிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை அறிந்திருப்பீர்களானால் நலமாக இருக்கும். அங்கே அப்படியே நின்று கொண்டு முயற்சித்துக் கொண்டிருக்க வேண்டாம், ஏனெனில் அது எந்த ஒரு நன்மையும் பிறப்பிக்காது. ஆனால் கூறப்போனால் ஒரு பிசாசு உனக்கு கீழ்ப்படிந்து தான் ஆக வேண்டுமென்றால், அது அதை அடையாளங்கண்டுகொள்ளும். நீ எவ்வளவு தான் கூக்குரலிட்டாலும் சரி, நீ எவ்வளவு எண்ணை ஊற்றினாலும் சரி இங்கே இருக்கின்றதைத் தான் சத்தியத்தைத்தான் அது அடையாளங்கண்டு கொள்ளும். அது தான் உண்மை. இயேசு அவனிடம் கூறினார், “வெளியே வா,” என்று.

50. நினைவில் கொள்ளுங்கள், அந்த சீஷர்கள், அவனை வெளியே துரத்த, உதைத்துக் கொண்டும், முறுக்கிக் கொண்டும், முயற்சித்துக் கொண்டுமிருந்தனர். அவர்கள் “ஏன் எங்களால் அவனை துரத்த கூடாமற்போயிற்று?” என்றனர்.

“காரணம் உங்கள் அவிசுவாசமே” என்றார்.

51. அவர், “அவனை விட்டு வெளியே வா” என்றார். அந்த பையன் கீழே விழுந்தான். அவன் எப்பொழுதுமே கொண்டிராத ஒரு அதிகமான வலிப்பு நோயின் திடீர் எழுச்சியைக் கொண்டிருந்தான். பாருங்கள்? பாருங்கள், அவைகள் அதிகாரத்தை அடையாளங்கண்டு கொள்கின்றன.

52. பவுல் பிசாசுகளைத் துரத்துவதைக் கண்ட அந்த அலைந்து திரிந்து கொண்டிருந்த அந்த பையன்களை

கவனியுங்கள். அந்த ஆசாரியனின் மகன்கள், அவர்கள் “நாமும் அதே காரியத்தைச் செய்ய முடியும்” என்றனர், யாரோ ஒரு ஆசாரியனின் மகன்கள். ஆகவே அவர்கள் சென்று “எங்களால் பிசாசுகளை வெளியே துரத்த முடியும்” என்றனர்: அப்போஸ்தலர் 19ம் அதிகாரம் - காக்காய் வலிப்பு திடீர் எழுச்சியைக்கொண்டிருந்த அந்த மனிதனிடம் அவர்கள் சென்று, “இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்கு கட்டளையிடுகிறோம், அவனை விட்டு வெளியே வா” என்றனர். அந்த பிசாசு கூறினது... “இப்பொழுது, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் நாமத்தில் ...”

53. அந்த பிசாசு “இப்பொழுது, இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார்?” என்றது. ஆனால் என்ன சம்பவித்ததென்று உங்களுக்கு தெரியும்; அது அந்த மனிதரின் மீது பாய்ந்து, அவர்கள் துணிகளை கிழித்து போட்டது, மேலும் அவர்களுக்கே அந்த காக்காய் வலிப்பு நோய் வந்தது, அவர்கள் தெருக்களில் ஓடினார்கள்.

54. அந்த அதே பிசாசுகள் இன்றைக்கும் ஜீவித்துக் கொண்டிருக்கின்றன.

***செய்தி:*** பிசாசியல் #1, ஜுன் 8, 1953

★★★★★

ஒரு நிமிடம், அது இந்த பெண் அல்ல. இப்பொழுது, ஒரு க்ஷணம், இப்பொழுது ஒவ்வொருவரும் பயபக்தியாயிருங்கள். சாத்தான் ஏதோ ஒன்றை செய்ய முயன்றான். இதோ அது. கட்டி, கட்டி, உங்கள் இருவருக்கும் இருக்கின்றது. அது சரி. உங்களுக்கும் கட்டி இருக்கின்றது; அவளுக்கும் கட்டி இருக்கின்றது, ஆகவே ஒருவரை நோக்கி ஒருவரிடம் பிசாசு உதவிக்காக கூச்சலிடுகின்றது. ஆனால் பரிசுத்த ஆவியானவரும் சத்தமிடுகின்றார். நீங்கள் யாரை

விசுவாசிக்கப் போகின்றீர்கள், அவர்? சரி. ஸ்திரீயே அந்த கட்டிலிலிருந்து எழுந்து கொள். படுக்கையிலிருந்து எழும்பும். அதை விட்டெழுந்து விசுவாசி. இப்பொழுது அவரை விசுவாசித்துக் கொண்டே செல். ஆமென்.

***செய்தி:*** கடல் பயணத்தில் சாட்சி, மார்ச் 7, 1964

★★★★★

நம்முடைய கர்த்தராகிய இயேசுவால் காசநோயையோ (TB), எதையுமோ எடுத்துப் போட முடியுமானால், அது அவருக்கு அவ்வளவு எளிதாக உள்ளது. அது சரி அல்லவா? நீர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த போதே, சுகமடைந்து விட்டீர், அந்தக் காசநோய் உம்மை விட்டுப் போய் விட்டது. எனவே நீங்கள் களிகூர்ந்தபடியே உங்கள் பாதையில் சென்று, “தேவனுக்கு நன்றி” என்று கூறுங்கள். ஆமென்.

ஆமென். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

இப்பொழுது, இதோ இரண்டு ஆவிகள் ஒன்று மற்றொன்றை அழைத்துக் கொண்டிருக்கின்றன. என்னுடைய அருமையான கூட்டத்தாரால் மாத்திரம் இந்த பரிமாணத்திற்குள் இருந்து இதைப்பார்க்க முடிந்திருக்க வேண்டும் என்பதே என்னுடைய - என்னுடைய ஒரே விருப்பமாக உள்ளது. அங்கே தன்னுடைய கரங்களைக் குறுக்காக வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கும் அந்தப் பெண்மணி அவதிப்பட்டு கொண்டிருக்கும் அதே வியாதியால் தான் இங்கே நின்று கொண்டிருக்கும் இந்தப் பெண்மணியும் அவதிப்படுகிறாள், சரியாக அதேவிதமாகவே. இதோ ஒரு இருண்ட வரி உள்ளது. ஏனென்றால் இந்தப் பெண்மணியின் மேல் இருக்கும் ஆவியானது இந்த ஆவியை நோக்கி உதவிக்காக கூப்பிட்டு கொண்டிருக்கிறது.

இவை இரண்டுமே ஒரே வியாதி தான்: இரண்டுமே கீல்வாத நோய் தான் (arthritis). இப்பொழுது நீ உன்னுடைய பாதையில் போகலாம். உன்னுடைய கைக்குட்டையை வைத்திருக்கும் சீமாட்டியே, உன்னுடைய காலூன்றி எழுந்து நில். அங்கே தான் காரியம். அது உன்னை விட்டுப் போய்விட்டது. இப்பொழுது, உன்னுடைய பாதையில் களிகூர்ந்தபடியே சென்று, சந்தோஷமாயிரு.

***செய்தி:*** மிக இருண்ட வேளை, அதற்குப் பிறகு இயேசு வருகிறார், நவம்பர் 14, 1955, பத்தி எண் 109

★★★★★

இங்கு ஒரு அழகான காட்சி இருக்கிறது. அசுத்த ஆவி ஒரு மனிதனை விட்டு போகிறதை குறித்து இயேசு சொன்னதை கவனிப்பீர்களானால், அவர் ஒருபோதும், “அந்த மனிதனிலிருந்து அந்த அசுத்த ஆவி துரத்தப்படும் போது” என்று சொல்லவில்லை. ஆனால் அது சுயமாய் அவனை விட்டு போகும் என்றால்... அந்த அசுத்த ஆவி தானாக ஒரு மனிதனைவிட்டு புறப்பட்டு போகும் என்றால், அது திரும்பவும் அந்த மனிதனிடத்திற்கு வரும். அப்போது அது குடியிருந்த அந்த வீடு, காலியாய், அலங்கரிக்கப்பட்டிருப்பதை காணுமாகில் உடனே போய்மற்ற ஏழு பிசாசுகளையும் பேய்களையும், அசுத்த ஆவிகளையும் அழைத்து வந்து இந்த மனிதனுக்குள் புகுந்துவிடும். அப்போது அந்த மனிதன் கடைசியாக இருந்த நிலையை காட்டிலும் ஏழுதரம் மோசமாக இருப்பான்.

கவனித்தீர்களா, அந்த பிசாசு சுயமாய் வெளியே போய் மறுபடியும் சுயமாய் திரும்பிவருகிறது. இப்பொழுது அந்த பிசாசு திரும்பவும் வரும்போது அந்த வீடு நிரப்பப்பட்டிருக்கும் என்றால் அது உள்ளே வருவதற்கு

வாய்ப்பில்லாமல் போகும். ஆனால் அது பெறுக்கப்பட்டு, அலங்கரிக்கப் பட்டிருப்பதைக் காணும்போது...

***செய்தி:*** 63-08-03M முதலீடுகள், அகஸ்டு 3, 1963

★★★★★

49. இயேசுவின் காலத்தில் நீங்கள் யார் பக்கத்தில் இருந்திருப்பீர்கள். பாருங்கள், இப்பொழுது .... இப்பொழுது நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கை, அக்காலத்தில் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள் என்பதை பிரதிபலிக்கிறது. ஏனெனில் இப்பொழுது நீங்கள் அதே ஆவியைக் கொண்டவர்களாக இருக்கிறீர்கள். இப்பொழுது யார் பக்கத்தில் இருக்கிறீர்களோ, அதே பக்கத்தில் அப்பொழுதும் இருந்திருப்பீர்கள். ஏனெனில் இப்பொழுது உங்களுக்குள் இருக்கும் அதே ஆவிதான் அன்று ஜனங்களுக்குள் இருந்தது.

50. பாருங்கள், பிசாசு தன் ஆவியை எடுத்துக்கொள்வதில்லை. அது ஒரு மனிதனிலிருந்து வேறொரு மனிதனுக்குள் செல்கிறது. தேவனும் தமது ஆவியை எடுத்துக் கொள்வதில்லை. அது ஒரு மனிதனிலிருந்து வேறொரு மனிதனுக்குள் செல்கிறது. எனவே எலியாவின் மேலிருந்த அதே ஆவி எலிசாவின் மேல் வந்தது. அது யோவான் ஸ்நானனின் மேல் வந்து தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் மேலிருந்த பரிசுத்த ஆவி சீஷர்களின் மேல் வந்து, இப்படி வழிவழியாக, இப்பொழுதும் ஜனங்களின் மேல் தங்கியுள்ளது. பாருங்கள், தேவன் தமது ஆவியை எடுத்துக் கொள்வதில்லை.

***செய்தி:*** கிறிஸ்துவினால் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுல், ஜூலை 17, 1963

★★★★★

60. நாம் காண்கிறதென்னவென்றால், அந்த ஜனங்கள் இதை செய்கிற காரணத்தால், மேலும் இந்த பெரிய விரோதங்கள் போன்றவைகளும் - இதை சாத்தான் ஆளுகைச் செய்யும் வரையில் அங்கே யுத்தங்களும், தொல்லைகளும் இருக்கத்தான் போகிறது. மத்தேயு 24-ல் "நீங்கள் யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்" என்று இயேசுவானவர் சொன்னார்.

61. ஏன்? உலகத்தின் அதிபதி, சாத்தான், தேசத்தின் பலமாய் இருப்பவனின் நிமித்தமே! இங்கே ஒரு தேசத்தின் ஆவியுண்டு. இதோ ஒரு தேசத்தின் ஆவி, இது பிசாசுகளாயிருக்கிறது. அவர்களால் ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ முடியவில்லை.

62. நாம் நாய்கள் இழுக்கும் வண்டியில் போவோமே! அங்கே மேலே எஸ்கிமோ தேசத்திலே, வடக்கு அலாஸ்கா மற்றும் இன்னும் மேலே வடக்கு மாகாணங்கள் சுற்றிலும், அங்கே எங்கள் வழிக்காட்டியானவன், Huskies என்று அழைக்கப்பட்ட நாய்களை ஓய்வு நேரத்தில் அவிழ்த்து கட்டி வைக்கும் போது, அவன் ஒன்றை இங்கேயும். அடுத்ததை அங்கேயுமாக கட்டுவான். "ஏன் இதை நீ செய்கிறாய்?" என நான் கேட்டப் போது, அவன் "அவைகள் பிசாசினால் அவ்வளவாய் நிறைந்திருப்பதால் அவைகள் ஒன்றையொன்று கொன்று விடும்" என்றான்.

63. அப்படியே சொல்ல வேண்டும், அவைகள் நினைப்பது எல்லாம் அதுதான். சரிதான், அதுதான் பிசாசு, உங்களுக்கு புரிகிறதா? அவன் ஒரு கொலைக்காரன், பிசாசுகளும் கூட, பிசாசுகளுடன் சண்டைப் போடுகின்றன. பார்த்தீர்களா! அவைகள் எப்பொழுதும் ஒன்றோடொன்று சண்டைப் போடுகின்றன. ஆனால் தேவன், முழுவதுமே அன்பாயிருக்கிறார். எனவே, நீ ஒருவரையொருவர்

நேசிப்பதைக் காட்டிலும் வேறெதுவும் செய்ய முடியாது. ஆகவே நீங்கள் பாருங்கள், இந்த கொள்கை முழுவதுமாக மறுபடியும் இப்படியே திரும்பி அந்த ஆவிகளின் அடிப்படையில், ஆதி காலத்துக்கு திரும்புகிறது. ஆதியாகமம் வித்துக்களின் அதிகாரமாயிருக்கிறது. இன்றைக்கு இந்த பூமியில் நமக்கு உண்டாகி இருக்கிறவைகள் எல்லாம் அது உற்பத்தி செய்கிறது.

***செய்தி:*** வெற்றியின் நாள், ஏப்ரல் 21, 1963

★★★★★

30. அது என்ன? அது உண்மையாக ஒரு வல்லமை! தேவன் தேவனாயிருக்கிறார், சாத்தான் சாத்தானாயிருக்கிறான். நான் முதலில் தொடங்கின போது, நாள்தோறும் ஆலோசியாமல் அவனை சந்திப்பது வழக்கம். பிசாசு இல்லையென்று என்னிடம் கூற வேண்டாம். எனக்கு அதைக் காட்டிலும் அதிகம் தெரியும். அவனுடன் நான் நாள்தோறும் சண்டையிட வேண்டியதாயுள்ளது. எனவே பிசாசு என்று ஒருவன் இருக்கிறான் என்று எனக்குத் தெரியும். அவனைச் சந்திக்க நீங்கள் பயிற்சி பெறவேண்டும் - மனோதத்துவ பயிற்சி அல்ல, கல்வி பயிற்சி அல்ல, பரிசுத்த ஆவியானவரின் மூலம் பயிற்சி பெற வேண்டும். அதை வெளிப்படுத்த தேவனுடைய வார்த்தையிலுள்ள அவருடைய வல்லமை. உங்கள் சத்துருவை அறிந்து கொள்ளுங்கள். ஓ, அவன் எவ்வளவு கொடூரமானவன்!

***செய்தி:*** போட்டி, டிசம்பர் 31, 1962

★★★★★

17. நான் அந்த இரவு ஓட்டலுக்கு சென்றேன், என் சகோதரர் டோனியும், என் சிறிய மகன் பில்லியும் ஓட்டலுக்குள் சென்றனர். அது ஏறக்குறைய காலை 2

மணியாக இருந்தது. நான் படுக்கையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தேன், நான் அப்பொழுதுதான் உறங்கச் சென்றிருந்தேன், நான் இரவில் அதிகம் தூங்குவது கிடையாது, இரவில் எப்போதும் ஜெபித்துக்கொண்டிருப்பேன்.

இரவுநேரத்தில், காலை நேரத்துக்கு சற்று முன்பு எல்லா பிசாசுகளின் வல்லமைகளும் கிரியை செய்வதை நிறுத்திவிடும் போது (ஓய்ந்துவிடும்போது). அவைகள் சுற்றித்திரியாத (உலவாத) போது, அந்த நேரத்தில்தான் பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில் உள்ளே கடந்து வந்து பேசுகிறார். நீங்கள் ஜெபிக்க விரும்பினால், அதிகாலையில் (ஜெபிக்கச்) செல்லுங்கள்; அதிகாலையில் எழுந்திருங்கள்.

**_செய்தி:_ தூதனும் கட்டளையும், ஆகஸ்டு 21, 1950**

★★★★★

249. சகோதரன் ஒரு நாள் ஒரு சொப்பனத்தைக் கண்டதாகக் கூறினார். அங்கே ஒரு சிறு பொடிப் பிசாசு நின்று கொண்டிருந்ததைக் கண்டாராம். அந்த சிறு பிசாசு மேலும் கீழும் குதித்துக்கொண்டிருந்தது. அவன் "பூ..." (Boo) என்றான். அப்பொழுது இவர் பின்புறமாகக் குதித்தார். அவர் பின்புறமாகக் குதித்த ஒவ்வொரு சமயமும் இவர் சிறியவராகிவிட்டார். அந்தப் பிசாசு பெரிதாக வளர்ந்தான். ஆகவே பிசாசு "பூ..." (Boo) என்று கூச்சலிட்டான். இவர் பின்புறமாகக் குதித்தார். அப்பொழுது இவர் அவனை சண்டையிட வேண்டுமென்று அறிந்திருந்தார்.

250. ஆகவே அவர், "நான் ஒரு நாற்காலி அல்லது ஏதோ ஒரு பொருளை எடுக்க வேண்டும்" என்று நினைத்தார். அப்பொழுது வேதாகமம் இருப்பதைப் பார்த்தார். மேலும் பிசாசு "பூ..." (Boo) என்று கூச்சலிட்டான். அப்பொழுது இவர்

அவனைப் பார்த்து "பூ..." (Boo) என்று திரும்பிச் சொன்னார். அப்பொழுது பிசாசு உருவத்தில் சிறியவனாக ஆரம்பித்தான். மேலும் இவர், "பூ.பூ.பூ.பூ.பூ." என்று சத்தமிட்டு அவனை அடித்து கீழே தள்ளினார்.

251. அது தான் காரியமாகும். அந்த தேவனுடைய வார்த்தை. அவன் "பூ ......." என்று கூச்சலிடும்போது நீ திரும்பி "பூ....." என்று கூச்சலிடு. அவன் "நீ வியாதியாயிருக்கிறாய்" என்று கூறும் போது, நீ, "எழுதியிருக்கிறதே; அவருடைய தழும்புகளால் நான் குணமாகிவிட்டேன்" என்று கூறு. ஆமென். மகிமை, நான் பக்தியாய் உணருகிறேன். இன்னும் நள்ளிரவு கூட ஆகவில்லை. இன்னும் பக்தியாக உணருகிறேன். ஆமென்.

***செய்தி:*** தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுதல், ஜுன் 7, 1962

★★★★★

ஓ, என்னே! அவர் என்ன செய்தார்? அவர் தேவனுடைய வார்த்தையினால் அவனைத் தோற்கடித்தார். பிசாசின் உபாயமே நீங்கள் தேவனுடைய வார்த்தையை அவிசுவாசிக்கும்படி செய்வதாகும். ஆனால் தலைமை அதிபதியோ தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு அதை செய்யும்படி நமக்குக் கட்டளையிட்டுள்ளார். "என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்."

ஓ, அவர்களுடைய தலைமை அதிபதியாகிய சாத்தான் இந்த ஸ்தாபனங்களில் சில, அவனுக்கு விரிந்த குளம்புகள் உள்ளதென்றும், விரிந்தவால் உள்ளதென்றும் உங்களை நம்பச் செய்வார்கள். அதை நம்பாதீர்கள், அப்படி இல்லவே இல்லை. அவன் அப்படி இல்லை. இல்லை, ஐயா, சகோதரனே! அவன் தந்திரமுள்ளவன். அவன் காண்பதற்கு அப்படியுள்ளதாக நம்ப

வேண்டாம். உங்களை பயமுறுத்த அவர்கள் அப்படி செய்கின்றார்கள். அது பிசாசு அல்ல. முதலாவதாக பிசாசுக்கு குளம்பு கிடையாது. நான் நம்ப மாட்டேன். அவன் ஒரு ஆவி. பிசாசு ஒரு ஆவி. அவர்கள் சித்தரிப்பது போல் அவனுக்கு விரிந்த குளம்புகளும் மற்றவைகளும் கிடையாது. இல்லை, இல்லை! ஆனால் அவன் ஞானமுள்ளவன். அவன் உண்மையாகவே ஞானமுள்ளவன், நன்கு கல்வி பயின்றவன் (எப்பொழுதும் அப்படித்தான்), உலகப் பிரகாரமான ஞானத்தில் கைதேர்ந்தவன், ஓ, ஆமாம்! அவன் அழகுள்ளவன். அவன் தனது சேனையை உலகப்பிரகாரமான ஞானத்தின் அடிப்படையில் ஒன்று சேர்த்திருக்கிறான். சகோதரனே, நீங்கள் பேசும் போது கவனமாயிருக்க வேண்டும். அற்புதங்களின் நாட்கள் கடந்துவிட்டன" என்று கூறும் ஒருவரை நீங்கள் சந்திக்கும்போது, நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதைக் குறித்து கவனமாயிருங்கள்.

பிசாசுக்கு விரிந்த குளம்புகள் கிடையாது. சகோதரனே, அவன் வேதசாஸ்திர கல்லூரியிலிருந்து வெளிவந்து, மெருகேற்றப்பட்டவன். அவன் கல்வியறிவுள்ளவன் "பி.எச்.டி, எல்.எல்.டி, க்யூ.யூ. எஸ்.டி போன்ற பட்டங்கள். பாருங்கள்? அவன் அதிக கல்வியறிவுள்ளவன். அவன் ஞானமுள்ளவனா? நிச்சயமாக. சர்ப்பமானது எல்லாவற்றைப் பார்க்கிலும் "தந்திரமுள்ளதாயிருந்தது. 'தலைமயிரை கீழே வாரி விட்டுக்கொண்டு, 'கோட்டில் ஒரு சுருக்கமும் கூட இல்லாமல், சாமர்த்தியமுள்ளவன் - அவனால் இயன்றவரை ஞானமுள்ளவனும் சாமர்த்தியமுள்ளவனுமாயிருக்கிறான், அது உண்மை.

நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதை உறுதியாய் அறியாமல், அவனுடன் விளையாட வேண்டாம். அது உண்மை. ஓ, ஆனால் அவனுடைய பழைய உபாயம்

என்னவென்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவன் என்ன செய்ய முயல்கிறான் என்று நமக்குத் தெரியும் - நாம் தேவனுடைய வார்த்தையை அவிசுவாசிக்கும்படி செய்ய அவன் முயல்கிறான். அவனுக்கு விரிந்த குளம்புகள் கிடையாது. இல்லை! இல்லை! இல்லை!

அவனுக்கு விரிந்த குளம்புகள் இல்லையானால், அவன் வேறெதாவதாக இருக்க வேண்டும். அவன் தந்திரமுள்ளவன், ஞானவான், கல்வி கற்றவன், ஒழுங்காக அமைத்துக் கொண்டவன் (organized). சகோதரனே, அவனுக்கு தன் சேனை உண்டு. எனவே ....

***செய்தி:*** இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962

★★★★★

நீங்கள் யுத்தத்தை ஒழுங்கு செய்யும்போது ....... பிசாசு இன்று காலை ஒவ்வொருவருடைய இருதயத்திலும் அமர்ந்திருக்கிறான். அவன் இச்சிறுமியின் இருதயத்தில்அமர்ந்திருக்கிறான்; அவன் உன் இருதயத்தில் அமர்ந்திருக்கிறான். அவன் சுற்றிலும் எல்லாவிடங்களிலும் அமர்ந்திருக்கிறான். அவன், "ஓ, அவர்கள் முன்பு முயற்சி செய்ததை நான் கண்டிருக்கிறேன்; நான் முன்பு கேட்டிருக் கிறேன்" என்பான். அவனைத் துரத்துங்கள். அவ்வளவுதான், அவனை வெளியே துரத்துங்கள். நாம் படித்த வேத பாகத்தில் என்ன கூறப்பட்டுள்ளது? அவன் கீழே தள்ளப்பட்டான் என்று. அது உண்மை. அவன் தள்ளப்பட்டான்.

***செய்தி:*** இதுவரை சண்டையிட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962

★★★★★

85. தேவனைப் பின்பற்றும்படிக்கு நாம் தாமே எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

“இப்பொழுது, எனக்கு ஆதாயமாக திரும்ப என்ன கிடைக்கும்?” நாம் எதையும் எதிர்பார்ப்பதில்லை.

86. சிலசமயங்களில் ஊழியக்காரர்களாகிய நாம் மனந்திரும்புகிறவர்களுக்கு சிறிது அதிகமாக மிருதுவானவை களைக் காண்பிக்கின்றோம். “ஓ, கிறிஸ்துவண்டை வாருங்கள். எல்லாக் காரியமும் அருமையாக இருக்கும்.” ஆனால் நீங்கள் பாருங்கள். காரியமானது அப்படியன்று, எல்லாக்காரியமும் மலர்ப்படுக்கையைப் போல அருமையாக, மிருதுவாக இருக்கும் என்று கூறுகிறோம். ஏனென்றால், எந்த கிறிஸ்தவனும்....

87. வேதாகமம், “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கிறவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்” என்று கூறுகின்றது. ஆகவே கிறிஸ்துவுக்காக நீங்கள் துன்பங்கள் படவில்லையெனில் அப்படியானால் ஏதோ தவறு ஒன்று இருக்கின்றது.

88. பிசாசு உங்களை தொடர்ந்து வரவில்லையெனில் அவன் உங்களைப் பிடித்து விட்டான் என்று அர்த்தம். அவ்வளவு தான். ஏனென்றால் அவன் உங்கள் பின்பாக வந்து கொண்டிருக்கும் வரைக்குமாக அவன் இன்னுமாக உங்களைப் பிடிக்கவில்லை என்று தான் அடையாளமாகும். ஆனால் அவன் உங்களைப் பின்தொடர்ந்து வரவில்லையெனில் அவன் உங்களைப் பிடித்து விட்டான் என்று தான் அடையாளமாகக் காண்பிக்கின்றது. ஆமாம். ஆகவே நினைவில் கொள்ளுங்கள், அவன் உங்களை தாக்கிக் கொண்டே இருக்கும் வரைக்குமாக, இன்னுமாக நீங்களும் சில அடி தூரம் தாவிக்கடந்து அவனுக்கு முந்தி

இருக்கின்றீர்கள், ஆகவே அப்படியே சென்று கொண்டிருங்கள்.

89. “அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கிறவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்.” அவர், “சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே” என்று கூறினார். அது சரி.

***செய்தி:*** எல்லாவற்றையும் விட்டுவிடுதல், ஜனவரி 23, 1962

★★★★★

*(குறிப்பு: இந்தப் புத்தகத்தின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*